Sangathamil
# சங்கத்தமிழ்
யாதும் ஊரே யாவரும் கேளிர்
குரல் - 33 | சர்வதேச மின் செய்தித்தாள் | 15 செப்டம்பர் 2022

## 35ஆம் ஆண்டு வீரவணக்கம்
35th Year Veeravanakkam



"மக்கள் புரட்சி வெடிக்கட்டும்
சுதந்திர தமிழீழம் மலரட்டும்"

**கேணல் சங்கர்**
வைத்தியலிங்கம் சொர்ணலிங்கம்
வல்வெட்டித்துறை, யாழ்ப்பாணம்
18.09.1949 - 26.09.2021

SEPT 26 2022

ஈகைச்சுடர்
Lt. Col. Thileepan
## லெப். கேணல் திலீபன்
இராசையா பார்த்தீபன்
[ ஊரெழு, யாழ்ப்பாணம் – 27.11.1963–26.09.1987]

இந்திய அரசிடம் ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து, தமிழ் மக்களுக்கு வழங்கிய உறுதிமொழிகளை இந்திய அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும் என்று கோரி சாகும் [15.09.1987–26.09.1987] வரை உண்ணாநோன்பு இருந்து ஈகைச் சாவடைந்தார்.

Martyr died on a hunger strike till death (15.09.1987-26.09.1987) demanding five demands from the Government of India to fulfill the promises made to the Tamil people.

தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்
The thirst of the Thamils is the Homeland of Thamileelam

சங்கத்தமிழ்

தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்

NISHANTHAN LAW OFFICE
SERVICES
- Purchasing a Residential Property
- Selling a Residential Property
- Residential Mortgage Refinancing
- Wills and Powers of Attorney
NOTARY SERVICES
NEW LOCATION
Umananthini Nishanthan
Barrister, Solicitor & Notary Public
416-289-9229
nishanthanlaw@bellnet.ca
www.nishanthanlaw.com
39 Devonshire Ave., Markham ON L3S 3P2
McCowan Rd & Devonshire Ave. (Between Steeles & Denison St)

Residential, Commercial, Refinance
ALL YOUR MORTGAGE NEEDS
Ari Paramalingam
Mortgage Agent
T: 905.781.1356
F: 1.888.653.5161
E: arikaran@hotmail.com
MORTGAGE ALLIANCE
402-2 Country Court Blvd
Brampton, ON L6W 3W8

Ideal Auto Tech Ontario
For all your vehicle repair and Service needs
www.idealautotech.com
All Mechanical Services - Muffler & Tire Works
Wheel Alignment - Engine & Transmission Repairs
To Wing Services
We do Vehicle Appraisal & Safety Inspection
T: 416 752 LUBE (5823) C: 647 219 5922 F: 416 752 0457
1815 Lawrence Ave., East, Unit 02, Scarborough
(Pharmacy & Lawrence) ON M1R 2Y3

LONGO LAWYERS
Our Clients aren't just a file, each is a life.
We specialize in handling serious and life-changing personal injury claims resulting from all types of accidents. Our team of experienced trial lawyers is dedicated to providing the highest possible standard of legal services. If English isn't your first language, we have members of our team that are fluent in Tamil.
Shenthuran Subramaniam
B.Sc., M.B.A., J.D.
Personal Injury Lawyer
Cell: 647.992.2417
TP: 416.800.4232 Fax: 416.800.6247
Toll Free: 1.844.800.4232
4950 Yonge St, Suite 401, Toronto ON M2N 6K1

A TAMILAN CARPET CLEANING PROFESSIONAL STEAM
CAR & VAN
உங்கள் வீடு தேடி வந்து செய்து கொடுக்கப்படும்
வீடுகள், கொண்டோக்கள், வாடகை வசிப்பிடங்கள், வீட்டின் படிகள், தரை விரிப்புகள், சோபாகள், மெத்தைகள் வாகன உட்புறம்...
இந்த விளம்பரத்தாலோ எந்த வேலைகளும் நிரந்தரமாகாது
416.831.6343
416.265.6825
கார்த்திகேசு செல்வம்
Karthigesu Selvam

RAMACHANDRAN LAW
Professional Corporation
Family Law
Real Estate
Civil Litigation
Wills & Estates
Corporate Law
BARRISTER & SOLICITOR
VITHU RAMACHANDRAN
J.D., B.Com (Honours) | LSO 70103E
416.902.8225
Vithu@Ramachandran.Law
WWW.RAMACHANDRAN.LAW
908-305 Milner Ave. Toronto ON M1B 3V4

அழகிய மனை நிறைவான வாழ்வின் தொடக்கம்! வீடு வாங்க விற்க அல்லது அது தொடர்பான விபரங்கள் அறிய இலவச ஆலோசனைக்கு அழையுங்கள்
Higher Standard Agents... Higher Results!
HomeLife Landmark Realty Inc. Brokerage
Independently Owned and Operated
Parithi Sinnathamby
Sales Representative
416-904-7444
pari.sinnathamby@gmail.com
7240 Woodbine Ave., Suite 103, Markham, ON. L3R 1A4 Tel: 905-305-1600 Fax: 905-305-1609

MT CPA CA
MAYURAN THARMABALAN
PROFESSIONAL CORPORATION
CHARTERED PROFESSIONAL ACCOUNTANT
- AUDIT
- REVIEW ENGAGEMENT
- NOTICE TO READER
- BUSINESS ADVISORY
- CONTROLLERSHIP SERVICES
- CORPORATE TAXES
- PERSONAL TAXES
- FINANCIAL PLANNING
- CRA AUDITS
- PAYROLL
- BOOKKEEPING
Mayuran Tharmabalan, CPA, CA, LPA
647-748-6344 647-989-6298
647-748-6444 www.tharmabalan.ca
Suite 402 - 1585 Markham Rd, Scarborough ON M1B 2W1
A LICENSED PUBLIC ACCOUNTING FIRM

K.S PAINTING & HARDWOOD
PROVINTING THE BEST SERVICE
NIRANJAN SELVARAJAH 647.406.7706
www.kspaintingandhardwood.com

GRAND OFFER
this Offer Only December 31st to January 31st, 2022.
MAGAZINES
7" x 5" Size, 100 copys
Inside 32 Pages, B&W 20lb
with colour glossy cover
c $ 310.00
+ Graphic Extra
Banners
Large Format Digital Printing
Design Only
c $ 9.99 / sq. ft (c$ 34.99 / h.)
1000 Business Cards
with out design c $ 59.99
One Side - 16pt Card Stock
with out design c $ 29.99
One Side, 10pt Card Stock
We print all kind of products
Call Me : Silver Print House - 647 712 1266

வீடு வாங்குதல், விற்றல், குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ் ஒழுங்குகள் மற்றும் இலவச ஆலோசனைகளும் வழங்கப்படும்
Nesan Chathanantham
Broker
Dir: 416-827-7343
Email: CCN5@hotmail.com
RE/MAX COMMUNITY Realty Inc. Brokerage
1265 morningside Ave Suite #203
Toronto, Ontario M1B 3V9
Tel: 416.287.2222 | Fax: 416282.4488

JRS AUTO TECH
ALL MECHANICAL & ELECTRICAL REPAIRS
OPEN FROM 9 AM - 9PM
AC $99.99 +
OIL CHANGE $39.99 +
USED TIRE $49.99 +
BRAKES JOB $249.99 +
Subas: 416-206-9489 Office: 416-628-4399
2655 Lawrence Ave., E, Unit 05, Scarborough ON M1P 2S2
JRSAUTOTECH@HOTMAIL.CA

விளம்பரம்
உங்கள் வணிகத்தின்
ஒரு முதலீடு
தொடர்பு கொள்ளுங்கள்
437.345.4203

Annai's PRAGATI SIDDHA HERBAL CLINIC
A total wellness according to Natures Way!
Treatment based on Ancient Siddha Philosophy of Healing.
Master Healer
PREMILA.S
Hereditary Genetic Siddha Practitioner (Royal Physician Treatment),
Spagyric Alchemist (CAN)
Alchemist (IND),
Natural Medicine Practitioner© (CAN)
Canada, Europe & India
TEL: 1 647-278-3100
Email: pragatishc@gmail.com | Web: www.pragatisiddha.com

அறிவித்தல்
Scarborough
Home Renovaiton
நிறுவனத்தில் பணிபுரிய
அனுபவம் உள்ள பணியாளர்கள்
தேவை
அழையுங்கள்: 647.218.7157

Sangathamil
சங்கத்தமிழ்
யாதும் ஊரே யாவரும் கேளிர்
சர்வதேச மின் செய்தித்தாள்
www.sangathamil.ca

# தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து

**தான் நேசித்த மக்களுக்காக, தான் நேசித்த மண்ணுக்காக, ஒருவன் எத்தகைய உயர்ந்த உன்னதமான தியாகத்தைச் செய்ய முடியுமோ அந்த அற்புதமான அர்ப்பணிப்பைத்தான், திலீபன் செய்திருக்கிறான்.**






## சங்கத்தமிழ்


## தொடர்புகளுக்கு

**தொலைபேசி**

437 345 4203

**மின்னஞ்சல்** (Email)

sangathamilcanada@gmail.com

**இணையத்தளம்** (Website)

www.sangathamil.ca


அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சியும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பராதார் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.




# லெப். கேணல் திலீபனின் 35ம் ஆண்டு நினைவாக...

மக்கள் புரட்சி வெடிக்கட்டும் சுதந்திர தமிழீழம் மலரட்டும் என்று முழங்கிய ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் 35ம் அண்டு நினைவினை 15.09.2022 - 26.09.2022 வரையான காலத்தில் தமிழீழத்திலும், தமிழர்கள் பரந்து வாழும் புலம் பெயர்ந்த நாடுகளிலும் தமிழ் மக்கள் அனைவரும் வழி படுகின்றனர்.

ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபன் தமிழீழ விடுதலைப் போராட டத்தின் ஒரு விடிவெள்ளி, ஒரு காலத்தின் பதிவு.

ஒரு மனிதனால் தனது தேசத்திற்கு எவ்வளவு அதி உன்னத மான ஈகத்தை செய்ய முடியுமோ அவ்வளவு ஈகத்தை திலீபன் தன்னை வருத்தி தனது மக்களுக்காக செய்தான்.

12 நாட்கள் உண்ணாமல் நோன்பிருந்து தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் நியாயப்பாட்டினையும், யதார்த்த நிலைமை யினையும் தன் ஈகைச் செயல் மூலம் உலக அரங்கிற்கு எடுத்துச் சொன்னான்.

## திலீபனின் வாழ்க்கைச் சரிதம்

யாழ்ப்பாணம் ஊரெழு என்னும் கிராமத்தில் இராசையா பார்வதி தம்பதிகளுக்கு கடைக்குட்டியாக 29.11.1963 ல் பிறப் புடன் ஆரம்பமாகின்றது.



பச்சைப் பாலகன் பார்த்தீபன் பிறந்த பத்தாவது மாதத்தில், தாய் காலமாகி விட்டார். அவன் துன்பத்தில் மூழ்கி தன்னைப் புடம் போட்டு வளர்த்தான்.

பார்த்தீபன், ஆரம்பக் கல்வியினை உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்திலும் பின்னர் உரும்பிராய் சந்திரோதயாவிலும் பயின்றான். புலமைப் பரிசிற் பரீட்சையில் சித்தியடைந்து யாழ். இந்துக் கல்லூரியிலும் கல்வி பயின்று க.பொ.த உயர்தர விஞ் ஞானப்பிரிவில் சித்தியடைந்து யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு தெரிவு செய்யப்பட்டான். ஆயினும் மருத்துவக் கல்வி யினை கற்க விரும்பாத பார்த்தீபன் தமிழீழ விடுதலைப் போராட் டத்தில் 1983ல் இணைந்து கொண்டான்.

திலீபன் அயராத முயற்சியினாலும், திறமையினாலும் குறுகிய காலத்தில் புலிகள் இயக்கத்தின் முதுநிலைப் பொறுப்பாளர் ஆனான்.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, உறுதி, உழைப்பு எல்லா வற்றிலும் திறமையாக செயற்பட்டதினால் யாழ் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளரக தலைவரால் திலீபன் நியமிக் கப்பட்டான். அத்துடன் தமிழீழ விடுதலைப்புலிகள் வரலாற்றின் புதிய அத்தியாயம் ஆரம்பமாயிற்று.




தமிழ் மக்களை அரசியல் மயப்படுத்ததுவதற்கு அல்லும் பகலும் உழைத்தான். பல தாக்குதல் திட்டங்களை தானே திட்டமிட்டு நடாத்தினான்.

திலீபன் அரசியல் பொறுப்பாளராக மட்டுமன்றி இராணுவ நிபுணராகவும் வளர்ந்தான். வல்வெட்டித்துறைப் பகுதியில் சிங்கள இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலில் விழுப்புண் அடைந்ததினால் குடலின் 14 அங்குல நீளத்துண்டு வெட்டி எடுக்கப்பட்டது.

திலீபன் சின்ன வயதிலேயே சிறந்த அரசியல் தெளிவு மிக்க வனாக திகழ்ந்தான். “களத்தில்“ எனும் பத்திரிகையினை ஆரம் பித்து அவனே நடாத்தினான்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தை விஸ்தரிக்கும் பணியிலும் தீவிரமாகச் செயற்பட்டான்.

மாணவர் அமைப்பு
மகளிர் அமைப்பு
சுதந்திரப் பறவைகள் அமைப்பு
தேச பக்தர் அமைப்பு
வழிப்புக் குழுக்கள்
ஒலி, ஒளி சேவை கட்டுப்பாட்டுச் சபை
தமிழர் கலாச்சார சபை
மற்றும் பல தொழிற்சங்கங்கள், குழுக்கள் என பல அமைப் புக்களை திலீபன் உருவாக்கினான்.

29.11.1963ல் பிறந்தவன், 15.09.1987ல் சின்ன வயதில் அதாவது 23வது வயதில் உலகில் எங்குமே நிகழாத வரலாற் றுச் சாதனையை நிகழ்த்துவதற்காக திலீபன் ஈகைப் பயணத்தை ஆரம்பித்தான்.

யாழ் நல்லூர் கந்தன் வீதியில் தாயில்லாத திலீபனுக்கு வீரத்தாய் ஒருத்தி வீரத்திலகமிட்டு விட, காலை 9:45 மணிக்கு திலீபன் உண்ணாநோன்பு மேடை நாற்காலியில் அமர்ந்தான்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மன உறுதியை நிலைநாட்ட திலீபனின் விடுதலைப் பயணம் ஆரம்பமானது. திலீபன் வழமையாகவே புன்னகைப்பு இயல்பு, ஆயினும் அன்று புன்னகை அதிகமாகக் காணப்பட்டது. சாவுப்பாதையிலும்

மகிழ்வு வெள்ளத்தில் இருந்தான்.



இந்திய அரசிற்கு எதிராக ஐந்து கோரிக்கைகளை முன் வைத்து சாகும் வரை உண்ணாமல் நோன்பை ஆரம்பித்தான்.

1. பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் இன்றும் தடுப்புக் காவலில் அல்லது சிறைகளில் இருப்போரை விடு தலை செய்யப்பட வேண்டும்.
2. புனர்வாழ்வு என்ற பெயரில் தமிழர் தாயகத்தில் நடாத் தப்படும் சிங்கள குடியேற்றங்கள் உடனடியாக நிறுத் தப்பட வேண்டும்.
3. இடைக்கால அரசு நிறுவப்படும் வரை புனர்வாழ்வு என்று அழைக்கப்படும் சகல வேலைகளும் நிறுத் தப்பட வேண்டும்.
4. வடக்கு, கிழக்கு மாகாணத்தில் பொலிஸ் நிலையங் கள் திறக்கப்படுவது உடன் நிறுத்தப்பட வேண்டும்.
5. இந்திய அமைதிப்படையின் மேற்பார்வையில் ஊர்காவற்படை என அழைக்கப்படுவோருக்கு வழங் கப்பட்ட ஆயுதங்கள் திரும்பிப் பெறப்படல் வேண்டும். தமிழர் பிரதேசங்களில் பள்ளிக்கூடங்களில் நிலை கொண்டிருக்கும் பொலிஸ் நிலையங்கள், இராணுவ முகாம்கள் மூடப்பட வேண்டும்.

இவையே அந்த கோரிக்கைகள்.





உண்ணாநோன்பு மேடையில் ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபன்

திலீபனைப் போல் உலகில் எவரும் நீர் கூட அருந்தாமல் உண் ணா நோன்பிருந்து மடிந்த வரலாறு இதுவரை எழுதப்பட வில்லை.

இளமைச் சுகங்களை நிறைவு செய்த முதுமைக் காந்தி கூட, நீரருந்தியே உண்ணா நோன்பிருந்தது குறிப்பிடத்தக்கது.

ஐரிஸ் வீரன் பொபி சாண்டர், இந்திய ஆந்திரா மாநில பொட்டு ராமுலு, தமிழ்நாடு (சென்னை) விருதுநகர் சங்கரலிங்க நாடார், பகவத்சிங்கின் தோழன், ஜதீந்திர நாத்தாஸ் போன்றோரும் நீரருந்தியே உண்ணா நோன்பிருந்தனர்.

ஆனால் திலீபன் மட்டும் நீர் கூட அருந்தாமல் 12 நாட்கள் உண்ணாமல் நோன்பிருந்து உயிர் துறந்தான்.

23வது வயதில் திலீபன் நிலைநாட்டிய சாதனை, உலக சாதனை.

திலீபன் மிகவும் மனவுறுதி படைத்தவன். தன்னம்பிக்கையும், விடாமுயற்சியும் உடையவன். உவமிக்க முடியாத தேசப் பற்றாளன்.

தமிழ் மக்களின் விடுதலைக்காக பழம் தமிழ் மன்னனாகிய சங்கிலியன் அரசாண்ட நல்லூர் அரச தரணியில் ஒரு புலிவீரன் உண்ணாமல் துவண்டு கிடந்தான்.

“இறைவா! முருகா! திலீபனை காப்பாற்றி விடு” என நல்லூர் கந்தனிடம் அன்று கூடியிருந்த மக்கள் பிரார்த்தனை செய்தனர்.
திலீபன் உண்ணா நோன்பிருக்கும் போது சக போராளிகளுக்கு ஒரு நிபந்தனை விதித்தான். எனது விருப்பத்திற்கு மாறாக நீரோ, உணவே, மருத்துவமோ வழங்கக் கூடாது என சத்தியம் வாங்கிக் கொண்டான்.

## இரண்டாம் நாள்

திலீபன் பேசுகின்றான்... “நாளை நான் சுயநினைவுடன் இருப்பேனோ தெரியவில்லை. அதனால் இன்று பேசுகிக்றேன். நான் இலட்சியத்தில் உறுதியாக இருக்கின்றேன். 650 பேர் இதுவரை மரணித்து விட்டார்கள். ஒரு தெளிவான தலைவனை நீங்கள் பெற்றிருக்கின்றீர்கள். அந்த மாபெரும் வீரனின் தலைமையில் மக்கள் புரட்சி வெடிக்கட்டும், அது நிச்சயம் தமிழீழத்தை தமிழரின் அடிப்படை உரிமைகளைப் பெற்றுத் தரும். இதனை வானத்திலிருந்து மடிந்த போராளிகளுடன் நானும் ஒருவனாக பார்த்து மகிழ்வேன்.” என்று முழங் கினான்.

அவனது ஈகைப்பணயம் தொடர்ந்தது. சில போராளிகள் நீர் அருந்துமாறு கெஞ்சிக் கேட்டனர்.

“என்ன பகிடியா பண்ணுகிறீர்கள்...? சொட்டுத் தண்ணீரும் அருந்த மாட்டேன் என்று நிபந்தனையுடன் தானே உண்ணா விரதத்தை அரம்பித்தேன். பிறகு எப்படி தண்ணீர் குடிக்க வேண்டும் என்று கேட்பீர்கள்.

எனது போராட்டம் வெறும் அரசியல் இலாபத்துக்காக தொடங் கப்பட்டது அல்ல, வயிறு முட்டக் குடித்து விட்டு மக்களை ஏமாற்ற என்னால் முடியாது.” என ஆவேசத்துடன் முழங்கினான்.

திலீபனின் போராட்டத்தில் பங்குகொள்ள ஒவ்வொரு நாளும் திசை எட்டிலுமிருந்து இலட்சத்தை தாண்டும் மக்கள் கூட்டம் கூடும்.

பள்ளி மாணவர்கள் வெள்ளைச் சீருடையுடன் சக மாணவருக் காக அருகிலிருந்து பலம் சேர்த்தனர். அப்போது தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதி திலீபன் என்ற நிலை மாறி தமிழீழத்தின் பிரதிநிதி திலீபன் என்ற எண்ணம் தான் தமிழீழ மக்களின் மனங்களில் இருந்தது.

## மூன்றாம் நாள்

காங்கேசன்துறை கருணானந்தசிவம் “திலீபன் தமிழனத்திற்கு சொந்தமானவர், திலீபனின் உயிர் விலை மதிப்பற்றது. அவனை நாம் இழக்க முடியாது. அப்படிப்பட்ட திலீபன் நீராவது அருந்தி தன் உடலைக் காப்பாற்ற வேண்டும். பிடிவாதத் திலிருந்து இறங்கி நீர், உணவு அருந்தி எம் கவலையைப் போக்க வேண்டும். இது எனது வேண்டுகோள் மட்டுமல்ல இங்கு வந்திருக்கும் இலட்சக் கணக்கான மக்களின் வேண்டு கோளும் இதுதான்.” என்றார்.

அதனைக் கேட்ட திலீபன் முகம் வாடி, தான் பேசப்போவதாக ஒலிவாங்கியைக் கேட்டான்.

“மேடையில் பேசிய ஓர் அன்பர் என்னை உணவு, நீர், அருந்தும் படி கூறுவது என்னை அவமானப்படுத்துவது போல் இருக் கின்றது. இறுதி வரை எனது இலட்சியத்தில் இருந்து மாற மாட்டேன். நீங்கள் இந்த திலீபனை நேசிப்பது உண்மையாக இருந்தால், தயவுசெய்து இனிமேல் என்னை நீராகாரம் அருந் தும் படி வற்புறுத்த வேண்டாம். உங்கள் திலீபனுக்கு நிறைய மனக்கட்டுப்பாடு உள்ளது. என் கோரிக்கையினை இந்தியா அரசு நிறைவேற்றாது விட்டால், நீர் அருந்தாமல் இறப்பேனே தவிர, இந்த அற்ப உயிரை காப்பாற்றுவதற்காக என் இலட்சியத் திலிருந்து ஒருபோதும் பின் வாங்க மாட்டேன்” எனக் கூறி உறுதி தளராது விடுதலை வேள்வியில் மூழ்கியிருந்தான்.



## நான்காம் நாள்

திலீபனால் நித்திரை விட்டு எழுப்புவதே சிரமமாக இருந்தது. திலீபனைப் பார்ப்பதற்கு அணி அணியாக மக்கள் வந்து சென்றனர். மக்கள் எல்லோரும் விம்மி விம்மி கதறி அழுத வண்ணமே திலீபனிடம் இருந்து விடைபெற்றுச் சென்றனர்.

மெழுகுவர்த்தியைப் போல் திலீபன் தன்னை உருக்கி தனது மக்களுக்கு ஒளியூட்டிக் கொண்டிருந்தான். மக்களும் திலீபன் அருகே குளறி அழுது கொண்டிருந்தனர். எங்கும் எவர் முகத் திலும் கண்ணீர் மழைதான். ஆனால் திலீபன் மட்டும் உறுதி யுடன் சிரித்துக்கொண்டிருந்தான். இத்தனை இலட்சம் மக்களும் விடுதலை வேண்டி திரண்டெழுவார்களேயானால் இக்கணமே தனது சாவு நிகழட்டும் என திருப்தி கொண்டான். ஆயுதம் தூக்கிய புலிகளுக்கு அகிம்சை தெரியாது என்று புலிகள் மீது காலம் காலவமாக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கு, திலீபன் முழுக்குப் போட்டான்.

## ஐந்தாம் நாள்

யாழ் கோட்டை இந்தியப் படை அதிகாரி திலீபனைப் பார்த்து விட்டுச் சென்றார். எதுவும் நடக்கவில்லை.

## ஆறாம் நாள்

திலீபனை மக்கள் கூட்டம் சூழ்ந்து கொண்டது. அழுகையும் கண்ணீரும் தான் எவ்வோர் முகத்திலும் காணப்பட்டது.

வல்லபுலி ஒன்று மடியப்போகின்றதே என்ற ஏக்கம் எல்லோர் நெஞ்சையும் வாட்டியது.

அன்று மாலை இந்திய அதிகாரிகளுக்கும் புலிகளுக்கு மிடையில் பேச்சுக்கள் இடம்பெற்றன.



### ஏழாம் நாள்

முடிவு வந்தது. அது திலீபனுக்கு விளக்கப்பட்டது. திலீபன் சஞ்சலப்படவில்லை. உறுதி தளரவில்லை.

“எந்த முடிவும் நல்ல முடிவாக இருக்க வேண்டும். ஐந்தம்சக்



கோரிக்கைகளும் நிறைவேற்றுவதாக அவர்கள் எழுத்தில் தர வேண்டும். இல்லையென்றால் நான் உண்ணா நோன்பை உயிர் துறக்கும் வரை கைவிட மாட்டேன்.” என வரண்டுபோன வாயினால் கரகரத்த குரலில் திடமாக உறுதி தளராது திலீபன்” கூறிமுடித்தான்.

### எட்டாம் நாள்

இலட்சக் கணக்கில் சனக்கூட்டம். தமிழீழத்தின் சகல பாகங்களிலும் மக்கள் அடையாள உண்ணாநோன்புப் போராட்டங்களை நடாத்தினார்கள். தமிழீழம் எங்கும் பாரதத்திற்கு எதிரான அகிம்சைப் போர் தீப்பிளப்பாக எரிந்தது, புலிகள் ஆயுதப் போரில் மட்டுமல்ல, அகிம்சைப் போரிலும் சாதனை படைக்கும் திறன் பெற்றவர்கள் என்ற உணர்வு, உலகம் முழுவதும் பரவிக் கொண்டிருந்தது. நல்லூரின் வீதியில் துவண்டு வதங்கிய திலீபனின் வரலாறு, உலக அரங்கில் சரித்திரமாகிக் கொண்டிருந்தது.

திலீபனின் உடல் பலம் குன்றக் குன்ற, அவனின் மனோபலம் பெருகிக் கொண்டே போனது.

### ஒன்பதாம் நாள்

திலீபனை நன்றாக உற்றுப் பார்க்கின்ற பலரது இதயங்களில் இரத்தம் கசிகின்ற வேதனை, திலீபினின் உறுப்புக்கள் செயலற்றுக் கொண்டிருக்க பொதுமக்கள், போராளிகளின் குமுறல்களும் அதிகரித்து கொண்டிருந்தன. கலங்காத கல் நெஞ்சம் படைத்த இதயங்கள் கூட கலங்கின.

உதடுகள் அசைந்தன, குரல் வரவில்லை. கண்கணில் குழிகள் தெரிந்தன. உதடுகள் வெடித்திருந்தன. ஆயினும் திலீபன் புன்னகைத்துக் கொண்டே இருந்தான்.

இந்தியாவின் தென் பிராந்திய தளபதி திபேந்தர் சிங் தமிழீழ தேசிய தலைபர் மேதகு வே. பிரபாகரனைச் சந்தித்தார். எதுவித பயனும் கிடைக்கவில்லை.

அன்று யாழ். மாவட்டமே ஸ்தம்பிதம் அடைந்தது. எங்கும் எதிலும் திலீபன் என்ற நாமம் பரவிக் கொண்டிருந்தது.

இந்தியத் தூதுவர் திக்சிற் குழுவினர் தமிழீழ தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களைச் சந்திக்க வந்தனர். பேச்சுக்கள் நடந்து கொண்டிருப்பதாக செய்தி வந்தது. மக்கள் போராளிகள் அனைவரும் மகிழ்ச்சியில் மூழ்கினார்கள். நல்ல முடிவு வரும் உடனடியாக யாழ். பெரியாஸ்பத்திரியில் அனுமதித்து அவசர சிகிச்சைப் பிரிவில் விசேட சிகிச்சையளித்தால் திலீபனை மீட்டு விடலாம். இப்படியாக அனைவரும் திட்டம் வகுத்திருந்தனர்.

பேச்சுவார்த்தை பதில் வந்தது. அங்கு கூடி நின்றவர்களுக்கு இந்த உலகமே தலை கீழாக சுற்றுவது போல் இருந்தது.

### பத்தாம் நாள்

திலீபனுக்கு நேர்த்தி வைத்து மக்கள் தூக்குக் காவடி எடுத்தனர். எங்கும் அடையாள உண்ணாநோன்பு, சோகம், கண்ணீர் மகாவீரன் திலீபனை இழக்கப் போகின்றோமே என்ற ஏக்கம். ஆனால் திலீபன் உண்ணாநோன்பு மேடையில் உட்கார்ந்து போதே தனது சாவை நிச்சயம் என்பதனைத் தீர்மானித்து விட்டான்.

### பதினொராம் நாள்

திலீபனின் சகல உறுப்புக்களும் உணர்விழந்தன. “கோமா“ நிலைக்கு சென்று விட்ட நிலை, எல்லோர் முகத்தில் சோகத் திரையுடனும் கண்ணீருடனும் இரண்டு இலட்சம் பேர் திலீபனை சுற்றியிருந்தனர். இறுதி நாள் உயிருடன் திலீபன் ஆவி துறக்கப் போராடிக் கொண்டிருந்தான். 265 மணித்தியாலங்கள் தனது சாகும் வரை உண்ணா நோன்பினை வெற்றிகரமாக நடாத்தி முடித்த திலீபன், 26.09.1987 அன்று காலை 10:48 மணிக்கு புடைசூழ கூடியிருந்த மக்களைவிட்டு,










பிரிந்து சென்றான்.

திலீபனை கவனித்துக் கொண்டிருந்த டொக்டர் சிவகுமாரன் திலீபன் மடிந்து விட்டதை பரிசோதனை செய்து உறுதிப்படுத்தி, திலீபனின் பாதங்களில் விழுந்து வணங்கி எழுந்த கணம்...

மக்களும் போராளிகளும் கதறிக் குழறி அழத் தொடங்கினார்கள். எங்கும் அழுகைச் சத்தம். விம்மல் ஒலி அனைவரது முகத்திலும் கண்ணீர் ஆறாத பெருக்கெடுத்து ஓடியது.

சோக இசையும் குழறல்களும் வானமே இடிந்து விட்டது போல் உணர்வு. மக்கள் எல்லோரும் குழுங்கிக் குலுங்கி ஒருவரை ஒருவர் கட்டிப் பிடித்து அணைத்தபடி அழுது புரண்டனர்.

மக்கள் எல்லோருக்கும் தங்கள் குடும்ப உறவு ஒன்று மடிந்து விட்ட உணர்வு தாயாக, தந்தையாக, அண்ணாவாக, தம்பியாக, தங்கையாக, அக்காவாக திலீபன் நேசித்ததைப் போன்று மக்களும் திலீபனை அப்படியே பார்த்தனர்.

திலீபன் வித்தாகி விழும் நாள் வரை இலட்சியத்தில் இரும்பாக வாழ்ந்தவன்.

சின்ன வயதில் சன்னம் போல் உறுதி. பென்னம் பெரிய பேராற்றல் தன்னுடைய ஆன்ம பலத்தால் தமிழீழ மக்களை ஒரு தேசியத்தின் கீழ்க்கட்டியவன்.

அறவழிப் போராட்டம் என்று ஒன்று இருக்குமானால் அதன் உச்சியைத் தொட்டுக் காட்டியவன். தனது மக்களுக்கு தன்னைத் ஈகம் செய்வதில் அவன் ஒப்பற்ற மகிழ்ச்சியடைந்தான்.

உண்ணாநோன்புப் போராட்டம் ஒன்றை நடாத்துவோம் என்று திலீபனே தலைவர் பிரபாகரனுக்கு திட்டம் வகுத்துக் கொடுத்தான். அதனை தானே செய்யப் போவதாகவும் அனுமதி கேட்டான்.

திலீபன் மக்களை அளவு கடந்து நேசித்தவன். திலீபன் மேல் மக்கள் வைத்த அன்புக்கும், பாசத்திற்கும் கைமாறாக அவன் தன் உயிரையே மக்களுக்காகக் கொடுத்தான். அதில் அவன் மனநிறைவும் அடைந்தான்.

திலீபனின் வீரச்சாவு மக்கள் மனங்களில் தாக்கத்தை ஏற்படுத்தியது.

## "மக்கள் புரட்சி வெடிக்கட்டும் சுதந்திர தமிழீழம் மலரட்டும்"

என்று முழங்கியவன் அதனை செயலில் செய்து காட்டினான். திலீபனின் வீரச்சாவின் சோகத்தில் தமிழர் தேசம் நனைந்தது போல், ஒரு போதும் சோகத்தில் மூழ்கவில்லை.

திலீபனின் வீரச்சாவு தமிழர் போராட்ட வரலாற்றில் புதுமையானது சாத்வீக அகிம்சைப் போராட்டத்தில் ஈடிணை அற்றது. மகத்தான ஈகத்தைப் புரிந்திருக்கின்றான். இது தமிழரின் வரலாற்று நிகழ்ச்சி. தமிழர் போராட்டத்தில் திருப்பத்தை ஏற்படுத்திய நிகழ்வு. பாரத தேசத்தை தலைகுனிய வைத்த நிகழ்வு.

திலீபன், தமிழ் மக்களின் சுதந்திரத்திற்காக இறந்தான். அவர்களின் பாதுகாப்புக்காக, கௌரவத்திற்காக இறந்தான். திலீபன் உண்மையில் சாகவில்லை. காலத்தால் சாகாத வரலாற்றுப் புருசனானான்.

பாரதம், ஈழத்தமிழர்களுக்கு வழங்கிய வாக்குறுதியை நடைமுறைப்படுத்தும்படி தான், நீதி கேட்டு தர்மயுத்தம் தொடுத்தான். அகிம்சைக்கு பேர் போன நாடான இந்தியா, திலீபனின் கோரிக்கைக்கு உருப்படியான பதிவினை உத்தியோக பூர்வமாக வழங்காது ஏமாற்றியதால், திலீபனை தமிழ் மக்கள் இழந்தார்கள்.

திலீபனின் சாத்வீக போராட்டம் இந்திய அரசின் போலி முகத்திரையைக் கிழித்தெறிந்தது. தனது வீரச்சாவு மூலம் இந்தியாவின் கபடத்தனத்தையும் வஞ்சகத்தையும் அதன் உள் நோக்கங்களையும் வெளிச்சம் போட்டுக் காட்டினான். அதன் மாயை முகமூடியை கிழித்து, தமிழ் மக்களுக்கு யதார்த்தத்தை புரிய வைத்தான்.

திலீபனின் உயிர் அநியாயமாகப் போகவில்லை. தமிழர்களுக்குப் படிப்பினையாகியது. ஆயுதப் போராட்டம் தான் தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற்றுத் தரவல்லது என்பதனை அவன் உணர்த்திச் சென்றுள்ளான்.

தமிழ் மக்களின் இதயங்களில் ஒளி விட்டுப் பிரகாசிக்கும் திலீபனின் ஈகம் எத்தனை காலம் சென்றாலும் மறந்து போகாது.

நன்றி: ச.சங்கரன்








# குருந்தூர்மலையில் பௌத்தத்திற்கு முட்டுக்கட்டையாம்?

செப்டம்பர் 03, 2022

முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு குருந்தூர் மலையில் பௌத்த வழிபாடுகளை மேற்கொள்வதற்கு சிலர் இடையூறாக இருப்பதாக பொலிஸ் நிலையத்தில் குருந்தூர் மலையில் இருக்கின்ற பௌத்த பிக்குகள் முறைப்பாடொன்றை மேற்கொண்டுள்ளனர்.

ஆதிசிவன் ஐயனார் ஆலயம் அமைந்துள்ள தொல்லியல் பிரதேசமாக அறிவிக்கப்பட்டுள்ள தண்ணிமுறிப்பு குருந்தூர் மலையில் பௌத்த வழிபாடுகளை மேற்கொள்வதற்கு சிலர் இடையூறாக இருப்பதாக தெரிவித்துள்ளனர்.

இந்த முறைப்பாட்டின் பிரகாரம் கடந்த சில தினங்களாக பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் மாகாணசபை உறுப்பினர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்ட முல்லைத்தீவு பொலிஸார் நேற்று (02) முல்லைத்தீவு தலைமை பொலிஸ் நிலையத்துக்கு வாக்கு மூலத்தை பெற்றுக் கொள்ள வருகைதருமாறு அழைப்பு விடுத்திருந்தனர்.

இதன்படி முன்னாள் மாகாணசபை உறுப்பினர்களான துரைராசா ரவிகரன் மற்றும் கந்தையா சிவநேசன் மற்றும் சமூக செயற்பாட்டாளர் யூட் நிக்சன் ஆகியோர் பொலிஸ் நிலையத்துக்கு வருகைதந்த நிலையில் அவர்களிடம் மிக நீண்டநேரம் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் வாக்குமூலம் பெற்று கையொப்பம் வாங்கி கொண்



# கிழக்கு பல்கலைக்கழகத்தில் 1990ம் ஆண்டு படுகொலையின் 32வது நினைவேந்தல்!

செப்டம்பர் 05, 2022

கிழக்கு பல்கலைக்கழகத்தில் 1990ம் ஆண்டு படுகொலை செய்யப்பட்டவர்களின் 32 வது நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.

கிழக்கு பல்கலைக்கழத்தின் முன்பாக கிழக்கு பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் 05.09.2022 திங்கட்கிழமை ஈகைச்சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தியதுடன் படுகொலை செய்யப்பட்டோருக்கு நீதிகோரி கவனயீர்ப்பு ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



இதில், படுகொலை செய்யப்பட்டவர்களின் உறவுகளும் கலந்து கொண்டு வணக்கம் செலுத்தினர். வணக்க நிகழ்வை அடுத்து, உயிர்நீத்தவர்களுக்கு நீதி கோரி ஆர்ப்பாட்டமொன்றும் முன்னெடுக்கப்பட்டது.

1990 ஆம் ஆண்டு செட்டெம்பர் 5 ம் திகதி இடம்பெற்ற வன்செயலின் போது வந்தாறுமூலை கிழக்கு பல்கலைக் கழக்தில் தஞ்சமடைந்துள்ள நிலையில் சுமார் 176 இக்கு மேற்பட்ட பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

# கிளிநொச்சி வலைப்பாடு பகுதியில் சிங்கள கடற்படை அப்பாவி தமிழ் மக்கள் மீது தாக்குதல்!

செப்டம்பர் 06, 2022

கிளிநொச்சி வலைப்பாடு பகுதியில், அப்பாவி தமிழ் மக்கள் மீது சிங்களக் கடற்படையினர் தாக்குதல் நடத்திய சம்பவத்தில், 4 பேர் காயமடைந்துள்ளனர்.

நேற்று இரவு இடம்பெற்ற சம்பவத்தின் போது, வலைப்பாடு பகுதியைச் சேர்ந்த, 43 வயதுடைய, இராசரத்தினம் நிமால் எனப்படும் 3 பிள்ளைகளின் தந்தையே, படுகாயமடைந்த நிலையில், கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில், சிகிச்சை பெற்று வருகின்றார்.

நேற்று மாலை 3.30 மணியளவில், தாக்குதலுக்கு உள்ளான நபரின் படகை, அவரது நண்பர்கள் கடலுக்கு எடுத்து சென்றுள்ளனர். இவ்வாறு சென்றவர்கள், மாலை ஆகியும் கரை திரும்பாத நிலையில், குறித்த நபர், கடற்கரைக்கு சென்று அவதானித்துள்ளார். மாலை 6.00 மணியளவில் கரைக்கு திரும்பிய படகு, கடற்படை முகாமுக்கு முன்பாக கரை ஏற்றப்பட்டது. இந்த நிரையில், படகை செலுத்திச் சென்றவர்கள், கடற்படை முகாமுக்கு, பதிவுக்காக சென்றுள்ளனர்.

இதன் போது, தமது படகில் ஏற்றி வந்த மண்ணெண்ணையை, பதிவு மேற்கொள்ளம் பகுதிக்கு கொண்டு சென்றுள்ளனர்.

குறித்த மண்ணெண்ணை கொள்கலனை அகற்றமாறு, கடற்படை அதிகாரி ஒருவர், அவர்களிடம் தெரிவித்ததை



அடுத்து, அவர்கள் அதனை அகற்றியுள்ளனர்.

இந்த நிலையில், இரு தரப்பினருக்கும் இடையில் கருத்து முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

நேற்று மாலை 6.30 மணியளவில் இடம்பெற்ற கருத்து முரண்பாட்டின் போது, கடற்படை அதிகாரி ஒருவர், அவர்களை அச்சுறுத்தும் வகையில், துப்பாக்கியை, சுடுவதற்கு ஏற்ற வகையில் தயார் செய்ததாகவும், அதனை ஒளிப்பதிவு செய்ய முற்பட்ட போது, தொலைபேசியை பறித்து, பின்னர் தன் மீது தாக்கிதாகவும், கடற்படையின் தாக்குதலில் படுகாயம் அடைந்த குடும்பஸ்தர் தெரிவித்தார்.

தன்னையும், தன்னுடன் நின்றவர்களையும், கடற்படையினர் துரத்தி துரத்தி தாக்கியதாகவும், இதன் போது தான் படுகாயமடைந்ததாகவும், அவர் குறிப்பிட்டார்.

பின்னர், காயங்களுக்குள்ளான நபர், சுயநினைவிழந்து கிடப்பதை அவதானித்த கிராமத்தவர்கள், அவரை வேரவில் வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

அதன் பின்னர், படுகாயம் அடைந்த நபர், மேலதிக சிகிச்சைகளுக்காக, கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருகின்றார்.

குறித்த தாக்குதல் சம்பவத்தின் போது, ஒரு பல் முழுமையாக அகற்றப்பட்டுள்ளதுடன், மற்றுமொரு பல், விழும் அபாய நிலையில் உள்ளதாக, பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினர் குறிப்பிட்டனர். தாக்குதலுக்கு இலக்கான நபருக்கு சொந்தமான இரண்டு கையடக்க தொலைபேசிகளும், கடற்படையினரால் எடுத்த செல்லப்பட்டுள்ளதாகவும், பாதிக்கப்பட்ட தரப்பினர் தெரிவித்தனர்.

இதேவேளை, குறித்த சம்பவத்தில் காயமடைந்த மற்றுமொரு பொதுமகனும், இரண்டு கடற்படை உத்தியோகத்தர்களும், சிகிச்சைக்காக, கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# வந்தாறுமூலை கிழக்கு பல்கலைக்கழகப் படுகொலை நினைவேந்தல்!




செப்டம்பர் 05, 2022

1990 ஆண்டு செப்டம்பர் மாதம் 05ம் திகதி மட்டக்களப்பு வந்தாறுமூலையில் அமைந்துள்ள கிழக்குப்பல்கலைக் கழகத்தில் தங்கியிருந்தவர்களை கைது செய்து காணாமல் ஆக்கப்பட்டார்கள்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் வைத்து கைது செய்யப் பட்டு காணாமல் ஆக்கப்பட்ட 158 பேர் குறித்தும் அதன பின்னர் கைது செய்யப்பட்ட 26 பேர் குறித்தும் விசா ரணைகளை மேற்கொண்ட "வடகிழக்கு பகுதிகளில் காணாமல் போனோருக்கான விசாரணை ஆணைக் குழு" வினால் கடந்த 1997ம் ஆண்டு வெளியிடப்பட்ட இறுதி அறிக்கை பின்வருமாறு கூறுகின்றது.

மட்டக்களப்பு வந்தாறுமூலை கிழக்குப் பல்கலைக்கழக அகதிமுகாமில் இருந்து கைது செய்யப்பட்டவர்களே இம்மாவட்டத்தில் செய்யப்பட்ட மிகப்பெரிய கைதிகளை கொண்ட குழுவாகும். இக் கைதுகள் 1990ம் ஆண்டு செப் டம்பர் மாதம் 05 மற்றும் 23 திகதிகளில் நடைபெற்றன.



முதலாம் நாள் 158 பேர் கைது செய்யப்பட்டதுடன் இரண்டாம் நாள் 16 பேர் சிறையில் வைக்கப்பட்டனர். காணாமல் போனவர்கள் என கருதப்பட்ட 158 பேரின் பெயர் பட்டியல் ஒன்று இவ்வாணைக்குழுவிடம் சமர்ப் பிக்கப்பட்டது. மேலே குறிப்பிட்ட 158 பேரில் 92 பேர் காணாமல் போனதை 83 சாட்சிகள் நிறுபித்துள்ளனர். இதைத் தொடர்ந்து நடைபெற்ற கைதில் காணாமல் போன 16 பேரில் 10 பேருக்கான சாட்சியங்களும் கொடுக்கப் பட்டன.

சாட்சிகளின் பிரகாரம் மேற்படி பல்கலைக்கழகத்தின் சுற்றுப்புறத்தில் இருந்தவர்கள் 1990 ம் ஆண்டு யூலை மாதத்தில் இருந்து கிட்டத்தட்ட 45000 மக்கள் அகதிகளாக் கப்பட்டுள்ளனர். இவ் அகதிமுகாமானது பேராசிரியர் மனோ சபாரெட்ணம் டாக்டர் தங்கமுத்து ஜயசிங்கம் திரு.வேலுப்போடி சிவலிங்கம் ஆகியோரால் நிர்வகிக் கப்பட்டதுடன் அந்தக்காலப்பகுதியில் இருந்த அரசசார்பற்ற நிறுவனங்களினால் ஆதரவும் வழங்கப்பட்டது.

1990 ஆண்டு செப்டம்பர் மாதம் 05ம் திகதி காலை 6மணிக்கு கொம்மாதுரை இராணுவமுகாமில் இருந்த இராணுவத்தினர் வேறு சில முகாமில் இருந்த இராணுவத் தினருடன் இ.போ.ச பஸ்வண்டியில் கிழக்குப் பல்கலைக் கழக வளவினுள் நுழைந்தனர். அதைத்தொடர்ந்து வெள்ளைவான் வண்டியில் பொருத்தப்பட்ட ஒலிபெருக்கி மூலம் அகதிகள் அனைவரும் மூன்று வெவ்வேறு வரிசையில் நிற்குமாறு வேண்டப்பட்டனர்.

12 இருந்து 25 வயதுவரையானோர் முதலாவது வரிசை யிலும், 26 இல் இருந்து 40 வயதானோர் இரண்டாவது வரிசையிலும், 40 வயதிற்கு மேற்பட்டோர் மூன்றாவது வரிசையிலும் நிற்குமாறு வேண்டப்பட்டதுடன் இம் மூன்று வரிசையில் உள்ளவர்களை குறிப்பிட்ட இடம் ஒன்றை கடந்துசெல்லுமாறு வேண்டப்பட்டனர்.

அந்த இடத்தில் முகமூடி அணிந்து இராணுவ உடை அணிந்த ஐந்துபேர் கதிரையில் அமர்ந்திருந்தனர். முக மூடி அணிந்தவர்களுக்குப் பின்னால் ஏழு முஸ்லீம்கள் நின்றுகொண்டிருந்தனர். முகமூடி அணிந்தவர்கள் சைகை காட்டும் வேலையில் வரிசையில் இருந்த மக்கள் வேறொரு பக்கத்திற்கு இழுத்தெடுக்கப்பட்டனர்.

இந்த நடவடிக்கை முடிவுற்றதும் வரிசையில் இருந்து இழுத்தெடுக்கப்பட்ட 158 பேரும் அவர்களது உறவினர் களால் காட்டப்பட்ட எதிர்ப்புக்கு மத்தியில் இராணுவத் தினரால் இழுத்துச்செல்லப்பட்டு இ.போ.ச பஸ்வண்டியில் ஏற்றி கொண்டுசெல்லப்பட்டனர்.

குறித்த நினைவேந்தல் நிகழ்வு இன்றைய தினம் பல்கலை மாணவர்களால் நினைவுகூரப்பட்டது. இந்நிகழ் வில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பிரமுவர்கள் மற்றும் பல்கலை மாணவர்கள் கலந்துகொண்டனர்.





# கிருஷாந்தி குமாரசுவாமி அவர்களின் 26ஆம் ஆண்டு நிலைவேந்தல்!

செப்டம்பர் 07, 2022

1996, செப்டெம்பர் மாதம் 07 ஆம் திகதி இலங்கை இராணுவத்தால் பாலியல் வன்முறைக்கு உட்படுத் தப்பட்டு, படுகொலை செய்யப்பட்ட கிருஷாந்தி குமார சுவாமி (1977 - 7.09.1996, கைதடி, யாழ்ப்பாணம்) அவர் களுடைய நினைவேந்தல் நிகழ்வு இன்றையதினம் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைமைச் செயலகத்தில் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.





# சிங்கள அரச படைகளால் படுகொலை செய்யப்பட்ட பாடசாலை மாணவி கிருசாந்தியின் 26ம் ஆண்டு செம்மணியில்!

செப்டம்பர் 07, 2022



1996ஆம் புரட்டாதி மாதம் 7ஆம் திகதி யாழ். சுண்டிக்குளி கல்லூரி மாணவி கிருசாந்தி (வயது 18) வீதியால் சென்று கொண்டிருந்த வேளை செம்மணி பகுதியில் அப்போதிருந்த இராணுவ முகாமில் வழிமறித்த இராணுவத்தினர் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தி கழுத்தை நெறித்துபடுகொலை செய்திருந்ததாக கூறப்படுகின்றது.

செம்மணி இராணுவ முகாமில் கிருசாந்தியை தடுத்து வைத்திருந்ததை ஊரவர்கள் கண்ணுற்று மாணவியின் தாயாரிடம் கூறியதை அடுத்து, மாணவியின் தாயாரான ஆசிரியை குமாரசாமி இராசம்மா (வயது 59) மாணவியின் சகோதரனும், யாழ்.பரியோவான் கல்லூரி மாணவனான குமாரசாமி பிரணவன் (வயது 16) மற்றும் மாணவியின் வீட்டுக்கு அயல் வீட்டில் வசிக்கும் தென்மராட்சி பல நோக்கு கூட்டுறவு சங்கத்தில் உதவியாளராக கடமையாற்றிய சிதம்பரம் கிருபாமூர்த்தி (வயது 35 ) ஆகியோர் மாணவியை தேடி சென்று செம்மணி இராணுவ முகாமில் விசாரித்த வேளை அவர்கள் மூவரையும் இராணுவத்தினர் படுகொலை செய்ததாகவும் கூறப்படுகின்றது.

அன்றைய தினம் நள்ளிரவு படுகொலை செய்யப்பட்ட நால்வரின் உடல்களையும் செம்மணி பகுதியில் உள்ள வயல் வெளியில் புதைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



செம்மணிப்படுகொலைப் புதைகுழியை நினைவுகூர கிருசாந்தி காணாமற்போன இன்றைய நாளே பொருத்தமானது.

இலங்கைத் தீவில் தமிழ் மக்கள் முள்ளிவாய்க்காலில் மாத்திரம் இனப்படுகொலை செய்யப்படவில்லை. அதற்கு முன்பாகவே பல்வேறு திட்டமிட்ட நடவடிக்கைகள் மூலம் ஈழத் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். அப்படியான ஒரு நிகழ்வே செம்மணிப்படுகொலை. இன்றைய நாள் செம்மணிப்புதைகுழி அம்பலமான நாள். செம்மணிப் படுகொலைப் புதைகுழி எவரலாறும் மறக்க முடியாத இனப்படுகொலைப் புதைகுழி.

அங்கு புதைக்கப்பட்டவர்கள் கிருசாந்தியும் அவளது தாய் இராசம்மாவும் தம்பி பிரணவனும் பக்கத்து வீட்டு அண்ணன் சிதம்பரம் கிருபாமூர்த்தி மாத்திரமல்ல. அங்கு சுமார் 600க்கும் மேற்பட்டவர்கள் கொன்று புதைக்கப்பட்டார்கள் என்ற அதிரச்சியட்டும் செய்தி அம்பலமானது. இலங்கை அரசு யாழ்ப்பாணத்தை கைப்பற்றிய பின்னர் 1996 மற்றும் 1997 ஆம் ஆண்டுகளில் தமிழ் இளைஞர்களை அழிக்க வேண்டும் என்ற திட்டமிட்ட இன அழிப்பு கொள்கை முன்னெடுக்கப்பட்டது. இதன்படி யாழ்ப்பாணத்து இளைஞர்கள் யுவதிகள் காணாமல் போகச் செய்யப்பட்டனர்.

கிருசாந்தி வன்கொலை மூடுண்டிருந்த யாழ்ப்பாணத்திலும் யாழ்ப்பாணத்திற்கு வெளியிலும் பெரும் கிளர்ச்சியை ஏற்படுத்தியது. இதனால் இலங்கை பாராளுமன்றத்தில் பெரும் வாதங்கள் எழுந்தன. இதனால் தொடர் யுத்தத்தில் ஈடுபட்ட இலங்கை அரசுக்கு பெரும் நெருக்கடி எழுந்தது. நெருக்கடியை தவிர்க்க சந்திரிக்கா அரசு ஒன்பதுபேரை கைது செய்தது. ஏழு இராணுவத்தையும் இரண்டு சிப்பாய்களையும் செய்து செய்தனர். அரசு எதிர்பாராத விதமாய் கிருசாந்தி கொலை வழக்கு செம்மணிப் புதைகுழி வழக்காகியது. 1998ஆம் ஆண்டு ஜீலை 3ஆம் திகதி கிருசாந்தி கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட இராணுவச் சிப்பாய் சோமரத்தின ராஜபக்ச கொழும்பு நீதிமன்றத்தில் வெளியிட்ட வாக்குமூலம் பெரும் கவனத்தை ஈர்த்தது.

“செம்மணியில் கிருசாந்தி, அவரது தம்பி பிரணவன், தாயார் ராசம்மா குமாரசாமி, அயலவர் சிதம்பரநாதன் மட்டுமல்ல, 300 இல் இருந்து 400 வரை அப்பாவி மக்கள் புதைக்கப்பட்டுள்ளார்கள். நான் கிருசாந்தியையோ மற்றவர்களையோ கொலை செய்யவில்லை.

எனது மேலதிகாரிகள் கொன்றுவிட்டு கொண்டு வந்த சடலங்களை அவர்களின் கட்டளையின் பேரில் புதைப்பதுதான் எனது வேலை. என்னை செம்மணிக்கு கூட்டிச் சென்றால் அப்படிப் புதைக்கப்பட்ட தமிழர்களின் புதைகுழிகளை என்னால் அடையாளம் காட்ட முடியும்.”

அப்போதைய அரசு கிருசாந்தி வழக்குடன் இந்த விவகாரத்தை மூடிமறைக்க முற்பட்டது. ஆனால் உலகளவில் இந்த விவகாரம் அவதானிக்கப்பட்டது. செம்மணிப் புதைகுழியை தோண்ட வேண்டும் உண்மையை கண்டறிய வேண்டும் என்று பல்வேறு மனித உரிமை அமைப்புக்கள் குரல் கொடுத்தன. இதனையடுத்து இலங்கை அரசுக்கு புதைகுழி விவகாரத்தை தட்டிக்கழிக்க முடியாத நிலை ஏற்பட்டது. செம்மணியில் வெளிவந்த எலும்புக்கூடுகள் சோமரத்தின ராஜபக்ச வாக்குமூலத்தை மெய்ப்பித்தது.

செம்மணியில் மீட்கப்பட்ட எலும்புக்கூடுகளை கண்ணீருடன் திரண்ட தாய்மாரும் உறவுகளும் அடையாளம் காட்டினர். யாழ்ப்பாணமே கண்ணீர் கோலம் பூண்டது. செம்மணியை விட 16 புதைகுழிகள் உள்ளன என்றும் அதில் பத்துப் புதைகுழிகளை தன்னால் அடையாளம் காட்ட முடியும் என்றும் ஐந்தை உதவி பொலிஸ் அதிகாரி பெரேராவால் காட்ட முடியும். எஞ்சிய ஒன்றை (அது ஒரு கோவில் அருகில் உள்ளது), டி.எம். ஜெயதிலக்காவால் (மரணதண்டனை பெற்ற இன்னொரு சிப்பாய்) அடையாளம் காட்ட முடியும் என்றும் ராஜபக்ச கூறினார்.

அத்துடன் இந்தப் படுகொலைகளுடன் தொடர்புடைய இராணுவ அதிகாரிகளின் பட்டியலையும் தரமுடியும் என்று சிப்பாய் ராஜபக்ச கூறினார். கப்டன் லலித் ஹேவா, லெப்டினன் விஜயசிறிவர்த்தன, லெப்டினன் துடுகல, மேஜர் வீரக்கொடி, மேஜர் குணசேகரா முதலிய இராணு அதிகாரிகளது விபரங்களை பகிரங்கப்படுத்தினான். அத்துடன் தனது வாக்குமூலத்தில் பல்வேறு கொலைகளை ராஜபக்ச விபரித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

கிருசாந்தியின் வன்புணர்வுப் படுகொலையானது இலங்கை வரலாற்றில் புதுப்பிக்க முடியாத கறுப்புப் பக்கங்களில் ஒன்றாகும்.

# மகசின் சிறையில் தமிழ் இளைஞர்கள் உணவு தவிர்ப்பு போரராட்டத்தில்!

செப்டம்பர் 07, 2022

விடுதலைப்புலிகள் அமைப்பினை மீள் உருவாக்க முற்பட்டதாக பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு கொழும்பு மகசின் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்கள் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அவர்கள் உணவு தவிர்ப்பு போராட்டத்தை நேற்று முதல் ஆரம்பித்துள்ளதாக குரலற்றவர்களின் குரல் அமைப்பின் இணைப்பாளர் கோமகன் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகள் அமைப்பை மீளுருவாக்கம் செய்கின்றனர் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் பூநகரி முக்கொம்பன் பகுதியில் கைது செய்யப்பட் உ.உமாகாந்தன், ர.சயந்தன், வி.இன்பராஜ், மகேந்திரன் பார்த்தீபன் மற்றும் வடமராட்சி தாளைடியை சேர்ந்த செ.உதயசிவம் உட்பட 12 பேர் உண்ணாவிரத போராட்டத்தை ஆரம்பித்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.



# அரசியல் கைதிகள் விடையத்தில் ரணில் இரட்டைவேடம்!

செப்டம்பர் 07, 2022

மகசின் சிறைச்சாலையில் உண்ணாவிரதம் இருக்கும் கைதிகளை நேரடியாக சென்று பார்வையிட்டு அவர்களது நிலவரம் தொடர்பாக அரசியல் கைதிகளது பெற்றோர்களுக்கு தெரியப்படுத்த வேண்டும் என தமிழ்த் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்களையும் மனிதநேயத்தோடு செயல்படக்கூடிய அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம் என குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் முருகையா கோமகன் தெரிவித்தார்.

அரசியல் கைதிகளின் உறவினர்கள் இன்று யாழ் ஊடக அமையத்தில் நடத்திய ஊடக சந்திப்பிலேயே முருகையா கோமகன் இதனை தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், நீண்ட காலமாக அரசியல்கைதிகளின் விடுதலை தொடர்பாக பேசப்பட்டு வரும் நிலையில், அண்மைக் காலங்களில் கைது செய்யப்பட்டு சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்ற தமிழ் இளைஞர்கள் நேற்று கொழும்பு மகசின் சிறைச்சாலையில் உணவுத் தவிர்ப்பு போராட்டத்தை ஆரம்பித்து இருக்கின்றார்கள்.

அவர்களுடைய உறவுகள் எங்களுடன் தொடர்பு கொண்டு சிறையிலுள்ள சூழல் தொடர்பில் தவிப்புடன் இருக்கின்றார்கள். இந்த விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்புகள் உடனடியாக விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதே நேரத்தில் அரசியல் கைதிகளையும் மகசின் சிறைச்சாலைக்கு நேரடியாக சென்று பார்வையிட்டு அவர்களது நிலவரம் தொடர்பாக அரசியல் கைதிகளது பெற்றோர்களுக்கு




தெரியப்படுத்த வேண்டும் என தமிழ்த் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்களையும் மனிதநேயத்தோடு செயல்படக்கூடிய அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

ஜனாதிபதியை தமிழ் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் சந்தித்து, எம்மால் கையளிக்கப்பட்ட பெயர் பட்டியல் ஜனாதிபதிக்கு கையளிக்கப்பட்டிருந்தது. அதில் 24 பேர் தண்டனை வழங்கப்பட்டு இருக்கின்றார்கள். பத்து வழக்குகளில் 22 பேரும், தண்டனை விதிக்கப்பட்டவர்கள் மேன்முறையீடு செய்தவர்கள் என 24 பேருமாக மொத்தம் 46 தமிழ் அரசியல் கைதிகள் காணப்படுகின்றனர். உடனடியாக 24 பேரை விடுதலை செய்ய முடியும் என ஜனாதிபதி கூறியதுடன், நீதி அமைச்சர் ஐநாவுக்கு சென்றிருப்பதால் அவர் வந்த பின்னர் இது தொடர்பான முடிவுகள் எடுக்கப்படும் என வாக்குறுதி அளிக்கப்பட்டிருக்கின்றது. இந்த விடயம் ஐநா மனித உரிமை அமர்வு முடிவடைவதற்கு முன்பாக இடம் பெற வேண்டும் என்பது எமது எதிர்பார்ப்பு.

இவ்விடயத்தில் தமிழ்த் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் கண்ணை மூடிக்கொண்டு இருக்காது செயற்பட வேண்டும். அனைவருக்கும் இதில் பொறுப்பு இருக்கின்றது. நல்லாட்சி அரசு காலத்திலும் நாம் ஏமாற்றப்பட்டு இருக்கின்றோம். அதே விடயம் இந்த காலப்பகுதியிலும் இடம்பெறுமா என்பது தொடர்பாக நாம் கவலை அடைகின்றோம்.

குற்றம் ஒப்புதல் வாக்குமூலம் என அழைக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டவர்களை அன்றிரவே சட்டமா அதிபர் திணைக்களத்தால் மீண்டும் வழக்குகளை தாக்கல் செய்யப்பட்டு அதற்கான வழக்கு இலக்கங்கள் வழங்கப்பட்டிருக்கின்றது. எதிர்வரும் 13 ஆம் திகதி கொழும்பு உயர் நீதிமன்றத்திலும் 15 ஆம் திகதி பதுளையிலும் உள்ள நீதிமன்றத்திலும் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு இருக்கின்றது. இவர்கள் 2009 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டவர்களுடன் 14 வருடங்களுக்குப் பிறகு இவ்வாறான ஒரு துன்பியல் சம்பவமொன்று இடம்பெற்றிருக்கின்றது.

அரசியல் கைதிகள் விடுதலை செய்யக்கூடாது என்ற நோக்கில் அரசாங்கம் செயற்படுகின்றதா என்பதை மீண்டும் எடுத்துக் காட்டும் சம்பவமாக இது காணப்படுகிறது. அரசாங்கத்தினுடைய இரட்டை வேடத்தை இது காட்டுகின்றது- என்றார்

# இலங்கை மீது நம்பிக்கையில்லை! சர்வதேச விசாரணையே தேவை

## மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்க தலைவி மனுவல் உதயச்சந்திரா

செப்டம்பர் 07, 2022

தற்போதைய ஜனாதிபதி நல்லாட்சி அரசில் இருந்தார். அப்போது காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் நல்லதொரு முடிவை தருவதாக கூறி இருந்தார். ஆனால் ஒன்றும் நடக்கவில்லை. தற்போது அவர் ஜனாதிபதியாக கண்ணை மூடிக்கொண்டு இருக்கிறார்.

இவ்வாறான சூழ்நிலையில் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு தாய்மார்களும், உறவுகளும் சர்வதேச விசாரணை மட்டுமே எமக்கு வேண்டும் என்ற கோரிக்கையில் உள்ளனர் என மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்க தலைவி மனுவல் உதயச்சந்திரா தெரிவித்தார்.

மன்னாரில் இன்று புதன்கிழமை மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகள் தொடர்பாக சர்வதேச விசாரணையே எமக்கு வேண்டும் என கோரி நாங்கள் கடந்த 13 வருடங்களுக்கு மேலாக சர்வதேசத்திடம் கோரி வருகிறோம்.

இலங்கை அரசில் எவ்வித நம்பிக்கையும் எமக்கு இல்லாத நிலையில் காணாமல், ஆக்கப்பட்ட உறவுகளுக்கு சர்வதேச விசாரணையே தேவை என்ற கோரிக்கையை நாங்கள் முன் வைத்தோம்.

ஆனால் 13 வருடங்களாகியும் எமது கோரிக்கை நிறைவேறவில்லை. எமது கோரிக்கை நிறைவேறும் நிலையில் இலங்கையில் இருந்து ஜெனிவா செல்கின்ற அமைச்சர்களும், அரசு சார்பாக செல்கின்றவர்களும் சர்வதேச விசாரணை தேவையில்லை. உள்நாட்டு விசாரணை வேண்டும் என்று கூறுகின்றனர்.

எதிர்வரும் 51 வது ஜெனிவா கூட்டத்தொடரில் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் உள்ளிட்ட குழுவினர் கலந்து கொள்ள உள்ளனர்.

குறித்த கூட்டத்தொடரில் கலந்து கொள்ள உள்ள இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் இலங்கையின் உள்நாட்டு விசாரணை போதும் என வலியுறுத்த உள்ளார். எனினும் உள்நாட்டு விசாரணையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளாகிய எங்களுக்கு நம்பிக்கை இல்லை.

எத்தனையோ ஆணைக்குழுக்கள் இங்கே வந்து விசாரணைகளை முன்னெடுத்தனர்.ஆனால் எவ்வித நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை. அவர்களின் எங்களுக்கு நம்பிக்கையும் இல்லை. இவ்வாறான நிலையில் நாங்கள் சர்வதேச விசாரணையை வலியுறுத்தி நிற்கின்றோம்.

ஜெனிவா கூட்டத்தொடரின் போது இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம் தொடர்பில் தீர்க்கமான முடிவு எடுக்கப்பட வேண்டும்.

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்காக நாங்கள் சுமார் 2 ஆயிரம் நாட்களுக்கு மேல் வீதியில் நின்று போராடி வருகிறோம்.நீதிக்காகவே நாங்கள் போராடி வருகிறோம்.

நிதிக்காக போராடவில்லை. எமது உறவுகள் குறித்து உண்மையும், நீதியும் எமக்கு தேவை. தற்போதைய வெளிவிவகார அமைச்சராக உள்ள அலி சப்ரி, நீதி அமைச்சராக இருந்த காலத்தில் ஒவ்வொரு மாவட்டமாக சென்று நிதிக்காக எங்களுடன் கலந்துரையாடினார்.




அவர் நீதிக்காக ஒருபோதும் எங்களுடன் கலந்துரையாடவில்லை. இலங்கையில் உள்நாட்டு விசாரணை போதும் என்று கூற அவருக்கு எவ்வித அருகதையும் இல்லை. பாதிக்கப்பட்டவர்கள் நாங்கள். நாங்கள் தான் நிற்கின்றோம் எங்களுக்கு சர்வதேச விசாரணை மடடுமே வேண்டும் என்று.

தற்போதைய ஜனாதிபதி நல்லாட்சி அரசில் இருந்தார். அப்போது காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் நல்லதொரு முடிவை தருவதாக கூறி இருந்தார். ஆனால் ஒன்றும் நடக்கவில்லை. தற்போது அவர் ஜனாதிபதியாக கண்ணை மூடிக்கொண்டு இருக்கிறார்.

இவ்வாறான சூழ்நிலையில் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு தாய்மார்களும், உறவுகளும் சர்வதேச விசாரணை மட்டுமே எமக்கு வேண்டும் என்ற கோரிக்கையில் உள்ளனர்.

# திருக்கோணேஸ்வரர் ஆலய காணி சுற்றுலா அபிவிருத்திக்கு சுவீகரிப்பு!

செப்டம்பர் 09, 2022

வரலாற்றுச் சிறப்புமிக்க திருக்கோணேஸ்வரர் ஆலய பகுதியை சுற்றுலா அபிவிருத்திக்கு உள்வாங்குவதற்கு திட்டமிடப்படுகிறது. இந்த ஆக்கிரமிப்புக்கு தொல்பொருள் திணைக்களகத்தினரும் கிழக்கு மாகாண ஆளுநரும் ஆதரவளிக்கிறார் என ஆலய பரிபாலன சபையினர் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இது தொடர்பில் ஆலய பரிபாலன சபையினர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தமிழரின் தொன்மை நிறைந்த பாடல்பெற்ற சிறப்புத் தலமான திருகோணமலை திருக்கோணேஸ்வராா் ஆலயத்துக்குச் சொந்தமான காணியை உல்லாசத்துறை அபிவிருத்தியின் பெயரால் ஆக்கிரமிக்க தொல்பொருள் திணைக்களகத்தினரால் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. ஆலயத்துக்குச் சொந்தமான 18 ஏக்கர் காணி உள்ளீர்க்க திட்டமிடப்படுகிறது.

இது தொடர்பில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் எதிர்ப்பு எதுவும் தெரிவிக்கப்படவில்லை. தொல்பொருள் திணைக்களகத்தினரும், கிழக்கு மாகாண ஆளுநரும் ஆதரவை வழங்குகிறார்.

எனவே திருக்கோணேஸ்வர ஆலயத்தைப் பாதுகாப்பதற்கு அனைத்துத் தமிழ் மக்களும், இந்து மக்களும் குரல்கொடுக்க வேண்டும் – என்றனர்.

# மட்டக்களப்பு சத்துருக்கொண்டான் படுகொலை 32ஆம் ஆண்டு நினைவேந்தல்!

செப்டம்பர் 09, 2022

இன்று மாலை 6 மணியளவில் மட்டக்களப்பு சத்துருக் கொண்டான் இனப்படுகொலையின் நினைவுத்தூபியடியில் 1990.09.09 அன்று படுகொலை செய்யப்பட்ட 186 அப்பாபித் தமிழர்களின் 32ஆம் ஆண்டு நினைவேந்தல் நடைபெற்றது.

சத்துருக்கொண்டான் பனிச்சியடி கொக்குவில் மற்றும் பிள் ளையாரடி ஆகிய நான்கு கிராமங்களிலிருந்து அழைத்துவரப் பட்ட மக்கள் வயது வேறுபாடின்றி மிருகத்தனமாக படுகொலை செய்யப்பட்டார்கள். இப்படுகொலைக்கான நீதி இதுவரை கிடைக்கவில்லை.











# அரசியல் கைதிகளை தேடி உறவுகள் கவன ஈர்ப்பு பயணம்!

செப்டம்பர் 10, 2022

ஜநா அமர்வு எதிர்வரும் திங்கள் கிழமை ஆரம்பமாகவுள்ள நிலையில் நீண்டகாலமாக சிறைச்சாலைகளில் தடுத்து வைக் கப்பட்டிருக்கின்ற




தமிழ் அரசியல் கைதிகளை சந்திப்பதற்காக அரசியல் கைதி களின் உறவுகள் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு மகசின் சிறைச்சாலைக்கு இன்றைய நாள் சர்வதேச கவனமொன்றை ஈர்த்துக் கொள்ளும் வகையில் பயணத்தை மேற்கொண்டனர்.

குரலற்றவர்களின் குரல் அமைப்பு யாழ் ஊடக அமையத்தில்




இன்று மதியம் 2மணியளவில் நடாத்திய ஊடக சந்திப்புக்கு பின்னர் இந்த பயணத்தை ஒழுங்குபடுத்தப்பட்ட பேருந்தில் மேற்கொண்டனர்.

தேசிய சிறைக் கைதிகள் நாள் செப்டம்பர் 12ஆம் திகதி அனுஷ் டிக்கப்படுகின்ற நிலையில் இந்த பயணம் ஆரம்பிக்கப்பட்டதாக குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் முருகையா கோமகன் தெரிவித்தார்.

கொழும்பு மகசின் சிறைச்சாலையில் தமிழ் அரசியல் கைதிகள் சிலர் உண்ணாவிரதத் தில் ஈடுபட்டுள்ள நிலையில் அரசியல் கைதிகளின் விடுதலைக்கு வலுச்சேர்க்கும் வகையில் அரசியல் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் க.வி. விக் னேஸ்வரன், நாடாளு மன்ற முன்னாள் உறுப்பினர்ளம். கே.சிவாஜிலிங்கம், யாழ் மறை மாவட்ட குருமுதல்வர் ஜெபரட்ணம் அடிகளார், பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான பேரெழுச்சி இயக்க ஒருங்கிணைப்பாளர் வேலன் சுவாமிகள், யாழ் மாநகர பிரதி முதல்வர் து.ஈசன், யாழ் மாநகர சபை உறுப்பினர் வ. பார்த்தீபன், யாழ் மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவு கள் சங்க பிரதிநிதிகள் எனப் பலரும் யாழ் ஊடக அமையத்திற்கு வருகைதந்து பயணத்திற்கு ஆதரவு தெரிவித்தனர்.

# யாழ்ப்பணத்தில் இருந்து கொழும்பு மகசீன் சிறைச்சாலை நோக்கி அரசியல் கைதிகளின் உறவுகள் பயணம்!

செப்டம்பர் 11, 2022

ஐ. நா. அமர்வு எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ள நிலையில் நீண்டகாலமாக சிறைச்சாலைகளில் தடுத்து வைக் கப்பட்டிருக்கின்ற தமிழ் அரசியல் கைதிகளை சந்திப்பதற்காக அரசியல் கைதிகளின் உறவுகள் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு மகசின் சிறைச்சாலைக்கு இன்றைய தினம் (10) சர்வதேச கவனமொன்றை ஈர்த்துக் கொள்ளும் வகையில் பயணத்தை மேற்கொண்டனர்.

குரலற்றவர்களின் குரல் அமைப்பு, யாழ் ஊடக அமையத்தில் இன்று (10) மதியம் 2மணியளவில் நடாத்திய ஊடக சந்திப்புக்கு பின்னர் இந்த பயணத்தை ஒழுங்குபடுத்தப்பட்ட பேருந்தில் மேற்கொண்டனர்.

தேசிய சிறைக் கைதிகள் தினம் செப்டம்பர் 12ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுகின்ற நிலையில் இந்த பயணம் ஆரம்பிக்கப் பட்டதாக குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங் கிணைப்பாளர் முருகையா கோமகன் தெரிவித்தார்.

















கொழும்பு மகசின் சிறைச்சாலையில் தமிழ் அரசியல் கைதிகள் சிலர் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள நிலையில் அரசியல் கைதிகளின் விடுதலைக்கு வலுச்சேர்க்கும் வகையில் அரசியல் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் க.வி.விக்னேஸ்வரன், நாடாளு மன்ற முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், யாழ் மறை மாவட்ட குருமுதல்வர் ஜெபரட்ணம் அடிகளார், பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான பேரெழுச்சி இயக்க ஒருங்கிணைப்பாளர் வேலன் சுவாமிகள், யாழ் மாநகர பிரதி முதல்வர் து.ஈசன், யாழ் மாநகர சபை உறுப்பினர் வ.பார்த்தீபன், யாழ் மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகள் சங்க பிரதிநிதிகள் எனப் பலரும் யாழ் ஊடக அமையத்திற்கு வருகைதந்து பயணத்திற்கு ஆதரவு தெரிவித்தனர்.

அரசியல் கைதிகளை பார்வையிடுவதற்கு, உறவினர்கள் சென்று வருவதற்கான போக்குவரத்து ஒழுங்குகளை கனேடிய தமிழர் பேரவை யாழ் மாநகர முதல்வர் வி.மணிவண்ணன், மாநகர உறுப்பினர் பார்த்தீபன் ஊடாக ஒழுங்கு செய்திருந் தமை குறிப்பிடத்தக்கது.

# முதலில் இனப்பிரச்சினை பிறகு இந்தி!

செப்டம்பர் 14, 2022

இந்தியா இந்தி மொழியை திணிப்பதற்கு முன்பாகவோ அல்லது மதம் சார்ந்த நிகழ்ச்சிகளை அரங்கேற்ற முன்பாக முதலில் எங்களுடைய தேசிய பிரச்சினையாக இருக்கின்ற உரிமைப் பிரச்சனைகளில் தலையிட வேண்டும் என தமிழ் பண்பாட்டுப் பேரவையின் ஒருங்கிணைப்பாளர் சு.நிஷாந்தன் தெரிவித்தார்.

யாழ் ஊடக அமையத்தில் இன்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், வடக்கு கிழக்கில் தமிழ் மொழியை மேம்படுத்துவதற்கான எந்த திட்டத்தையும் இந்தியா மேற் கொண்டதாக தெரியவில்லை.

தமிழ் சார்ந்த விஷயங்களை புறக்கணித்து தங்களுடைய நிகழ்ச்சி நிரல்களை அரங்கேற்றும் வகையில் மதம் சார்ந்த விடயங்களையும் மொழி சார்ந்த விடயங்களையும் இங்கு திணித்துக் கொண்டிருக்கின்றனர்.

13ம் திருத்தத்தை அமுல்படுத்த இந்தியா வலியுறுத்துகின்றது. ஆனால் 13ம் திருத்தத்தை முற்றுமுழுதாக தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். இதனை இந்தியா புரிந்துகொள்ள




வேண்டும்.

இந்தியாவிற்கும் இந்தியாவின் ஆதரவில் இயங்குகின்றவர் களுக்கும் நாம் சொல்கின்ற விடயம், 13 என்பது தமிழ் மக்களின் இறுதி தீர்வு கிடையாது. இடைக்கால அரசாங்கத்தில் 13ஆம் திருத்தத்தை நாங்கள் நடைமுறைப்படுத்த முடியும். ஆனால் அது இறுதித் தீர்வல்ல.

இலங்கை இந்தியா ஒப்பந்தத்தில் வட கிழக்கு இணைத் திருப்பதாக எழுதப்பட்டிருந்தது. இந்திய தூதரகமோ இந்திய சார் பானவர்களோ, இந்தி மொழியை திணிப்பதற்கு முன்பாகவோ அல்லது மதம் சார்ந்த நிகழ்ச்சிகளை அரங்கேற்ற முன் பாகவோ முதலில் எங்களுடைய தேசிய பிரச்சினையாக இருக்கின்ற உரிமைப் பிரச்சனைகளில் இந்தியா தலையிட வேண்டும். அவற்றை செய்ததன் பின்னர் வடகிழக்கை இணைத்து நான்கு வருடங்களாக இடம்பெறாமல் உள்ள மாகாண சபை தேர்தலை நடத்துங்கள்.

அந்த மாகாணசபை ஊடாக காணி பொலிஸ் அதிகாரங்களை பெற்றுக் கொடுத்துவிட்டு அதன் பின்னர் உங்கள் நிகழ்வுகளை இங்கே வந்து கொண்டாடுங்கள். நாங்களும் இணைந்து கொண்டாடுகிறோம். அதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை.

பயங்கரவாதத் தடை சட்டம் போன்றவற்றை நீக்குவதற்கு இந்தியா என்ன நடவடிக்கை எடுத்திருக்கின்றது என்ற கேள்வி எழுகின்றது. இந்தியா வடகிழக்கில் ஆதிக்கத்தை செலுத்த வேண்டுமாக இருந்தால் இவ்வாறான திணிப்புகளை நிறுத்தி நமது கலாசாரத்தை சிதைப்பதை நிறுத்திக் கொள்ள வேண்டும். அடிப்படை பிரச்சனைகளை தீர்த்து விட்டு ஏனைய விடயங் களை பார்த்துக் கொள்ளலாம் என்றார்.

ஜெனீவாவில்ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 51 ஆவது கூட்டத்தொடர் ஆரம்பமான நிலையில் அங்கு கருத்து தெரிவித்த இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியின் கருத்துக்கு கண்டனம் தெரிவித்தார்.

# பூநகரியில் பெற்றோரும் உண்ணாவிரதத்தில்!

செப்டம்பர் 14, 2022

சிறைகளில் உண்ணாவிரத போராட்டத்தை தொடரும் தமது பிள்ளைகளிற்கு ஆதரவாக பெற்றோரும் உணவு தவிர்ப்பு போராட்டத்தை இன்று ஆரம்பித்துள்ளனர்.

பூநகரி முட்கொம்பன் பகுதியிலுள்ள தங்களது வீடுகளில் குடும்பங்கள் இணைத்து இன்று முதல் தொடர் உணவு தவிர்ப்பு போராட்டத்தை ஆரம்பித்துள்ளன.

முன்னதாக வடக்கு ஆளுநர் அலுவலகம் முன்னதாக குடும்பங் கள் உணவு தவிர்ப்பு போராட்டமொன்றை ஆரம்பித்திருந்த போதும் அம்முயற்சி வெற்றி பெற்றிருக்கவில்லை.



# யாழ்ப்பாணம், முல்லைத்தீவிலும் போராட்டங்கள்!

செப்டம்பர் 14, 2022




மனித உரிமை செயற்பாட்டாளர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், நிறுவன பணியாளர்கள் உள்ளிட்ட தரப்புகள் மீது அரச புலனாய்வு பிரிவினர் உள்ளிட்ட பல்வேறு தரப்புகளினாலும் ஏற்படுத்தப்படுகின்ற அச்சுறுத்தல்களுக்கு எதிராக முல்லைத்தீவில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவினுடைய ஏற்பாட்டில், இன்று காலை முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் இடம்பெற்றிருந்தது.

அதேவேளை பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழு அமைப்பினால் யாழ்ப்பாணத திலும் இன்றைய தினம் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

யாழ் மாவட்ட செயலகத்துக்கு முன்பாக இன்று காலை 10 மணியளவில் ஒன்று கூடிய போராட்டக்காரர்கள் மனித உரிமைகளுக்கு மதிப்பளி, எமது நிலம் எமக்கு வேண்டும், பயங்கரவாத தடைச் சட்டதை நீக்கு, வடக்கு கிழக்கில் மனித உரிமை காவலர்களை அச்சுறுத்துவதை நிறுத்து, அரசு மனித உரிமை அனைவருக்கும் சொந்தமானது என்ற பதாகைகளை தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# ஐநாவில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி பிதற்றியிருப்பதாக தெரிவித்துள்ளார்! சி.வி. விக்கினேஸ்வரன்

செப்டம்பர் 13, 2022

ஜநாவில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் பிதற்றியிருப்பதாக தெரிவித்துள்ளார் சி.வி.விக்கினேஸ்வரன்.

சிங்களத்தில் ஒரு முது மொழி உண்டு “கொஹட யன்னே. மல்லே பொல்” என்பார்கள். அதாவது எங்கே போகின்றாய் என்று கேட்டால் பையிலே தேங்காய் என்று மறு மொழி சொல்வது போல் 46/1 பிரேரணையை ஏன் நடைமுறைப்படுத்தவில்லை என்று கேட்டதற்கு சட்டத்தில் மாற்றம் ஏற்படுத்த இருப்பதாகவும் பொருளாதார ரீதியாக அதைச் செய்வோம் இதைச் செய்வோம் என்றும் கூறியுள்ளார்.

எனினும் நடைமுறைப்படுத்தாமைக்கு ஒரேயொரு காரணம் அவரின் பேச்சில் தென்படுகிறது. அதாவது சர்வதேச நீதிபதிகள் போர்க்குற்ற விசாரணையை நடத்துவது நாட்டின் இறைமையைப் பாதிக்கும் என்றுள்ளார். அது வெறும் பிதற்றல்.

முதலாவது இலங்கை அரசாங்கம் உள்ளடங்கலாகவே 46/1 பிரேரணை சென்ற ஆண்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது. இலங்கை அதை ஏற்க முடியாது என்று அன்று வெளிநடப்பு செய்யவில்லை.

இரண்டாவது ஏப்ரில் 21ந் திகதிய உயிர்த்த ஞாயிறு விசாரணைக்காக பிறநாட்டு விசாரணையாளர்களை அரசாங்கம் தருவித்து விசாரணை நடத்தியது. அப்போது நாட்டின் இறைமை எங்கு போனது?

மூன்றாவதாக போர்க்காலத்தில் இஸ்ரேலிய மோசாட் போன்ற அமைப்புக்களை இங்கு தருவித்து அரசாங்கத்திற்குச் சார்பாக புலிகளுக்கு எதிராகப் போரில் ஈடுபட வைத்த போது எமது நாட்டின் இறைமை எங்கு போனது?

நான்காவதாக உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்பு பற்றி Shani Abeysekera என்ற சிரேஷ்ட பொலிஸ் அலுவலர் விசாரணை செய்த போது குறித்த குண்டு வெடிப்பில் இராணுவத்தினரின் பங்கு இருந்தமை அவருக்குத் தெரிய வந்தது. அதுபற்றி இராணுவத்தினருடன் பேசிய போது அவர்கள் தமக்கு இட்ட ஆணைகளையே தாம் நிறைவேற்றினார்கள் என்று கூறியுள்ளார்கள். ஆகவே குண்டு வெடிப்பில் அரசாங்கத்தின் பங்கு இருந்திருக்கின்றது. இதையே பேராயர் மல்கம் இரஞ்சித்தும் கூறி வருகின்றார்.

ஆனால் விசாரணை பற்றிய அறிக்கை வெளிவந்ததும் Shani Abeysekera வை சிறையில் அடைத்தார்கள்.

இவ்வாறான ஒரு நாட்டில் உள்நாட்டு விசாரணையின் ஊடாக உண்மை புலப்படுமா? உண்மையை வெளிவர அரசாங்கத்தினர் இடம் அளிப்பார்களா?



முஸ்லீமான அலி சப்ரியை வைத்து இராஜபக்ச அரசாங்கம் நாடகமாடுகிறது. இரணில் இராஜபக்சக்களின் முகவரே. நடப்பது போர்க் குற்றவாளிகளின் அரசாங்கமே. அதனால்த்தான் இறைமை பற்றி அலி சப்ரி பேசி சர்வதேச விசாரணையை நடத்த விடாமல் செய்யப் பார்க்கின்றார். ஆனால் அந்தப் பருப்பு வேகாது என்றே நான் நினைக்கின்றேன் எனவும் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் எனவும் தெரிவித்துள்ளார்.

# கொழும்பு மகசின் சிறைச்சாலையில் உணவு தவிர்ப்பில் ஈடுபட்டுவரும் இளைஞர்களுக்கு ஆதரவாக யாழில்!

செப்டம்பர் 12, 2022

கொழும்பு மகசின் சிறைச்சாலையில் உணவு தவிர்ப்பில் ஈடுபட்டுவரும் இளைஞர்களினுடைய உறவினர்கள் யாழ்ப்பாணத்திலுள்ள வடமாகாண ஆளுநர் செயலகம் முன்பாக இன்று(12) காலை முதல் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறனர்.










# கனடாவில் சஸ்கட்சுவான மாகாணத்தில் தொடர் தாக்குதல்கள்: 10 பேர் பலி!

செப்டம்பர் 05, 2022

கனடாவில் ஞாயிற்றுக்கிழமை நடந்த வெறித்தனமான கத்திக்குத்து சம்பவத்தில் 10 பேர் கொல்லப்பட்டதுடன் மேலும் 15 பேர் காயமடைந்துள்ளனர் எனக் காவல்துறையினர் அறிவித்தனர்.

கத்திக்குத்தில் ஈடுபட்ட சந்தேக நபர்களான டேமியன் சாண டர்சன் (வயதுத 31) மற்றும் மைல்ஸ் சாண்டர்சன் (வயது 30) இருவரைக் காவல்துறையினர் தேடிக்கொண்டிருக்கின்றனர்.

இவருவரும் ஆபத்தானவர்கள் என்பதால் குடியிருப்பாளர்கள் மிகவும் விழிப்புடன் இருக்குமாறும் வீட்டை விட்டு வெளியே செல்லவேண்டாம் என்றும் யாரையும் வீட்டுக்குள் அனுமதிக்க வேண்டாம் என்றும் வீதியில் செல்லும் போது யாரையும் வாகனத்தில் ஏற்ற வேண்டாம் என்றும் காவல்துறை வலியுறுத்தியுள்ளது.

தொலைதூர பழங்குடி சமூகமான ஜேம்ஸ் ஸ்மித் க்ரீ நேஷன் மற்றும் அருகிலுள்ள வெல்டனில் 13 இடங்களில் இச்சம்பவம் நடந்துள்ளது.



ஜேம்ஸ் ஸ்மித் க்ரீ நேஷனில் அவசரகால நிலை அறிவிக்கப்பட்டது. வெல்டன் கிராமத்தின் வடகிழக்கில் சுமார் 2,000 குடியிருப்பாளர்கள் வசிக்கும் சமூகத்தில் வெறும் 200 பேர் மட்டுமே வசிக்கின்றனர்.

ஏராளமான சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு கொலையாளிகள் தேடப்பட்டு வருகின்றனர்.




சந்தேக நபர்கள் ஞாயிற்றுக்கிழமை மதிய உணவு நேரத்தில் ரெஜினாவில் உள்ள பொதுமக்களால் கடைசியாகப் பார்க்கப் பட்டனர், மேலும் அவர்கள் கருப்பு நிற நிசான் ரோக் காரில் பயணித்திருக்கலாம் என்று அதிகாரி பிளாக்மோர் கூறினார்.

அவர்கள் ஆயுதம் ஏந்தியவர்களாகவும் ஆபத்தானவர்களாகவும் கருதப்படுகிறார்கள். சந்தேகப்படும் நபர்களையோ அல்லது அவர்களின் வாகனத்தையோ நீங்கள் கண்டால், அவர்களை அணுக வேண்டாம், உடனடியாக அந்தப் பகுதியை விட்டு வெளியேறி 911க்கு அழைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# 10 பேர் கொலை இதயத்தை உடைக்கும் செயல் பிரதமர் ஜஸ்டின் ரூடோ வருத்தம் தெரிவிப்பு!

செப்டம்பர் 05 , 2022

ஞாயிற்றுக்கிழமை கனடாவின் சஸ்காட்சுவான் மாகாணத்தில் குறைந்தது 10 பேர் கொல்லப்பட்டனர் மற்றும் 15 பேர் காயமடைந்தனர். இந்நிலையில் இந்த சம்பவம் “கொடூரமான மற்றும் இதயத்தை உடைக்கும் சம்பவம் என கனேடிய பிரதமர் ஜஸ்டின் ரூடோ வருத்தம் தெரிவித்துள்ளார்.

“இன்று சஸ்காட்சுவானில் நடந்த தாக்குதல்கள் கொடூரமானவை மற்றும் இதயத்தை உடைக்கும் செயல் என்றும் அவர் (04.08.2022) ட்வீட் செய்துள்ளார்.

கனேடிய மாகாணமான சஸ்காட்சுவான் பகுதியில் கத்திக் குத்துத் தாக்குதல்கள் நடத்தப்பட்டதில் குறைந்தது 10 பேர் கொல்லப்பட்டனர் மற்றும் 15 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்நிலையில் சஸ்காட்சுவானில் இன்று நடந்த தாக்குதல்கள் கொடூரமானவை மற்றும் இதயத்தை உடைப்பவை. நேசிப்பவரை இழந்தவர்கள் மற்றும் காயமடைந்தவர்களைப் பற்றி நான் நினைக்கிறேன். நேசிப்பவரை இழந்தவர்கள் மற்றும் காயமடைந்தவர்களைப் பற்றி நான் நினைக்கிறேன் என்றும் பிரதமர் ஜஸ்டின் ரூடோ உருக்கமாக கூறியுள்ளார் .

அத்துடன் அந்த சம்பவம் தொடர்பில் நாங்கள் நிலைமையை உன்னிப்பாகக் கண்காணித்து வருகிறோம், மேலும் உள்ளூர் அதிகாரிகளின் புதுப்பிப்புகளைப் பின்பற்றுமாறு அனைவரையும் கேட்டுக்கொள்கிறோம்



என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இலங்கைக்கான பயண ஆலோசனையை கனடா தளர்த்தியது!

செப்டம்பர் 06, 2022

இலங்கைக்கான பயண ஆலோசனையை கனடா தளர்த்தியுள்ளது.

இலங்கைக்கான பயண ஆலோசனையை புதுப்பித்து இலங்கையை செம்மஞ்சள் பட்டியலில் இருந்து மஞ்சள் நிற பட்டியலுக்கு குறைத்துள்ளது.

முன்னதாக இலங்கைக்கு அத்தியாவசியமற்ற பயணங்களை தவிர்க்குமாறு கனடா தமது நாட்டு பிரஜைகளுக்கு அறிவுறுத்தியிருந்தது. அதனை தற்போது தளர்த்தி அதிக அவதானத்துடன் செயற்படுமாறு தமது நாட்டு பிரஜைகளுக்கு கனடா தெரிவித்துள்ளது.

இலங்கையில் எரிபொருள், உணவு, மருந்துகள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களுக்கு தொடர்ந்தும் தட்டுப்பாடு நிலவுவதாகவும் இதன் காரணமாக இலங்கை மஞ்சள் பட்டியலில் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஒகஸ்ட் மாதத்துக்கு பின்னர் பிரான்ஸ், சுவிட்சர்லாந்து, பிரித்தானியா மற்றும் நோர்வே உட்பட பல ஐரோப்பிய நாடுகள் இலங்கைக்கான பயண கட்டுப்பாடுகளை தளர்த்தியுள்ளன.

# கனேடிய குடியுரிமை பெறுவோர் எடுத்துக்கொள்ளும் உறுதமொழியில் மாற்றம்!

செப்டம்பர் 10, 2022

பிரித்தானிய மகாராணியாரின் மறைவு பிரித்தானியாவில் மட்டுமல்ல, அவரது ஆட்சியின் கீழ் இருந்த பல நாடுகளில் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்த உள்ளது.

அதனால் பெரும் செலவு ஏற்படும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது.

மன்னர் உருவம் பொறித்த கரன்சி நோட்டுகளை அச்சிடுதல், மகாராணியாரின் உருவம் பொறித்த நாணயங்களை மாற்றுதல், தேசிய கீதத்தில் மாற்றம் என பல்வேறு மாற்றங்கள் செய்யப்பட உள்ளன.



கனடாவைப் பொருத்தவரை, புதிதாக குடியுரிமை பெறுவோர் விடயத்திலும் ஒரு மாற்றம் செய்யப்படவேண்டியுள்ளது.

அதாவது, இதுவரை மகாராணியின் பெயரால் குடியுரிமை உறுதிமொழி எடுத்துக்கொள்வோர், இனி மன்னர் சார்லஸ் பெயரால் உறுதிமொழி எடுத்துக்கொள்ளவேண்டியிருக்கும்.

ஆனாலும், கனேடிய புலம்பெயர்தல், அகதிகள் மற்றும் குடியுரிமை அமைப்பு இந்த மாற்றம் எப்போது அமுலுக்கு வரும் என்பது குறித்த எந்த அறிவிப்பையும் இதுவரை வெளியிடவில்லை.

# கனடா சஸ்கட்சுவான் கொலைச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேக நபர் கைதின் பின்னர் உயிரிழப்பு!

செப்டம்பர் 08, 2022



சஸ்கட்ச்வானில் இடம்பெற்ற படுகொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டு சில மணி நேரத்தில் உயிரிழந்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை சஸ்கட்ச்வானின் சிறிய கிராமங்களான ஜேம்ஸ் க்ரீ மற்றும் வெல்டொன் ஆகிய பகுதிகளில் இடம்பெற்ற தாக்குதலில் 10 பேர் கொல்லப்பட்டதுடன் 18 பேர் காயமடைந்துள்ளனர்.

டேமியன் சன்டர்சன் மற்றும் மயில்ஸ் சன்டர்சன் ஆகியோர் இந்த தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என அறிவிக்கப்பட்டது.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய குறித்த சகோதரர்களில் ஒருவரான டேமியன் சடலமாக மீட்கப்பட்டார்.

பின்னர் நான்கு நாட்களாக தேடப்பட்டு வந்த நிலையில் மயில்ஸ் சன்டர்சனை பொலிஸார் மடக்கிப் பிடித்தனர்.

எவ்வாறெனினும் நோய்வாய்ப்பட்டிருந்த நிலையில் மயில்ஸ் சன்டர்சன் உயிரிழந்து விட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கைது செய்யப்பட்ட சிறிது நேரத்தில் மயில்ஸ் நோய்வாய்ப்பட்டதாகவும் பொலிஸார் உயிர்ப்பு காப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அம்பியூலன்ஸ் மூலம் சஸ்கடூன் வைத்தியசாலைக்கு மயில்ஸ் அழைத்துச செல்லப்பட்ட போதிலும் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.

மயில்ஸ் என்ன காரணத்தினால் உயிரிழந்தார் என்பது பற்றிய விபரங்களை வெளியிட முடியாது எனவும் உடற்கூற்று பரிசோதனையின் பின்னரே தகவல்களை வெளியிட முடியும் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மயில்ஸ் சன்டர்சனை கைது செய்ய முயற்சித்த போது பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடாத்தியிருந்தனர் என தெரிவிக்கப்படுகின்றது.

சஸ்கட்ச்வானின் கிராமிய பகுதி வீதியொன்றிற்கு அருகாமையில் குறித்த நபரை பொலிஸார் மடக்கிப் பிடித்துள்ளனர்.

# கனடாவில் வட்டி வீதம் உயர்வு, வீட்டு அடகுக்கடன் பெற்றவர்களுக்கு ஏற்பட்டுள்ள சிக்கல்!

செப்டம்பர் 08, 2022




கனடாவில் மீண்டும் வட்டி வீதம் உயர்த்தப்பட்டுள்ளது. கனேடிய மத்திய வங்கி வட்டி வீதத்தை 0.75 புள்ளிகளினால் அதிகரித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, 2.5 வீதமாக காணப்பட்ட வட்டி வீதம் தற்பொழுது 3.25 வீதமாக உயர்த்தப்பட்டுள்ளது. கடந்த மார்ச் மாதம் முதல் இதுவரையில் மத்திய வங்கி வட்டி வீதத்தினை 300 புள்ளிகளினால் உயர்த்தியுள்ளது.

1990களின் நடுப் பகுதியின் பின்னர் முதல் தடவையாக இவ்வாறு வட்டி வீதம் வேகமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

உக்ரேய்ன் போர், சீனாவின் கோவிட் முடக்கம் போன்ற ஏதுக்களினால் இவ்வாறு வட்டி வீதம் உயர்த்தப்பட்டுள்ளது. கனடாவில் வீட்டு அடகுக் கடன் பெற்றுக் கொண்டவர்கள் சிக்கல்களை எதிர்நோக்க நேரிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

உலக அளவில் ஏற்பட்டுள்ள பணவீக்க நிலைமைகளினால் கனேடிய மத்திய வங்கி அண்மைய மாதங்களில் பல தடவைகள் வட்டி வீதங்களை உயர்த்தியுள்ளது.

இந்த ஆண்டில் இதுவரையில் ஐந்து தடவைகள் வங்கி வட்டி வீதங்களை உயர்த்தியுள்ளது.

இவ்வாறான ஓர் பின்னணியில் மாறும் அடகுக் கடன் வட்டி வீதம் என்ற அடிப்படையில் அடகுக் கடன் பெற்றுக் கொண்டவர்கள் நெருக்கடிகளை எதிர்நோக்க நேரிடும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வட்டி வீத அதிகரிப்பானது வீட்டு அடகுக் கடன் பெற்றுக் கொண்டவர்களின் மாதாந்த அடகுக் கடன் தொகையை மேலும் அதிகரிக்கும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கனடாவில் வீட்டு அடகுக் கடன் பெற்றவர்களுக்கு ஏற்பட்டுள்ள சிக்கல்? ; ஐவெநசநளவ சுயவந உமைந ஊழரடன ஐஅியஉவ லுழரச ஆழசவபயபந

மத்திய வங்கியின் வட்டி வீதத்திற்கு இணங்க வங்கிகள் மற்றும் ஏனைய நிதி நிறுவனங்களுக்கும் கொடுகடன் வட்டி வீதங்களை உயர்த்தும் என்பது குறிப்பிடத்தக்கது.

நேற்றைய தினம் மத்திய வங்கியின் வட்டி வீதமானது 3.25 வீதமாக உயர்த்தப்பட்டது. மாறும் அடகுக் கடன் தொகை நிபந்தனைக்கு உட்பட்டு அடகுக் கடன் பெற்றுக்கொண்ட வாடிக்கையாளர்கள் இந்த வட்டி வீத அதிகரிபிற்கு ஏற்ற வகையில் கூடுதல் தொகையை செலுத்த நேரடும் என்பது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக ஆயிரக் கணக்கான டொலர்களை கூடுதலாக கடன் பெற்றுக்கொண்டவர்கள் செலுத்த நேரிடும் என தெரிவிக்கப்படுகின்றது.

# "தலைவர் வந்தால் தான் கொடுப்போம்"

சொந்த தேசத்தின் போராட்டத்திற்காக, கனடா உலகத் தமிழர் இயக்கத்தில் 2004 இன் இறுதிப்பகுதியில் (கருணா விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து விலகிய காலம்) செயற்படாத பொறுப்பாளராக பொறுப்பேற்ற புங்குடுதீவை பிறப்பிடமாகவும், கனடா மொன்றியலை வதிவிடமாகவும் கொண்டவரான கிராஞ்சிதரன் சண்முகலிங்கம் என்ற இயற்பெயர் கொண்ட வரும் "தமிழ்" என்னும் புனை பெயரில்கனடாவில்வலம் வருபவரும், கனடாவில் 2004ம் ஆண்டுக்குப்பின் கனடா மக்களிடம் சேகரிக்கப் பட்ட நிதியும் சரி, இயக்கத்தின் (தமிழ் மக்களின்) சொத்துகள் முக்கால் பங்கிற்கு மேல் விற்பனை செய்யப்பட்ட பணமாயினும் சரி, எந்தப் பணமும் 2004ம் ஆண்டிற்குப்பின் இயக்கத்திற்கு (மக்கள்ளுக்கு) சென்றடையவில்லை என்பது உறுதிய கியுள்ளது.

எனவே இவ்வளவு மில்லியன் கணக்கான பணம் இவரிடமும், நிதிப்பொறுப்பாளராகவிருந்தவரிடமும், மற்றும் இவர்களுடன் நெருக்கமாக நின்று செயற்பட்டவர்களிடமும் - சேர்க்கப்பட்ட மற்றும் விற்பனை செய்யப் பட்ட சொத்துக்களின் நிதியும் தேங்கியுள்ளது. இன் நிதிகளுக்கான நீதிகிடைக்கும் வரை செய்திகள் வெளி வந்து கொண்டே இருக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம். தற்போது வீடு விற்பனை என்னும் வியாபாரத்திற்குள்ளும் இவர்களில் பலர் புகுந்துள்ளார்கள் என்றும் அறியப்படுகிறது. இன் நிதிகளில் நூற்றில் ஒரு பங்கையாவது, தங்கள் உயிர்களை துச்சமென நினைத்து களத்தில் நின்று போராடி, கை, கால், கண், போன்ற அங்கங்களை இழந்தவர்களுக்கு கொடுத்துதவ லாமே! பல ஆயிரக் கணக்கான பொற்றோரை இழந்து நிற்கும் தமிழீழத்தின் எதிர்கால குழந்தைகளின் கல்வி மற்றும் வாழ்வாதரம் போன்ற வற்றுக்கும் துணை நிற்கலாமே!

**"தலைவர் வந்தால் தான் கொடுப்போம்"**

எனும் சொற்பதத்தை சொல்லிக்கொண்டு எத்தனை காலம் தான் மக்களை ஏமாற்றி வண்டியை ஓட்டுவீர்கள்? காலம் ஒரு நாள் பதில் கூறும்.

- உமாகரன் - ஐரோப்பா

# தமிழக செய்திகள்



## 6 தமிழர்கள் 32 ஆண்டுகளாக சிறையில் தவிப்பு!

செப்டம்பர் 01, 2022

2002ஆம் ஆண்டில் குசராத் மாநிலத்தில் முசுலீம்களுக்கு எதிராக இந்து வெறியர்கள் நடத்திய வன்முறை வெறியாட்டத்தின் போது சிறு குழந்தைகள், பெண்கள், முதியவர்கள் உட்பட ஆயிரக்கணக்கான முசுலீம்கள் பதறப்பதறப் படுகொலை செய்யப்பட்டனர்.

முசுலீம்களுக்குச் சொந்தமான 20ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீடுகள் மற்றும் கடைகள் 360 மசூதிகள் அழிக்கப்பட்டன. ஒன்றரை இலட்சத்திற்கும் மேற்பட்ட முசுலீம்கள் அகதிகளாக வெளியேறினர். இக்கலவரத்தில் அகமதாபாத் அருகில் உள்ள ரன்தீக்பூர் என்னும் கிராமத்தைச் சேர்ந்த பில்கிசு பானு என்னும் 21வயது இளம்பெண் 11 வெறியர்களால் கூட்டுப் பாலியல் வன்முறைக்கு ஆளானார். அப்போது அவர் ஐந்து மாத கர்ப்பிணியாக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அவரின் மூன்று வயது குழந்தை உள்பட அவர் குடும்பத்தினரைச் சேர்ந்த 14பேர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

இந்தியாவில் மட்டுமல்ல, உலக நாடுகளையே இச்செய்தி பேரதிர்ச்சிக்குள்ளாக்கிற்று. உலகெங்கும் எழுந்த கண்டனத்தின் விளைவாக சிலர் மீது வழக்குகள் தொடுக்கப்பட்டன. பில்கிசு பானு வழக்கில் 11பேர் கைது செய்யப்பட்டனர். ஆனால் இந்த வழக்கு விசாரணை நேர்மையாக நடைபெறாது என்பதால் உச்சநீதிமன்றம் தலையிட்டு இந்த வழக்கை மும்பைக்கு மாற்றியது. 2008ஆம் ஆண்டு குற்றவாளிகள் 11பேருக்கும் மும்பை சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றம் ஆயுள் தண்டனை விதித்தது. இவர்கள் கோத்ரா கிளைச் சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர்.

14 ஆண்டுகள் மட்டுமே சிறையிலிருந்த இக்கொலைகாரர்கள் இவ்வாண்டு ஆகசுடு 15 சுதந்திர நாளில் குசராத் பா.ச.க. அரசு விடுதலை செய்துவிட்டது. இவர்களை விடுதலை செய்யும் பிரச்சனையில் பா.ச.க. அரசு எவ்வளவு வஞ்சகமாகவும், விரைவாகவும் செயல்பட்டிருக்கிறது என்பதை கீழே தரப்பட்ட விவரங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

1.13.05.22 - இந்த 11 பேரின் விடுதலைக்கான மனுவில் உச்சநீதிமன்றம் “குசராத் சிறைத்துறையின் தலைமை அதிகாரி சிறை ஆலோசனைக் குழுவின் கருத்தை அறிந்து முடிவெடுக்கலாம்” எனத் தீர்ப்பளித்தது.

2. 04.06.22 - கோத்ரா சிறை அதிகாரி அகமதாபாத் சிறையின் அதிகாரிக்கு இந்த 11பேர் விடுதலை குறித்த அறிக்கையை அனுப்பினார்.

3.09.06.22 - அகமதாபாத் சிறை அதிகாரி இந்த அறிக்கையை குசராத் உள்துறைக்கு அனுப்பிவைத்தார். சிறை ஆலோசனைக்குழுவிற்கு இந்த அறிக்கை அனுப்பப்பட்டது. இக்குழுவிற்கு அம்மாவட்ட ஆட்சியர் தலைவராகவும், பா.ச.க.வைச் சேர்ந்த இரண்டு சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர், கோத்ரா சிறையின் அதிகாரி, மாவட்ட சமூகநல அதிகாரி, மாவட்ட நீதிபதி ஆகியோர் உறுப்பினர்கள். அதிகாரிகளையும், பா.ச.க. சட்டமன்ற உறுப்பினர்களை மட்டுமே கொண்ட இந்த ஆலோசனைக் குழு 11பேரையும் விடுதலை செய்யவேண்டும் என மாநில உள்துறைக்கு அறிக்கை அனுப்பியது.

4.12.07.22-11பேரையும் விடுதலை செய்வதற்கான ஆணையை குசராத் அரசு பிறப்பித்தது.

5.15.08.22 – 11பேரும் விடுதலை செய்யப்பட்டனர்.

குசராத் அரசு எவ்வளவு விரைவாக செயல்பட்டிருக்கிறது என்பதை மேலே கூறப்பட்டுள்ள செய்திகள் எடுத்துக்காட்டுகின்றன.

ஆனால், 2018ஆம் ஆண்டில் ஒன்றிய அரசு பாலியல் வன்கொடுமை, மிகக்கொடூரமான படுகொலைகள் செய்பவர்கள் உட்பட யாரையும் தண்டனை குறைப்பு வழங்கி விடுதலை செய்யக் கூடாது என நாடாளுமன்றத்தில் சட்டம் இயற்றியுள்ளது. இந்த உண்மையை அடியோடு மறைத்து இந்த 11பேர்களும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.



அறுவர் விடுதலை

இராசீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பெற்ற ஆறு பேர் 32 ஆண்டுகளை கடந்தும் இன்னமும் சிறையில் வாடுகின்றனர். இவர்களை விடுதலை செய்ய வேண்டுமென்று தமிழக அமைச்சரவை பரிந்துரை செய்தும், அதை மாதக் கணக்கில் ஆளுநர் கிடப்பில் போட்டு, பின்னர் இப்போது குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. ஆனாலும் இன்னமும் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை.

இராசீவ் படுகொலையில் இந்த 6பேருக்கும் நேரிடையான எந்தத் தொடர்பும் இல்லை என்பது உச்சநீதிமன்றத்தில் நிலைநிறுத்தப்பட்ட பிறகும் நாடெங்கிலும் உள்ள மனித உரிமை ஆர்வலர்களும் மக்களும் இவர்களின் விடுதலைக்காக குரல் கொடுத்தும்கூட, செவிசாய்க்க மறுக்கும் பா.ச.க. அரசு தனது கட்சியை சேர்ந்தவர்கள் என்பதினால் குசராத் மாநில குற்றவாளிகளை உடனடியாக விடுதலை செய்துள்ளது.

## சீனாவின் கையாள் சிங்களத்திற்கு இந்தியா உதவி!

### பழ. நெடுமாறன்

செப்டம்பர் 01, 2022

மிக நவீனமான தொழில்நுட்ப வசதிகளைக் கொண்ட சீனாவின் உளவுக் கப்பல் இலங்கை அம்பாதோட்டை துறைமுகத்திற்கு வரவிருப்பதற்கு இந்திய அரசு மிகக் கடுமையான எதிர்ப்புத் தெரிவித்தது.

ஆனாலும் ஆகசுடு 16ஆம் தேதி அன்று அந்தக் கப்பல் திட்டமிட்டபடி இலங்கை துறைமுகத்திற்கு வந்து சேர்ந்தது.

அதே காலகட்டத்தில் இதுபோன்ற உளவுக் கப்பலை சீனாவிடமிருந்து பெற்ற பாகித்தான் அந்தக் கப்பலை இலங்கையில் உள்ள கொழும்புத் துறைமுகத்திற்கு அனுப்பி வைத்துள்ளது. சீனாவில் தயாரிக்கப்பட்டுள்ள இந்த இரு உளவுக் கப்பல்களின் மூலம் இந்தியா முழுமையிலும் உள்ள படைத் தளங்கள், விமானத் தளங்கள், ஏவுகணைத் தளங்கள் உள்பட இராணுவம் முக்கியத்துவம் வாய்ந்த அத்தனையும் குறித்து உளவறிய முடியும். இந்தியாவின் பாதுகாப்பிற்கே பேரபாயமாக விளங்கும் இந்த இரு கப்பல்களையும் தனது நாட்டுத் துறைமுகங்களுக்கு வர அனுமதித்ததின் மூலம் இலங்கை அரசு இந்தியாவுக்கு எதிராக செயல்பட்டுள்ளது.





இந்தியாவிடமிருந்து அனைத்துவிதமான உதவிகளைப் பெற்றுக்கொள்ளும் இலங்கை இந்தியாவின் பாதுகாப்பு நலன்களுக்கு எதிராகச் செயல்பட ஒருபோதும் தவறியதில்லை. 1972ஆம் ஆண்டில் வங்கதேச விடுதலைப் போராட்டம் நடைபெற்ற போது இந்திய வான்வெளியில் பாகித்தான் விமானங்கள் பறக்கத் தடைவிதிக்கப்பட்டது. ஆனால் பாகித்தான் விமானங்கள் அரபிக்கடலுக்கு மேலாக பறந்துவந்து கொழும்பில் இறங்கி பின்னர் வங்காள தேசம் சென்று இந்தியப் படைகளின் மீது குண்டுவீசித் தாக்கவும் அனுமதித்தது.

சிங்கள இராணுவ வீரர்கள் இந்தியப் படை முகாம்களில் தொடர்ந்து பயிற்சி பெறுவதற்கு இந்தியா இன்னமும் அனுமதித்து வருகிறது. இலங்கைக்கு அருகே இந்தியாவைத் தவிர வேறு எந்த நாடும் கிடையாது. சிங்கள இராணுவ வீரர்களுக்கு இந்தியா அளிக்கும் பயிற்சி என்பது இலங்கையில் வாழும் தமிழ் மக்களைக் கொன்று குவிக்கவே என்பது தெரிந்தும் இந்தியா இதை தொடர்ந்து செய்து வருகிறது..

இந்தியாவின் எதிர்ப்பையும் மீறி சீன உளவுக் கப்பல்களை தனது நாட்டுத் துறைமுகங்களில் அனுமதித்துள்ள இலங்கைக்கு ஆகசுடு 15ஆம் நாளில் கடல் சார் கண்காணிப்பை வலுப்படுத்தும் விமானத்தை இலங்கை கடற்படைக்கு இந்தியா நன்கொடையாக வழங்கியுள்ளது. இதைவிட பேதமை வேறு இருக்க முடியாது.

## தமிழக மீனவர்கள் மீது சிங்கள கடற்படை தாக்குதல்!

செப்டம்பர் 05, 2022

இலங்கைக்கு சீன வேவுக்கப்பல் வந்து திரும்பியுள்ள நிலையில் தமிழகம் மற்றும் காரைக்கால் மீனவர்கள் மீது சிங்களக் கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் ஐவர் படுகாயமடைந்துள்ளனர்.

காரைக்கால் மற்றும் தமிழக மீனவர்கள் ஆறுபேர் பயணித்த படகே இவ்வாறு தாக்குலிற்கு உள்ளானதாக முறையிடப்பட்டுள்ளது.

ஒருவர் மீது கடுமையாகத் தாக்கப்பட்டு மதுரை மீனாட்சி மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது இலங்கை கடற்படையின் 409 இலக்க படகில் வந்த கடற்படையினரே தம்மைத் தாக்கியதாகவும் தெரிவித்துள்ளனர்.



# இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களை விடுவிக்குமாறு தமிழக முதல்வர் கோரிக்கை!

செப்டம்பர் 08, 2022

இலங்கையுடன் தகுந்த தூதரக வழிவகைகளை மேற்கொண்டு இந்திய மீனவர்கள் மற்றும் அவர்களது மீன்பிடி படகுகளை விரைவில் விடுவிக்க மத்திய அரசுக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு எழுதிய கடிதத்தில், கடந்த 9 மாதங்களில் இலங்கையால் கைது செய்யப்பட்ட 150 தமிழக மீனவர்களை விடுவிக்க ராஜதந்திர வழிகள் மூலம் ஆதரவு அளித்ததற்கு நன்றி என தெரிவித்துள்ளார்.

“செப்டெம்பர் 6 ஆம் திகதி இலங்கை கடற்படையினரால் 12 இந்திய மீனவர்கள் புதுச்சேரியைச் சேர்ந்த இயந்திரமயமாக்கப்பட்ட மீன்பிடிப் படகுடன் கைது செய்யப்பட்டதையும் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருவதற்காக இது உள்ளது. அவர்களில் 5 பேர் தமிழகத்தின் மயிலாடுதுறை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்” என அந்தக் கடிதத்தில் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போதைய நிலவரப்படி, 23 மீனவர்களும், தமிழக மீனவர்களின் 95 விசைப்படகுகளும் இன்னும் இலங்கை தடுப்பில் இருப்பதாகவும், மீனவர்களையும் அவர்களது மீன்பிடி படகுகளையும் விரைவில் விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு மத்திய அமைச்சரிடம் முதல்வர் வலியுறுத்தியுள்ளார்.

# தமிழக மாணவர்களுக்கு ஆந்திராவில் இரயில்வே தேர்வு! அன்புமணி ராமதாஸ் கண்டனம்!

செப்டம்பர் 05, 2022

இந்திய இரயில்வேயில் குரூப் டி பணியிடங்களை நிரப்புவதற்காக வரும் 8ம் திகதி போட்டி தேர்வு நடைபெறவுள்ளது. இந்த தேர்வுகளை எழுத தமிழக மாணவர்களுக்கு ஆந்திராவில் மையம் ஒதுக்கப்பட்டுள்ளதற்கு பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இந்திய இரயில்வேயில் குரூப் டி பணியிடங்களை நிரப்புவதற்காக வரும் 8ஆம் தேதி நடைபெறும் போட்டி தேர்வுகளை எழுதுவதற்காக தமிழக மாணவர்களுக்கு ஆந்திராவில் மையம் ஒதுக்கப்பட்டுள்ளது. இது கண்டிக்கத்தக்கது எனவும் தமிழக மாணவர்கள் ஆந்திர தேர்வு மையத்திற்கு செல்ல 700.கி.மீ.க்கும் கூடுதல் தொலைவு பயணிக்க வேண்டியுள்ளது எனவும் கூறியுள்ளார்.



அதோடு தேர்வு நடைபெறும் இடத்திற்கு 36 மணி நேரம் முன்னதாக சென்று அறை எடுத்து தங்க வேண்டிய சூழல் உள்ளதால் இது சாத்தியமல்ல என கூறியுள்ளார்.

700.கி.மீ.க்கும் கூடுதலான தொலைவில் தேர்வு மையம் ஒதுக்குவது என்பது கடுமையான மன உளைச்சலையும், தேர்வுக்கு தயாராவதில் தடையை ஏற்படுத்தும். மேலும் மாணவர்களின் தேர்வு எழுதும் திறனை கெடுக்கும் எனவே இது கூடாது.

மாணவர்கள் இயல்பாக தேர்வு எழுதுவதை உறுதி செய்ய வேண்டியது ரயில்வே தேர்வு வாரியத்தின் கடமை. எனவே, விண்ணப்பித்த அனைவருக்கும் அவர்கள் வசிக்கும் இடத்திற்கு அருகில் தேர்வு மையம் ஒதுக்க வேண்டும் என வலியுறுத்தினார்.

# தமிழ் பயிற்று மொழியாக அறிவிக்க வேண்டும்!

## பாமக நிறுவனர் மருத்துவர் ராமதாஸ்

செப்டம்பர் 05, 2022

தமிழ் பயிற்று மொழியாக அறிவிக்க வேண்டும் என பாமக நிறுவனர் மருத்துவர் ராமதாஸ் தமிழக அரசை வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

ஒட்டுமொத்த இந்தியாவும் ஆசிரியர் நாளை கொண்டாடிக் கொண்டிருக்கும் இந்த வேளையில், ஒரு பல்கலைக்கழகம், பள்ளிகளில் அன்னை தமிழுக்கு அங்கீகாரம் வேண்டி 1,626-வது நாளாக வாய்ப்பூட்டு தவத்தை மேற்கொண்டிருக்கிறது.

அப்பல்கலைக்கழகத்தின் நாவிற்குள் சிறைபட்டு கிடக்கும் அன்னை தமிழுக்கு விடுதலை அளிப்பதற்கான வரத்தை தமிழ் நாடு அரசு இன்னும் தாமதப்படுத்துவது வருத்தமளிக்கிறது என குறிப்பிட்டுள்ளார்.

திருப்பூர் மாவட்டம் கருவம்பாளையத்தில் நான்கரை ஆண்டுகளாக பேசா நோன்பு மேற்கொண்டிருக்கும் அந்த பல்கலைக் கழகத்தின் பெயர் தமிழறிஞர் டிட்டோனி க.இரா.முத்துச்சாமி. தமிழ் நாட்டின் அனைத்து கல்வி நிலையங்களிலும் தமிழ் மொழியே பயிற்று மொழியாக இருக்க வேண்டும் என்ற கோரிக்கையை தமிழ்நாடு அரசு நிறைவேற்ற வேண்டும் என்பதற்காகத் தான் அவர் இந்த போராட்டத்தை மேற்கொண்டுள்ளார்.

தமிழறிஞர் டிட்டோனி க.இரா.முத்துச்சாமிக்கு தமிழறிஞர்கள் வட்டாரத்தில் அறிமுகம் தேவையில்லை. தமிழ்வழிக் கல்வியை வலியுறுத்தி 1999-இல் சென்னை வள்ளுவர் கோட்டத்தில் சாகும்வரை உண்ணாநிலை மேற்கொண்ட 102 தமிழறிஞர்களில் முதன்மை இடம் பிடித்தவர்களில் இவரும் ஒருவர். அதற்காக மொழிப்போர் மறவர் விருது வழங்கி சிறப்பிக்கப்பட்டவர்.

தமிழை செம்மொழியாக அறிவிக்க வலியுறுத்தி கடந்த 2003-ஆம் ஆண்டு டெல்லியில் நாடாளுமன்றம் முன் நடத்தப்பட்ட பட்டினிப் போராட்டத்தில் பங்கேற்றவர்களில் முதன்மையானவர் முத்துச்சாமி. அதற்காக செம்மொழிப் போராளி விருது பெற்றவர்.

தமிழ்ச் செம்மொழி கனவு நனவாகி விட்ட நிலையில், சாகும் வரை உண்ணாநிலை நடத்தி 20-ஆவது ஆண்டு தொடங்கியும் அந்த கனவு நனவாகாத வேதனையில் தான், தமிழ் நாட்டின் கல்வி நிலையங்களில் தமிழ் பயிற்றுமொழியாக அறிவிக்கப்படும் வரை ‘பேசா நோன்பு’ போராட்டத்தை மேற்கொள்வேன் என்று அவர் அறிவித்தார்.

அதன்படியே தமது எண்பதாம் ஆண்டு முத்துவிழா பிறந்த நாளான கடந்த 2018-ம் ஆண்டு முதல் இன்று வரை 1,626 நாட்களாக ஒருவருடனும், ஒரு சொல் கூட பேசவில்லை. முத்துசாமி அவர்களின் இந்த போராட்டம் குறித்து அறிந்த நாள் முதல், 80 ஆண்டுகளாக அவரது நாவில் நர்த்தனம் ஆடிய அன்னை தமிழ், அவரது வாயிலிருந்து மீண்டும் ஒலிக்காதா? என்று ஏங்கிக்கொண்டிருக்கிறேன்.

தமிழை பயிற்றுமொழியாக அறிவிப்பதில் எந்தவிதமான சட்ட சிக்கலும் இல்லை. மத்திய அரசு சட்டமான கல்வி பெறும் உரிமை சட்டத்தின் 29 (எஃப்) பிரிவில், நடைமுறைக்குச் சாத்தியமான வரையில் தாய்மொழியே பயிற்று மொழியாக இருக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த வாசகத்தில் நடைமுறைக்குச் சாத்தியமாகும் வகையில் என்பதை மட்டும் நீக்கி கல்வி பெறும் உரிமைச் சட்டத்தில் அரசு



திருத்தம் செய்து, அதற்குக் குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற வேண்டும்.

தமிழை இந்தியாவின் அலுவல் மொழியாக்க வேண்டும் என்று வலியுறுத்தி வரும் ஆட்சியாளர்கள், தங்களின் அதிகாரவரம்புக்குட்பட்ட தமிழ் பயிற்றுமொழி சட்டத்தை இயற்றத் தயங்குவது முரணாக உள்ளது. தமிழ்நாட்டில் தமிழ் செழிக்க வேண்டுமானால் தமிழ் பயிற்று மொழியாக அறிவிக்கப்பட வேண்டும்.

இதை உணர்ந்து தமிழ் பயிற்று மொழி சட்டத்தை அடுத்த பேரவைக் கூட்டத்தில் கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டும். அதன் மூலம் தமிழறிஞர் முத்துச்சாமியின் பேசா நோன்பை முடிவுக்கு கொண்டு வந்து, அவரது நாவிற்குள் அடைபட்டுக் கிடக்கும் அன்னை தமிழுக்கு விடுதலை அளிக்க வேண்டும் என கேட்டுக்கொண்டுள்ளார்.

# தமிழக மீனவர்களின் படகுகள் சிங்களக் கடற்படைகளால் அழிப்பு!

செப்டம்பர் 09, 2022

தமிழ்நாட்டு மீனவர்களிற்கு சொந்தமான இலங்கை நீதிமன்றங்களினால் பறிமுதல் செய்யப்பட்ட மீன்பிடி படகுகள் இன்று பழைய இரும்பிற்கு நொருக்கி அகற்றப்பட்டுள்ளது.

நிவாரணத்திற்கு கையேந்துவோம், மண்ணெண்ணெய்க்கு மண்டியிடுவோம், ஆனால், அந்த நாட்டு மீனவர்களின் படகுகளை அடித்து உடைத்து விறகுக்கு விற்போம் என செயற்பாட்டாளர் ஒருவர் சீற்றத்துடன் தெரிவித்துள்ளார்.

காரைநகரில் இலங்கை கடற்படை தளத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த பெருமளவிலான இந்திய தமிழ்நாட்டு மீனவர்களின் படகுகள் இன்று கனரக வாகனங்கள் சகிதம் அடித்துடைத்து அப்புறப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# ஐ.நாவில் இனப்படுகொலை குறித்து மௌனம்: ஏமாற்றம் அளிக்கிறது!

## மருத்துவர் ராமதாஸ்

செப்டம்பர் 13, 2022



ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையத்தில் இலங்கை இனப்படுகொலை மற்றும் போர்க்குற்றங்கள் குறித்து இந்தியா எதுவும் பேசாததற்கு பாமக நிறுவனர் மருத்துவர் ராமதாஸ் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மருத்துவர் ராமதாஸ் இன்று வெளியிட்ட அறிக்கையில் கூறியுள்ளதாவது:

இலங்கையில் வாழும் ஈழத்தமிழர்களுக்கு அதிகாரம் அளிப்பதற்கான நடவடிக்கைகளை சிங்கள ஆட்சியாளர்கள் மேற்கொள்ளவில்லை இனியும் தாமதிக்காமல் அதற்கான நடவடிக்கைகளை இலங்கை அரசு மேற்கொள்ள வேண்டும் என்று ஐ.நா. மனித உரிமை பேரவையில் இந்தியா வலியுறுத்தியுள்ளது. ஈழத்தமிழர்களுக்கு நீதி வழங்குவதில் இந்தியாவின் நிலை வரவேற்கத்தக்கது. ஆனால், போதுமானதல்ல.

ஜெனிவாவில் நடைபெற்று வரும் ஐ.நா. மனித உரிமை பேரவையின் 51-ஆவது கூட்டத்தில் நேற்று உரையாற்றிய இந்திய தூதர், "ஈழத்தமிழர்களுக்கு அதிகாரம் வழங்குவதற்காக இலங்கை அரசியலமைப்பு சட்டத்தில் செய்யப்பட்ட 13-ஆவது திருத்தத்தை முழுமையாக செயல்படுத்துதல், மாகாண அவைகளுக்கு கூடுதல் அதிகாரம் வழங்குதல், நீண்டகாலமாக தேர்தல் நடத்தப்படாமல் இருக்கும் மாகாண அவைகளுக்கு உடனே தேர்தல் நடத்துவதல் ஆகியவற்றின் மூலம் ஈழத்தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படும் என்று அளித்திருந்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில், அளவிடக் கூடிய முன்னேற்றம் எதையும் இலங்கை அரசு எட்டவில்லை" என்று குற்றஞ்சாட்டினார். ஒருங்கிணைந்த இலங்கைக்குள் தமிழர்களுக்கு நீதி, அமைதி, சமத்துவம் மற்றும் கண்ணியமான வாழ்க்கையை உறுதி செய்ய வேண்டும் என்பது தான் இந்தியாவின் நிலைப்பாடு இதை இலங்கை உறுதி செய்ய வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இலங்கையில் சிங்களர்கள் மட்டுமே ஆட்சிக்கு வர முடியும், இலங்கை ஆட்சியாளர்களின் மனதில் இருந்து சிங்கள பேரினவாத உணர்வையும், தமிழர்கள் வெறுப்பு மனநிலையையும் அகற்ற முடியாது என்ற சூழலில் இலங்கை இனச்சிக்கலுக்கு தனித்தமிழ் ஈழம் மட்டுமே தீர்வு என்று பாட்டாளி மக்கள் கட்சி உறுதியாக நம்புகிறது. ஆனால், அதற்கான அரசியல் மற்றும் சட்டரீதியான பயணம் மிக நீண்டது என்பதால், அதுவரை ஈழத்தில் வாழும் தமிழர்கள் கண்ணியமாகவும், சுதந்திரமாகவும் வாழ வகை செய்ய வேண்டும் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய பெருங்கடமை இந்தியாவுக்கு உண்டு என்று பா.ம.க. தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. இத்தகைய சூழலில் ஈழத்தமிழர்களுக்கு அதிகாரம் வழங்க வேண்டும் என ஐ.நா.வில் இந்தியா வலியுறுத்தியிருப்பது மனநிறைவை அளிக்கிறது.

ஆனால், இந்தியாவின் இந்த வலியுறுத்தல் மட்டுமே ஈழத் தமிழர்களுக்கு அதிகாரத்தை பெற்றுத் தந்து விடாது என்பதை இந்தியா உணர வேண்டும். ஈழத்தமிழர்களுக்கு ஓரளவாவது அதிகாரத்தை வழங்குவதற்கான 13-ஆவது அரசியலமைப்புச் சட்டத் திருத்தம் 1987-ஆம் ஆண்டு இந்திய - இலங்கை ஒப்பந்தத்தைத் தொடர்ந்து செய்யப்பட்டதாகும். இந்தியா நினைத்திருந்தால் 13-ஆவது அரசியலமைப்பு சட்டத் திருத்தத்தை அடுத்த சில ஆண்டுகளில் செயல்படுத்தி தமிழர்களுக்கு அதிகாரத்தை பெற்றுக் கொடுத்திருக்க முடியும். ஆனால், அதன்பின் 35 ஆண்டுகள் ஆகியும் இதுவரை எந்த முன்னேற்றமும் இல்லை அரைகுறை அதிகாரங்களுடன் ஏற்படுத்தப்பட்ட மாகாண அவைகளும் முடக்கப்பட்டு விட்டன, வடக்கு - கிழக்கு மாநிலங்களின் இணைப்பும் ரத்து செய்யப்பட்டு விட்டது. இப்படியாக ஈழத் தமிழர்களுக்கு அதிகாரம் வழங்குவதற்கான இந்தியாவின் முயற்சி ஒரு செ.மீ கூட நகராமல் முடங்கிக் கிடக்கிறது.

பன்னாட்டு அவைகளிலும், இரு தரப்பு பேச்சுகளின் போதும், 13-ஆவது அரசியலமைப்புச் சட்டத்தை செயல்படுத்த வேண்டும் என்று இந்தியா இதுவரை நூறு முறை வலியுறுத்தியிருக்கும். இப்போது 101-ஆவது முறையாக வலியுறுத்துவதால் மட்டும் எந்த பயனும் ஏற்பட்டுவிடாது. மாறாக, இலங்கைக்கு அழுத்தம் கொடுத்து ஈழத்தமிழர்களுக்கு குறைந்தபட்ச அதிகாரத்தையாவது பெற்றுத்தர வேண்டும். கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இலங்கை, அதன் அடிப்படைத் தேவைகளுக்குக் கூட இந்தியாவைத் தான் நம்பியிருக்கிறது. இத்தகைய சூழலில், 13-ஆவது அரசியலமைப்பு சட்டத் திருத்தத்தின் அம்சங்களை செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை தொடங்க வேண்டும் அவற்றில் ஏற்படும் முன்னேற்றங்களின் அடிப்படையில் தான் உதவிகளை வழங்க முடியும் என்று நிபந்தனை விதிப்பதன் மூலம் ஈழத்தமிழர்களுக்கு அதிகாரம் பெற்றுத் தர இந்தியா நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஐ.நா. மனித உரிமை பேரவையில் ஈழத்தமிழர்களுக்கு அதிகாரம் வழங்க வேண்டும் என வலியுறுத்திய இந்தியா, அங்கு நடைபெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் இனப்படுகொலைகளுக்கு காரணமானவர்களை தண்டிப்பது குறித்து எந்த கருத்தும் தெரிவிக்காதது ஏமாற்றமளிக்கிறது. இலங்கை இனப்படுகொலைகள் நிகழ்ந்து 13 ஆண்டுகள் ஆகியும் அதற்கு காரணமானவர்கள் தண்டிக்கப்படாததை ஏற்க முடியாது. இலங்கை போர்க்குற்ற விசாரணையில் அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் குறித்த புதிய தீர்மானம் வரும் 23-ஆம் திகதி ஐ.நா. மனித உரிமை பேரவையில் தாக்கல் செய்யப்பட்டு, அக்டோபர் 6-ஆம் திகதி வாக்கெடுப்பு நடத்தப்பட உள்ளது. ஈழத்தமிழர் இனப்படுகொலைக்கு காரணமானவர்களை தண்டிக்கும் வகையில், புதிய தீர்மானத்தை ஆதரித்து இந்தியா வாக்களிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு மருத்துவர் ராமதாஸ் கூறியுள்ளார்.

# திருக்குறளை அவமதித்துப் பேசிய ஆளுநர் இரவியை எதிர்த்து நடந்த ஆர்ப்பாட்டம்! பழ. நெடுமாறன் உட்பட பலர் கைது! 11.09.2022













# உலக செய்திகள்

# உலக கடல் மட்டம் 10 அங்குலம் உயரும்!

செப்டம்பர் 02, 2022

கிரீன்லாந்தில் பனிப்பாறைகள் வேகமாக உருகி வருவதால், உலக கடல் மட்டம் 10.6 அங்குலம் உயரும் அபாயம் ஏற்பட்டுள்ளது. உலகளவில் ஏற்பட்டுள்ள பருவநிலை மாற்றங்களால், அந்தாட்டிக்கா, ஆர்க்டிக் போன்ற பனிப் பிரதேசங்களிலும் கூட வெப்பம் அதிகமாகி வருகிறது. இதன் காரணமாக, பனிப்பாறைகள் வேகமாக உருகி வருகின்றன. இதை ஆண்டுதோறும் விஞ்ஞானிகள் கண்காணித்து வருகின்றனர்.

ஆனால், ஏற்கனவே கணிக்கப்பட்டதை விட கடல் மட்டத்தின் அளவு 2 மடங்கு அதிகமாகி வருவது அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.



இது தொடர்பான ஆய்வில் ஈடுபட்டுள்ள டென்மார்க், கிரீன்லாந்து புவியியல் ஆய்வு மற்றும் பனிப்பாறை நிபுணர் வில்லியம் கோல்கன் கூறுகையில், 'கடல் மட்டம் வேகமாக உயர்வதற்கு, ஜாம்பி பனிக்கட்டி உருகும் வேகம் அதிகமாகி இருப்பதே காரணம். செயலற்று இருந்த இந்த பனிமலைகள், தற்போது வேகமாக உருகத் தொடங்கி உள்ளன. பருவ நிலை மாற்றமே இதற்கு காரணம்,' என தெரிவித்துள்ளார்.

* 'இயற்கை பருவநிலை மாற்றம்' என்ற இதழில், உலகின் கடல் மட்டம் 30 அங்குலம் வரை உயரும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

# டொலருக்கு எதிராக யூரோ நாணயம் 20 ஆண்டுகள் காணாத சரிவு!

செப்டம்பர் 05, 2022

நோர்ட் ஸ்ட்ரீம் குழாய் வழியாக ஜேர்மனிக்கு எரிவாயு விநியோகத்தை ரஷ்யா துண்டிக்கும் என்று கடந்த வாரம் அறிவித்ததைத் தொடர்ந்து யூரோ நாணயம் திங்களன்று 20 ஆண்டுகள் இல்லாத அளவு கூ0.99 க்கு கீழே சரிந்தது.

இன்று யூரோ திங்கட்கிழமை 05.35 ஜி.எம்.ரி நேரப்படி 0.70 சதவீதம் சரிந்து 0.9884 டாலராக இருந்தது. இது டிசம்பர் 2002 க்குப் பிறகு சரிந்தது.

பொருளாதாரக் கொந்தளிப்பு மற்றும் உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பால் தூண்டப்பட்ட நிச்சயமற்ற தன்மைகளால் பாதிக்கப்பட்டுள்ள ஐரோப்பிய நாணயம் ஆண்டின் தொடக்கத்தில் இருந்து அமெரிக்க டொலருக்கு எதிராக தொடர்ந்து வலுவிழந்து வருகிறது.

ரஷ்ய எரிவாயு நிறுவனமான காஸ்ப்ரோம் வெள்ளிக்



கிழமை, வார இறுதியில் மீண்டும் திறக்கப்படவுள்ள நோர்ட் ஸ்ட்ரீம் குழாய் காலவரையின்றி மூடப்பட்டிருக்கும் என்று கூறியது.

திட்டமிடப்பட்ட மூன்று நாள் பராமரிப்பு நடவடிக்கையின் போது ஒரு விசையாழியில் எண்ணெய் கசிவு இருப்பதைக் கண்டுபிடித்ததாகவும், அது சரிசெய்யப்படும் வரை குழாய் மூடப்பட்டிருக்கும் என்றும் அது கூறியது.

பால்டிக் கடலுக்கு அடியில் செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கிற்கு அருகில் இருந்து ஜெர்மனிக்கு செல்லும் குழாய் வழியாக விநியோகம் மீண்டும் தொடங்கும் பணி சனிக்கிழமை தொடங்க இருந்தது.

உக்ரைன் மீதான கிரெம்ளின் படையெடுப்பின் மீது பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட்டதைத் தொடர்ந்து, ரஷ்யா பல்வேறு ஐரோப்பிய நாடுகளுக்கான விநியோகத்தை குறைத்துள்ளது அல்லது நிறுத்தியுள்ளது, இதனால் எரிசக்தி விலைகள் உயர்ந்தன.

கனடாவில் பழுதுபார்க்கப்பட்ட சீமென்ஸ் விசையாழி திரும்புவதைத் தடுத்துள்ள ஐரோப்பியத் தடைகள் காரணமாக நோர்ட் ஸ்ட்ரீம் வழியாக விநியோகம் குறைக்கப்பட்டதாக கிரெம்ளின் குற்றம் சாட்டியுள்ளது.

# அனைத்துலக குற்றவியல் நீதி மன்றத்தின் முன்றலில் இருந்து நீதிக்கான ஈருளிப்பயணம் ஆரம்பம்!

செப்டம்பர் 03, 2022

இலட்சியத்தினை நோக்கி பெரும் மனோபலத்தோடு தொடரும் மனித நேய ஈருருளிப்பயண அறவழிப்போராட்டம் அனைத்துலக குற்றவியல் நீதி மன்றத்தின் முன்றலில் (நெதர்லாந்து) இருந்து ஆரம்பமானது.

தமிழீழ மண்ணில் சிறீலங்காப் பேரினவாத அரசு நடத்திக்கொண்டிருக்கும் தமிழினவழிப்பிற்கு அனைத்துலக சுயாதீன விசாரணை வேண்டியும் தமிழீழ விடுதலையினையே உறுதியான தீர்வு… எனவும் கோரிக்கைகளை ஐரோப்பிய நாடுகள் எங்கும் அறவழிப்போராட்டமூடாக தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டபடியே இலக்கு நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது.

சிறீலங்காப் பேரினவாத சர்வாதிகார அரசு புரிந்த தமிழினப் படுகொலைகள், மனித நேயத்திற்கு எதிரான குற்றம், தமிழினவழிப்பு மற்றும் போர்குற்றம், சர்வதேச சட்டவிதிமீறல்… போன்றவைகளுக்கு கடந்த 2021 மாசி மாதம் ஐ.நா வின் மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் உயர் ஆணையாளர் மதிப்பிற்குரிய மிச்சேல் பச்லேட் அம்மையார் அனைத்துலக குமூகத்திடம் பரிந்துரைத்திருந்தார் அனைத்துலக குற்றவியல் நீதி மன்றத்தில் சிறீலங்காப் பேரினவாத அரசினை பாரப்படுத்த ஆவன செய்ய வேண்டும் என. எனவே தமிழர்கள் நாங்கள் வாழும் நாடுகள் எமது வேணவாக்களினை ஏற்றுக் கொண்டு நீதி விசாரணையினை ஆரம்பிக்க வேண்டும் . அதன் அடிப்படையிலே எவ்விடர் வரினும் ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்னரும் 2009ம் ஆண்டில் இருந்து 25 வது தடவையாக மனித நேய ஈருருளிப்பயண அறவழிப்போராட்டம் ஐரோப்பிய நாடெங்கும் பல இன்னல்கள் மத்தியிலும் அரசியற் சந்திப்புக்களை மேற்கொண்டு பலாயிரம் தொலைவு கடந்து இலக்கு நோக்கி பயணித்துக்கொண்டு இருக்கின்றது.

02.09.2022 நெதர்லாந்தில் அமைந்துள்ள அனைத்துலக குற்றவியல் நீதி மன்றத்தின் முன் பெரும் எழுச்சியோடும் மனவுறுதியோடும் ஆரம்பமாகியது குறிப்பிடத்தக்கது. கைகளிலே தமிழின அழிப்பின் சான்றுகள் பதாகைகளாக பிடித்திருக்க அகவணக்கத்தோடு ஆரம்பாகி அனைத்துலக குற்றவியல் நீதி மன்றத்திலும் நெதர்லாந்து வெளிநாட்டு வெளிவிவகார அமைச்சிடமும் மனு ஒப்படைக்கப்பட்டது.

மேலும் பல கவனயீர்ப்பு போராட்டங்கள் மனித நேய ஈருருளிப்பயணம் ஊடறுக்கும் முக்கிய அரசியல் மையங்களின் முன் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது, அவையாவன :

* 05.09.2022 திங்கட் கிழமை Belgium, Brussels ல் அமைந்துள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆணையகம் முன்றலில் பி.ப 13.30 மணிக்கும்




* 12.09.2022 திங்கட் கிழமை அன்று France,Strasbourg ல் அமைந்துள்ள ஐரோப்பிய பாராளுமன்றம் முன் காலை 9 மணி தொடக்கம் பி.ப 4 மணி வரை கவனயீர்ப்பு போராட்டங்கள் மற்றும் அரசியற் சந்திப்புக்களை மேற்கொண்டு இறுதியாக

* 19.09.2022 திங்கட் கிழமை Switzerland, Geneva ல் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் அவை முன்றலில் (ஈகைப் பேரொளி முருகதாசன் திடல்)

அனைத்து தமிழ் உறவுகளும் உங்கள் வரலாற்றுக் கடமையினை ஆற்ற வாருங்கள் என்பதனை உரிமையோடு கேட்டுக்கொள்கின்றோம்.

# 10 இலங்கையர்களில் 3 பேர் உணவுப் பாதுகாப்பின்மையை எதிர்கொள்வதாக உலக உணவுத் திட்டம் கூறியுள்ளது!

செப்டம்பர் 01 2022

இலங்கையில் 6.3 மில்லியன் மக்கள் அல்லது 10 இலங்கையர்களில் மூன்று பேர் இன்று உணவுப் பாதுகாப்பின்மையை எதிர்கொள்வதாக உலக உணவுத் திட்டம் கூறியுள்ளது.

அத்துடன் மூன்றில் இரண்டு பங்கு குடும்பங்கள் குறைவான சத்துள்ள உணவை உட்கொள்வது அல்லது சமாளிக்கும் பொறிமுறையை நாடுகிறார்கள் என்று ஐக்கிய நாடுகளின் உணவு உதவி நிறுவனம் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் பெண்கள், 5 வயதுக்குட்பட்ட குழந்தைகள் மற்றும் குறைபாடுகள் உள்ளவர்கள் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

விலைவாசி உயர்வு, பயிர் விளைச்சல் குறைதல், உக்ரைனில் போர் என்பவற்றால், நாடு நெருக்கடியை எதிர்கொள்கிறது.

இந்தநிலையில் உணவு உதவி 3.4 மில்லியன் மக்களைச் சென்றடைவதை நோக்கத்தின் அடிப்படையில் நெருக்கடிக்கு பதிலளிக்க 63 மில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவைப்படுகின்றன.

பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள அரசாங்கத்தின் முக்கிய உதவித் திட்டங்களில் திரிபோஷாவும் அடங்கும் என்பதை உலக உணவுத் திட்ட அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

# சர்வதேசத்தின் குரல்களை புறக்கணிக்கும் ரணில்!

ஆகஸ்ட் 31, 2022




கொடூரமான பயங்கரவாத தடுப்புச் சட்டங்களைப் பயன்படுத்தி, அமைதியான போராட்டக்காரர்களைக் குறிவைப்பதை, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உடனடியாக நிறுத்த வேண்டும் என்றும் தடுப்புக் காவலில் உள்ளவர்கள் விடுவிக்கப்பட வேண்டும் எனவும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் இன்று (31) தெரிவித்துள்ளது.

கடந்த 18 ஆம்திகதி நடந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற மூன்று ஆர்வலர்களை, பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் (PTA) கீழ் அதிகாரிகள் தடுத்து வைத்துள்ளனர். இதில் விசாரணையின்றி ஒரு வருடம் வரை தடுப்பு காவலில் வைக்க முடியும்.

ஜனாதிபதியாக பதவியேற்றதிலிருந்து, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கருத்து சுதந்திரம் மற்றும் அமைதியான ஒன்றுகூடல் உள்ளிட்ட உரிமைகளை நசுக்கியுள்ளார்.

அவரது நிர்வாகம் ஒரு மாத அவசரகால நிலையை விதித்தது, ஆர்ப்பாட்டக்காரர்களை வன்முறையில் கலைக்க பாதுகாப்புப் படைகளைப் பயன்படுத்தியது மற்றும் அமைதியான போராட்டங்களில் பங்கேற்ற பல பொதுமக்களை கைது செய்தது.

அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் பயங்கரவாத தடைச் சட்டத்தின் பயன்பாட்டை இடைநிறுத்துவதாகவும், உரிமைகளை மதிக்கும் சட்டத்தை அதற்குப் பதிலாக மாற்றுவதாகவும் அளித்த வாக்குறுதிகளை மீறியுள்ளன.

“சீர்திருத்தத்திற்கு அழைப்பு விடுக்கும் மக்களை அமைதியான முறையில் முடக்குவதற்கு பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை ஜனாதிபதி விக்ரமசிங்க பயன்படுத்தியிருப்பது, அவரது நிர்வாகத்தின் போது உரிமைகளுக்கு முன்னுரிமை கிடைக்காது என்ற ஒரு செய்தியை இலங்கையர்களுக்கு அனுப்புகிறது” என மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசியப் பணிப்பாளர் மீனாட்சி கங்குலி தெரிவித்தார்.

2015 இல் பிரதமராக, ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் ஒருமித்த தீர்மானத்தை ஆதரித்தபோது, சட்டத்தை நீக்குவதாக ரணில் விக்ரமசிங்க உறுதியளித்தார்.

2017 ஆம் ஆண்டில், ஐரோப்பிய ஒன்றியத்தின் GSP+ திட்டத்தில் இலங்கை மீண்டும் சேர்க்கப்பட்டபோது, சர்வதேச மனித உரிமைகள் உடன்படிக்கைகளுக்கு இணங்குவதற்குவதாக உறுதிமொழியை அவர் மீண்டும் அளித்தார்.

ஜூலை மாதம், அப்போதைய வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ், ஐ.நா மனித உரிமைகள் பேரவையில், பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுவதை நடைமுறையில் நிறுத்திவைத்துள்ளதாக கூறினார்.

முன்னதாக, மார்ச் 22 அன்று, அப்போதைய நீதிஅமைச்சரும், தற்போதைய வெளியுறவு அமைச்சருமான, அலி சப்ரி, “பயங்கரவாதத்துடன் நேரடி தொடர்பு கொண்ட குற்றங்கள் தவிர மற்ற குற்றங்களில் பயங்கரவாத தடைச்சட்டத்தைப் பயன்படுத்துவதற்கு நடைமுறைத் தடை விதிக்கப்பட்டுள்ளது” என்று நாடாளுமன்றத்தில் கூறினார்.

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் (IUSF) அழைப்பாளர் வசந்த முதலிகே, களனி பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் உறுப்பினர் ஹஷந்த ஜீவந்த குணதிலக்க மற்றும் அனைத்து பல்கலைக்கழக பிக்குகள் சம்மேளனத்தின் அழைப்பாளர் கல்வெவ சிறிதம்ம தேரர் ஆகிய மூவர் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

“அரசியல் சீர்திருத்தம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளுக்கான மதிப்பை மேம்படுத்துவதற்காக வெளிநாட்டில் உள்ள தமது பங்காளிகளின் அழைப்புகளை புறக்கணிப்பதில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க முனைப்புடன் இருப்பதாக தெரிகிறது” என்று மீனாட்சி கங்குலி கூறினார்.

# இங்கிலாந்து மகாராணி இரண்டாம் எலிசபெத் உடல்நலக்குறைவால் சாவடைந்தார்!

செப்டம்பர் 09, 2022



இங்கிலாந்து மகாராணி இரண்டாம் எலிசபெத் உடல் நலக்குறைவால் சாவடைந்தார்.

96 வயதான அவர் உடல் நலம் இன்மையால் மருத்துவ கண்காணிப்பில் இருந்தார்.

இந்நிலையில், அவர் சாவடைந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மகாராணி எலிசபெத்தின் உடல்நிலை அவ்வப்போது தொடர்ந்து பாதிப்புக்குள்ளாகி வந்த நிலையில், சமீபத்தில் புதிதாக தெரிவான பிரித்தானிய பிரதமர் லிஸ் ட்ரஸை சந்தித்து, அவருக்கு வாழ்த்துக் கூறியிருந்தார்.

கடந்த இரண்டு நாட்களாக சுகவீனமுற்றிருந்த மகாராணி, பால்மோரல் இல்லத்தில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சாவடைந்ததாக பக்கிங்ஹாம் அரண்மனை செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவரின் சாவை அடுத்து, உலக நாடுகளின் தலைவர்கள் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

21 ஏப்ரல் 1926 அன்று லண்டனில் உள்ள மேஃபேரில் பிறந்தவர் எலிசபெத் மகாராணி.

பிரிட்டிஷ் வரலாற்றில் சுமார் 70 ஆண்டுகாலம் அரச பதவியில் இருந்தவர்.

தனது பதவிக்கால வரலாற்றில் 15 பிரதமர்களுக்கு பதவிப்பிரமாணம் செய்து வைத்துள்ளார்.

அவரது சாவையடுத்து, முன்னாள் வேல்ஸ் இளவரசரான அவரது மூத்த மகன் சார்ல்ஸ், புதிய அரசராக இருந்து 14 பொதுநலவாய நாடுகளுக்குத் தலைவராக வழிநடத்தவுள்ளார்.

**முக்கிய அறிவித்தல்** தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது.
தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.
sangathamilcanada@gmail.com

# இலங்கைக்கு எதிரான சர்வதேச விசாரணைக்கு ஒத்துழையுங்கள்: ஐ.நா. மனித உரிமை ஆணையாளர்!

செப்டம்பர் 07, 2022

இலங்கையின் புதிய அரசாங்கம் மனித உரிமைகள் மற்றும் நல்லிணக்கத்தை முன்னெடுப்பதற்கு ஒரு தேசிய உரையாடலை ஆரம்பிக்க வேண்டும். அத்துடன் கடந்த கால மீறல்கள் மீண்டும் நிகழாமல் தடுக்க பொறுப்புக் கூறல் மற்றும் ஆழமான நிறுவன சீர்திருத்தங்களை மேற் கொள்ள வேண்டும் என்று ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை ஆணையாளர் வலியுறுத்தி யுள்ளார்.

இலங்கை தனது அரசியல் வாழ்வில் முக்கியமான கட்டத் தில் உள்ளதாகவும், அனைத்து சமூகங்கள் மற்றும் அனைத்து தரப்பு மக்களின் மனித உரிமைகளை கடுமை யாகப் பாதித்துள்ள கடுமையான பொருளாதார நெருக் கடியின் மத்தியில் இருப்பதாகவும் ஆணையாளரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது, ஆழமான சீர்திருத்தங்கள் மற்றும் பொறுப்புக் கூறலுக்கான கோரிக்கைகளை ஊக்குவித்துள்ளது.

எனவே நாட்டை ஒரு புதிய பாதையில் வழிநடத்த அரசாங் கத்திற்கு புதிய வாய்ப்பை வழங்குகிறது என்று பேரவை யின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், நிலையான முன்னேற்றங்கள் காணப் படுவதற்கு கடந்த கால மற்றும் தற்போதைய மனித உரிமை மீறல்கள், பொருளாதார குற்றங்கள் மற்றும் உள்ளூர் ஊழல்கள் உட்பட பொருளாதார நெருக்கடிக்கு பங்களித்த அடிப்படை காரணிகளை அடையாளம் கண்டு நிவர்த்தி செய்வது இன்றியமையாதது.

தற்போதைய சவால்களை எதிர்கொள்வதற்கும், கடந்த கால மனித உரிமை மீறல்கள் மீண்டும் நிகழாமல் தடுப் பதற்கும் அடிப்படை மாற்றங்கள் தேவைப்படும் என்றும் மனித உரிமைகளுக்கான ஆணையாளரின் அறிக்கை கூறுகிறது.

கொடூரமான பாதுகாப்புச் சட்டங்கள் மற்றும் அமைதியான போராட்டத்தின் மீதான ஒடுக்குமுறைகள் உடனடியாக முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும்.

இராணுவமயமாக்கல் நோக்கிய நகர்வை மாற்றியமைக் கவும், பாதுகாப்புத் துறை சீர்திருத்தம் என்பவற்றையும் மேற்கொள்ளுமாறு மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கை அரசாங்கத்தை கேட்டுள்ளார்.

வெகுஜன எதிர்ப்புகளுக்குப் பதிலளிப்பதில் பாதுகாப்புப் படைகள் சமீபத்தில் கணிசமான நிதானத்தைக் காட் டினாலும், அரசாங்கம் கடுமையான அணுகுமுறையை எடுத்தது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் சில மாணவர் தலைவர்களைக் கைது செய்தது மற்றும் அமைதியான போராட்டங்களை வன்முறையில் ஒடுக்கியது. நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கில் அதிக அளவில் இராணுவ மயமாக்கப்பட்ட சூழல் மற்றும் கண்காணிப்பு கலாசாரம் தொடர்கிறது.

இந்தநிலையில் நம்பகமான உண்மையைக் கண்டறியும் பொறிமுறையை நிறுவுதல் மற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்வது உட்பட நிலுவையில் உள்ள கடப்பாடு களைச் செயல்படுத்த காலக்கெடுத் திட்டத்துடன் நிலை மாறுகால நீதி மற்றும் பொறுப்புக்கூறல் மற்றும் பாதிக்கப் பட்டவர்களை மையமாகக் கொண்ட மூலோபாயத்தை மீண்டும் ஆரம்பிக்குமாறு ஆணையாளர் இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை 2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்புகள் பற்றிய உண்மையை கண்டறிவதில் முன்னேற்றம் இல்லாதது குறித்து கவலையை வெளிப் படுத்தும் ஆணையாளரின் அறிக்கை, சர்வதேச உதவி மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களது பிரதி நிதிகளின் முழுப் பங்கேற்புடன், தொடர்ந்து சுதந்திரமான மற்றும் வெளிப்படையான விசாரணைக்கு அழைப்பு விடுத்துள்ளது.

இலங்கையின் அடுத்தடுத்த அரசாங்கங்கள், மனித




உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்களில் ஈடு படுபவர்களை பொறுப்புக்கூற வைப்பதற்கும், உண்மை, நீதி மற்றும் இழப்பீடுகளுக்கான பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகளை நிலைநிறுத்துவதற்கும் பயனுள்ள நிலை மாறுகால நீதிச் செயன்முறையைத் தொடரத் தவறிவிட்டன என்று அறிக்கை கூறுகிறது.

மாறாக அரசாங்கத்தின் மிக உயர்ந்த மட்டங்களில் போர்க் குற்றங்களில் நம்பத்தகுந்த வகையில் சம்பந்தப்பட்ட சில இராணுவ அதிகாரிகளுக்கு தீவிரமாக ஊக்குவிப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

தேசிய மட்டத்தில் பொறுப்புக்கூறலுக்கான முன்னேற்றம் இல்லாத நிலையில், இலங்கையில் சர்வதேச சட்டத்தின் கீழ் இழைக்கப்பட்ட குற்றங்களை விசாரிப்பதற்கும், விசாரணை செய்வதற்கும், உலகளாவிய ரீதியில் உள்ள வழிகளைப் பயன்படுத்தி, பொறுப்புக்கூறல் முயற்சிகளில் ஒத்துழைக்குமாறு ஏனைய நாடுகளிடம் ஆணையாளர் கோரியுள்ளார்.

அத்துடன், சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் மொத்த மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்கள் அல்லது சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் கடுமையான மீறல் களுக்கு பொறுப்பானவர்கள் என்று நம்பத் தகுந்த வகையில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் தொடர்பில் மேலும் நடவடிக்கைகளை ஆராயுமாறு ஆணையாளரின் அறிக்கை ஏனைய நாடுகளை வலியுறுத்தியுள்ளது.

# போராட்டதாரிகளின் உரிமைகள் மீறப்படுவதை இலங்கை அரசாங்கம் நிறுத்த வேண்டும்!

## சர்வதேச மன்னிப்புச் சபை

செப்டம்பர் 09, 2022

போராட்டக்காரர்களின் உரிமைகள் மீறப்படுவதை இலங்கை அரசாங்கம் முடிவிற்குக் கொண்டு வர வேண் டும் என சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

நாட்டில் பொருளாதார நெருக்கடி நிலவும் காலப்பகுதியில், இலங்கை அதிகாரிகள் போராட்டங்களை கடுமையாக கட்டுப்படுத்தி ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது நெருக்கடிகளை கட்டவிழ்த்து விட்டுள்ளதாக மன்னிப்புச் சபையின் புதிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைதியான போராட்டக்காரர்களை பாதுகாக்க அதிகாரி கள் தவறியதுடன், அவர்கள் மீது அதிகாரத்தை பிரயோகித் ததாகவும் இராணுவத்தை பயன்படுத்தியதாகவும் சர்வதேச மன்னிப்புச் சபையின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

AMNESTY INTERNATIONAL

அமைதியான முறையில் எதிர்ப்பை வெளிப்படுத்தும் உரிமை மக்களுக்கு உள்ளதாகவும் அத்தகைய உரிமை களை எளிதாக்கும் கடமை அரசாங்கத்திற்கு உள்ள தாகவும் சர்வதேச மன்னிப்புச் சபை சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கை அதிகாரிகள் தொடர்ந்தும் சளைக்காமல் மக்களின் குரலை நசுக்கியுள்ளதாக சர்வதேச மன்னிப்புச் சபையின் தெற்காசிய பிராந்திய பணிப்பாளர் யாமினி மிஸ்ரா தெரிவித்துள்ளார்.

இலங்கையின் புதிய அரசாங்கம் எதிர்ப்பாளர்களை அடக்குவதற்கு சட்டவிரோத பலவந்தம், மிரட்டல், துன் புறுத்தலை தொடர்ந்து பயன்படுத்தி வருவதாக தெரிவித் துள்ள யாமினி மிஸ்ரா, அமைதியான முறையில் ஒன்று கூடும் உரிமை மிக அடிப்படையான விடயம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், போராட்டக்காரர்கள் மீதான தாக்குதல் குறித்து வெளிப்படையான, பாரபட்சமற்ற விசாரணைகளை அதி காரிகள் உடனடியாக மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

# அமெரிக்காவில் 03 மாதத்திற்கு பிறகு திறக்கப்பட்ட பாடசாலைகள்!

செப்டம்பர் 07, 2022

அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்திலுள்ள ஆரம்ப பாடசாலையொன்றில், 21 பேர் உயிரிழந்த துப்பாக்கிச் சூடு சம்பவத்திற்கு பிறகு, உவால்டே நகரில் உள்ள அனைத்து பாடசாலைகளும் திறக்கப்பட்டுள்ளன.

ராப் ஆரம்பப் பாடசாலையில் கடந்த மே மாதம் 24-ஆம் திகதி நடைபெற்ற பயங்கர துப்பாக்கிச்சூடு சம்பவத்தில் 19 குழந்தைகளும், 2 ஆசிரியர்களும் கொல்லப்பட்டது அந் நாட்டையே உலுக்கியது.

இதன்போது மாவட்டத்தில் உள்ள அனைத்து பாடசாலை களும் காலவரையின்றி மூடப்பட்ட நிலையில், 3 மாதத் திற்கு பின் அந்த பள்ளியை தவிர மற்ற பாடசாலைகள் திறக்கப்பட்டன.

ராப் ஆரம்ப பாடசாலை மாணவர்கள், மாவட்டத்தில் உள்ள மற்ற பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப் பட்டுள்ளனர்.

முதல் நாள் ஆர்வமுடன் பாடசாலை பேருந்தில் ஏறி மாணவர்கள் பாடசாலை சென்றனர்.



# இலங்கையில் நடைபெற்றதை இனப்படுகொலையாகத்தான் பர்க்கவேண்டும் – ஜெனீவாவில் தமிழர் தரப்பு!

செப்டம்பர் 12, 2022

இன்று திங்கட்கிழமை 12ஆம் திகதி ஜெனிவாவில் உள்ள ஐ. நா மனித உரிமை சபையின் முன் அமைத்துள்ள முருகதாசன் திடலிலே மதியம் 2 மணி 30 நிமிடத்திற்கு ஆரம்பமான ஒன்றுகூடல் மிக சிறந்த முறையிலே நிறைவுபெற்றுள்ளது.

இவ் ஒன்றுகூடலில் இனப் படுகொலையின் ஆதாரப் புகைப்படங்கள் சுமார் 12 மீற்றர் நீள மேடையில் சாட்சியங்களாக நின்றது.

தாயகத்திலிருந்து வருகைதந்த எமது தமிழ் அரசியல் பிரதிநிதிகள் ஐ.நா மனித உரிமை சபையிடம் பல கோரிக்கைகளை கையளித்தனர்.

அக் கோரிக்கைகளில் இனப் படுகொலைக்கு சர்வதேச விசாரணை வேண்டும் என்றும், இலங்கையில் நடைபெற்றது இனப் படுகொலையாகத்தான் பார்க்க வேண்டும் என்ற கோரிக்கையும் உள்ளடங்களாக மேலும் பல கோரிக்கைகளையும் கையளித்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

ஒன்றுகூடலில் முன்னாள் வடமாகாணசபை அமைச்சர் அனந்தி சசிதரன், யாழ்ப்பாண மாநகரசபை மேயர் மணிவண்ணன், மட்டக்களப்பு மாநகரசபை மேயர் தியாகராசா , அம்பாறை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன், மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.






# தமிழின அழிப்பினை மேற்கொண்ட சிறீலங்கா பேரினவாத அரசினை அனைத்துலக குற்றவியல் நீதி மன்றத்தில் விசாரிக்க சர்வதேச சமூகம் முன் வரவேண்டும்!

செப்டம்பர் 12, 2022

சிறீலங்காப் பேரினவாத சர்வாதிகார அரசு புரிந்த தமிழின அழிப்பிற்கு அனைத்துலக விசாரணை வேண்டும், ICC அதற்கு சர்வதேச குமுகம் ஒத்துழைக்க வேண்டும் எனும் மனித உரிமைகள் உயர் ஆணையாளரின் கருத்துக்கு வலுச்சேர்க்க தொடரும் 10ம் நாள் அறவழிப் போராட்டம்.

கடந்த 2021 தை மாதம் ஐக்கிய நாடுகள் அவையின் மனித உரிமைகள் உயர் ஆணையாளர் மதிபிற்குரிய பசுலேட் அம்மையார் அவர்கள் கூறப்பட்ட கருத்திற்கு "தமிழின அழிப்பினை மேற்கொண்ட சிறீலங்கா பேரினவாத அரசினை அனைத்துலக குற்றவியல் நீதி மன்றத்தில் விசாரிக்க சர்வதேச குமுகம் முன் வரவேண்டும்" இக் கருத்தை இக் கூட்டத் தொடரில் நடைமுறைப் படுத்த வலுச் சேர்க்க அனைத்து தமிழ் உறவுகளும் போராட வேண்டும். இந்தக் காலகட்டத்தில் தமிழர்களின் போராட்டங்கள் இந்தக் கோரிக்கையில் ஒரு சேர் புள்ளியில் சந்திக்க வேண்டும். அவை எமக்கான இலக்கான "சுதந்திர தமிழீழமும், சிறீலங்கா பேரினவாத அரசினால் மேற் கொண்ட திட்டமிட்ட தமிழின அழிப்பிற்கு அனைத்துலக சுயாதீன விசாரணையே.. ICC ஆகும்.

சவால்கள் வழி நெடுகிலும் இருப்பினும் உடல் உபாதைகள் தாங்கி விடுதலைச் செய்தியினை விட்டுக்கொடுப்பின்றி இடித்துரைக்கப்படுகின்றது இப்போராட்டம் மூலமாக. எதிர்வரும் 51வது மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத்தொடரின் முக்கியத்துவம் அறிந்த எம் உறவுளே, உங்கள் நாடுகளில் இந்தப் போராட்டம் பயணிக்கையில் உங்கள் வரலாற்றுக்கடமையினை ஆற்ற தவறாதீர்கள். இது காலத்தின் கட்டாயம்.





# ஜெனிவாவில் சிங்களவர்கள் போராட்டம்!

செப்டம்பர் 12, 2022

இலங்கை அரசாங்கத்தின் செயற்பாடுகளை கண்டித்து ஜெனிவாவில் சிங்களவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இலங்கை அரசாங்கம் பயங்கரவாதத்தடைச் சட்டத்தின் மூலம் போராட்டக்காரர்கள் மீதான அடக்குமுறையை முடிவுக்குக் கொண்டுவருமாறு வலியுறுத்தி குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.











# MORTGAGE

- நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- லைன் ஒப் கிரெடிட்(HELOC)
- ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- Private Mortgage (No Income Verification)
- 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
- பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
- பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
- எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

**கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?**

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC

www.mortgageclinicanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011



ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP

Team Leader/Mortgage & Real Estate Broker

**Cell : 416-624-4843**

எமது முகவரி

1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)

RIGHT AT HOME REALTY INC.

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

MORTGAGE ALLIANCE

RIGHTBROKER = RIGHTMORTGAGE

Lic # 10530

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4






- தமிழ்த் தேசம், இறைமை, சுயநிர்ணயம் அங்கீகரிக்கப்பட்ட சமஸ்டி!
- இனப்படுகொலைக்கான சர்வதேச நீதி
- காணாமலாக்கப்பட்டோருக்கான சர்வதேச நீதி
- அரசியல்கைதிகளின் விடுதலை
- பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கு
- பௌத்தசிங்கள மயமாக்கலை நிறுத்து



என்ற தமிழர்களின் அபிலாசைகளை முன்வைத்து

**திலீபன் வழியில் வருகிறோம்**

# ஊர்திப்பவனி

– இளைஞர் அணி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி –






**Alan Maniam**
Director

**647 299 2450**

235 Nugget Ave., Unit 12, Scarborough ON M1S 3L3

boroscanadianpaper@gmail.com

# தியாகி திலீபன் ஒரு இலட்சிய நெருப்பு

**–தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் –**




எமது விடுதலை இயக்கம் எத்தனையோ அற்புதமான தியாகங்களைப் படைத்திருக்கிறது; வீரகாவியங்களைப் படைத்திருக்கிறது; அர்ப்பணிப்புகளைச் செய்திருக்கிறது. இவை எல்லாம் எமது ஆயுதப் போராட்ட வரலாற்றில் நாம் ஈட்டிய வீரசாதனைகள். ஆனால் எனது அன்பான தோழன் திலீபனின் தியாகமோ வித்தியாசமானது; வியக்கத்தக்கது; எமது போராட்ட வரலாற்றில் புதுமையானது. சாத்வீகப் போராட்டக் களத்தில் தன்னைப் பலிகொடுத்து ஈடு இணையற்ற ஒரு மகத்தான தியாகத்தைத் திலீபன் புரிந்தான். அவனது மரணம் ஒரு மாபெரும் வரலாற்று நிகழ்ச்சி தமிழீழப் போராட்ட வரலாற்றில் ஒரு புரட்சிகரமான திருப்பத்தை ஏற்படுத்திய நிகழ்ச்சி, தமிழீழ தேசிய ஆன்மாவை தட்டி எழுப்பிய நிகழ்ச்சி; பாரத நாட்டைத் தலைகுனிய வைத்த நிகழ்ச்சி; உலகத்தின் மனச்சாட்சியைச் சீண்டிவிட்ட நிகழ்ச்சி. திலீபன் யாருக்காக இறந்தான்? எதற்காக இறந்தான்? அவனது இறப்பின் அர்த்தமென்ன? அவனது இறப்பு ஏன் ஒரு மகத்தான நிகழ்ச்சியாக அமைந்தது? திலீபன் உங்களுக்காக இறந்தான்; உங்கள் உரிமைக்காக இறந்தான். உங்கள் மண்ணுக்காக இறந்தான், உங்கள் பாதுகாப்பிற்காக இறந்தான். சுதந்திரத்திற்காக; உங்கள் கௌரவத்திற்காக இறந்தான். தான் நேசித்த மக்களுக்காக தான் நேசித்த மண்ணுக்காக, ஒருவன் எத்தகைய உயர்ந்த உன்னத தியாகத்தைச் செய்ய முடியுமோ அந்த அற்புதமான அர்ப்பணிப்பைத்தான் அவன் செய்திருக்கிறான். ஒரு உயிர் உன்னதமானது என்பதை நான் அறிவேன் ஆனால் உயிரிலும் உன்னதமானது எமது உரிமை, எமது சுதந்திரம், எமது கௌரவம். நான் திலீபனை ஈழமாக நேசித்தேன். உறுதி வாய்ந்த ஒரு இலட்சியப் போராளி என்ற ரீதியில் அவன் மீது அளவுகடந்த பாசம் எனக்குண்டு. அவன் துடிதுடித்துச் செத்துக்கொண்டிருக்கும் பொழுதெல்லாம் என் ஆன்மா கலங்கும் ஆனால் நான் திலீபனை ஒரு சாதாரண மனிதப் பிறவியாகப் பார்க்கவில்லை. தன்னை எரித்துக் கொண்டிருக்கும் ஒரு இலட்சிய நெருப்பாகவே நான் அவனைக் கண்டேன். அதில் நான் பெருமை கொண்டேன் இலட்சிய உறுதியின் உச்சக்கட்டமாக திலீபன் தன்னை அழித்துக் கொண்டான் அவன் உண்மையில் சாகவில்லை. காலத்தால் சாகாத வரலாற்றுப் புருஷனாக அவன் வாழ்ந்து கொண்டிருக்கிறான்.

(சாகும்வரை உண்ணாநோன்பிருந்து வீரச்சாவைத் தழுவிக்கொண்ட ஈகைச்சுடர் திலீபனின் மறைவு குறித்து தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்)




மரகதம்
வைரம்
முத்து
புஷ்பராகம்
மாணிக்கம்
பவளம்
வைடூரியம்
நீலம்
கோமேதகம்
உங்கள் இராசிக்கேற்றபடி
அதிஸ்டக் கற்களில் பலவகையான
டிசைன்களில் மோதிரம் செய்து தரப்படும்
லக்ஷ்மி பொற்சாலை
Inside of Majestic City Plaza
அழையுங்கள்
416 - 587 - 8000
G9 - 2900 Markham Road, Scarborough ON M1X 1E6


சிவஸ்ரீ சிவ.ஜனா குருக்கள்
Shiva Sri S.JANARTHANA KURUKKAL
Priest (JANA IYA)
உங்கள் இல்லங்களில் நடைபெறும்
அனைத்து மங்கள வைபவங்களையும்
ஆகம முறைப்படி சிறப்பாக நடத்தி
வைப்பதற்கு அழையுங்கள்
Tel: 647.449.6542
aarthanan@hotmail.com
aarthananyathu@gmail.com


HIGH EFFICIENCY HEATING
& COOLING AIR SOLUTIONS
24h EMERGENCY SERVICES
ALL MAKES & MODEL
Furnance, Air Conditioner, Hot Water Tank
Tankless Water Heater, HRV, Fireplace, Attic Insulation,
Duct Work, Gas Line For BBQ, Stove, Dryer
up to $5000 REBATE
0 Down, Rental
Rent - to - Own
10 Years Warranty
LENNOX
WHY UPGRADE TO TANKLESS?
Endless Supply of Hot Water
No Up-front Equipment Cost
Save Up To 40%
Save Money & Space Design
15 Years Warranty
No More Risk of Flooding or Explos
KD NAVIEN
The Leader in Condensing Tankless Technology
FREE ESTIMATE
Sales, Service & Repair
S.Kumar
416-993-8001
geansam@yahoo.com
FINANCING WITH $0 DOWN
HOME ENERGY LOAN
$15,000


PEEL TAE KWON DO
Family Martial Arts
Trusted Local Taekwon - Do
Training School
* Over 20+ Years Taekwon-Do Training Experience
* For All Your Taekwon-Do, Martial Arts, Kickboking, Self Defense and Yoga Needs
* Top Quality Training for Kids, Teens and Adults
2016 READERS' CHOICE AWARDS
Ebenezer Location:
4255 Ebenezer Road,
Unit #25
Brampton, Ontario. L6T 2K8.
Tel: 905 913 2571
Bovaird Location:
170 Bovaird Drive, Unit #9, West,
Brampton, Ontario. L7A 1A1
Tel: 905 840 5268




# யாழ். கோட்டை முற்றுகையும் வீழ்ச்சியும்



**370 வருடங்களுக்கு முன்பிருந்து கடந்த 26.09.1990 வரை எமது தமிழீழ மண்ணில் இருந்து "வந்துகொண்டிருந்த ஆக்கிரமிப்பின் சின்னமொன்று – ஆக்கிரமிப்பாளனின் கூடாரமொன்று – எம்மால் வெற்றி கொள்ளப்பட்டு விட்டது.**

**மாறி மாறி ஆக்கிரமிப்பாளர்களின் கொடிகள் பறந்த யாழ்– கோட்டையில் இன்று தமிழன் கொடியாகிய புலிக் கொடி பட்டொளி வீசப்பறக்கின்றது.**

**இந்த மாபெரும் வரலாற்று மாற்றத்தை ஏற்படுத்திய 107 நாள் முற்றுகைப் போரின் இறுதிக் கட்டத்தை –ஓரளவிற்கேனும்–தமிழீழ மக்களிற்கு வழங்கு முயலுகினறோம்.**

**யாழ்–கோட்டைக்குள்ளிருந்த ஆக்கிரமிப்பு அசுத்தத்தை அப்புறப்படுத்த புலிகளின் எலும்புகள் எவ்விதம் ஈர்க்குக் குச்சிகளாக இருந்திருக்கின்றன என்பதையும் இக் கட்டுரை காட்டிச் செல்கின்றது.**

### 01.09.2022 தொடர்ச்சி

### பெண் போராளிகளின் மனோதிடம்

கோட்டையின் பிரதான வாசல் பகுதியை ஆண்போராளிகளம், பெண்போராளிகளும் சேர்ந்து, ஒரு உச்சத்தாக்குதலைத் தொடுத்து கைப்பற்றுவதற்கான திட்டம் தீட்டப்பட்டது. ஆனால், கோட்டை வாசலைக் கைப்பற்றும் பொறுப்பை மகளிர் படை அணியிடமே தர வேண்டும் என பெண்கள் தரப்பினர் வற்புறுத்திக்கேட்டனர்.

அவர்களது வேண்டுகோள் ஏற்கப்பட்டு வாசல் பறத்தை நேரடியாகச் சென்று கைப்பற்றும் பொறுப்பு பெண் புலிகளின் அணியிடம் வழங்கப்பட்டிருந்தது. அதே சமயம் வாசலுடன் இருந்த தென் பகுதிக் கொத்தளத்தைக் கைப்பற்ற ஆண்கள் அணி சென்றது. இந்தக் கொத்தளமும், வாசல்புறமும் பொலிஸ் நிலையக்கட்டிடத்தில் அமைக்கப்பட்டிருந்த எமது காவல் அரணிலிருந்து சுமார் 40 யார் தூரத்திலேயே இருக்கின்றன. நாம் கோட்டை வாசலைக் கைப்பற்ற முயற்சிப்போம் என்பது எதிரிக்கு நன்கு தெரியும் எனவே, கோட்டை வாசலை மிகவும் பலப்படுத்தியிருந்தான். தாக்குதலின் போது எமக்குப்பெரிதும் முட்டுக்கட்டையாக இருந்த விமானங்களும் கோட்டை வாசல் பகுதியை அண்டிய இடங்களையே தமது பிரதான இலக்காகக் கொண்டிருந்தன். கோட்டை வாசல் பகுதியிலிருந்தும், அதை அண்டிய கொத்தளம் மற்றும் மதில் மேலிருந்தும் சாரமாரியான கைக்குண்டுத் தாக்குதல்களை எதிரி நடாத்திக்கொண்டிருந்தான்.

கோட்டை வாசலை நோக்கிய பாதையானது தண்ணீர் ஓடும் ஒரு வாய்க்காலைப் போன்றது. வாய்க்காலின் புருவப்பகுதியைக் காப்பரணாகக் கொண்டு வாசலில் உள்ள எதிரி நிலைகளைக்கைப்பற்ற சங்கீதாவின் தலைமையிலான பெண்கள் அணி சாதுரியமாகவும், துணிச்சலுடனும் முன்னேறியது. எதிரி நிலையிலிருந்து 5-6 யார் அணமித்துச்சென்றுவிட்டார்கள். (அங்கிருந்தபடி சாரமாரியான தாக்குதலைத்தொடுத்துக் கொண்டு எதிரியின் அரணுக்குள்ளே பாயந்து சென்று கையெறிகுண்டை உள்ளே வீசி அரணுக்குள்ளேயே எதிரிக்குச் சமாதிகட்ட முனைந்தார்கள்). பெண்கள் அணிக்குதவியாக மறுபுறத்தில் ஆண்கள் அணியானது கோட்டை வாசலின் அருகிலும், மேலேயும் இருந்த எதிரியின் அரண்களைத் தாக்கி அவர்களைத் திசைதிருப்பிக் கெண்டிருந்தார்கள்.

காற்றையே காப்பரணாக்கி கோட்டை வாசலைக்கைப்பற்ற முனைந்த லெப். சங்கீதா, மாதங்கி, அநுரா, மாதுரி, ஆகியோர் கோட்டை வாசலிலேயே தீரத்துடன் வீழ்ந்து போனார்கள்.

அதே சமயம் வாசலுக்கு அருகிலிருந்த கொத்தளத்தைக் கைப்பற்றச்சென்ற ஆண் போராளிகளில் பலர் காயமடைந்தும், சிலர் இறந்தும் விட்டனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் டாங்கி போன்று வடிவமைக்கப்பட்ட புல்டோசர் ஒன்று பொலிஸ் நிலையப் பின்பகுதியிலிருந்து கடற்கரை வீதி வழியாக தென்பகுதிக் கொத்தளத்தை நோக்கி செல்லத் தொடங்கியது.

விமானத்திலிருந்து வீசப்பட்ட வெளிச்சக் குண்டுகளும், மற்றும் விமானத்திலேயே பூட்டப்பட்டுக்கிடந்த சக்தி வாய்ந்த மின் விளக்குகளினதும் ஒளியில் புல்டோசரின் நகர்வை எதிரி கண்டுவிட்டான். விமானத்திலிருந்து ஏவப்பட்ட குண்டோன்று புல்டோசரின் முன் பகுதியைத் தாக்கியது. கவசமயப்படுத் தப்பட்டிருந்தபடியால் வாகனம் உடைந்து சிதறவில்லை. ஆனால், சாதாரண தாங்கும் சக்திக்கு அப்பாற்பட்ட அதிர்வின் காரணமாக புல்டோசரின் சாரதி மயக்கமடைந்து விட்டான். புல்டோசருக்குள்ளே இருந்த சக தோழர்கள் தண்ணீரைத் தெளித்து சாரத்தியின் மயக்க நிலையைப் போக்கினர். மீண்டும் புல்டோசர் கொத்தளப்பகுதியை நோக்கி தாக்குதலை நடாத்திக்கொண்டு முன்னேறியது.

இந்தத் தென்புறக் கொத்தளப் பகுதியைக் கைப்பற்ற முனைந்த அணிகள் பலத்த எதிர்ப்பைச் சந்தித்தபடி தீரமுடன், உயிரைக் கொடுத்துப் போராடிக் கொண்டிருந்தார்கள். தன்னந் தனியாக ஒரு தோழன் கொத்தளப்பகுதியில் ஏறி அங்கிருந்தபடி எதிரி மீது கைக்குண்டுத் தாக்குதலை நடாத்தினான். இருந்தும் இந்த முனையில் 13 தோழர்களது இழப்பும் மேலும் பலர் காயமடைந்தும் இருந்தபடியால் கொத்தளத்தில் ஏறித் தாக்குதலை நடாத்துவது இயலாமல் போய்விட்டது.

இக் கொத்தளப்பகுதியைக் கைப்பற்றும் அணிக்கு பொறுப்பாக இருந்த குழுத் தலைவன் வைத்திருந்த துப்பாக்கி குண்டு பட்டு இயங்காது நின்றுவிடுகின்றது. புதிய துப்பாக்கி, ஒன்றைப் பெறுவதற்காகப் பின்னால் இருந்த பொலிஸ் நிலையக்காவல் அரணுக்குச் சென்று பதிய துப்பாக்கி ஒன்றைப் பெற்று வந்து மீண்டும் கொத்தளப்பகுதியில் நின்ற போராடினான்.

தென்பகுதிக் கொத்தளத்துடன் இருந்த கோட்டை வாசலை இருபுறத்திலும் நெருங்கி அதைக்கைப்பற்றும் முயற்சியில் பெண் புலிகள் சங்கீதா, மாதங்கி, மாதுரி, அனுரா, மற்றும் கருணாநிதி, சரத்பாபு, விக்ரம், கெனடி. நிசாந்தன், அலீப், சபேசன், மோகன், எட்றிச் அகிய பதிமூவர் வீரச்சாவடைந்தனர்.

இதே சமயம் தொலைத்தொடர்பு நிலையப் பகுதியிலிருந்து வடமேற்கு கொத்தளப் பகுதியை கைப்பற்ற முனைகையில் யசோவும். இந்தமுனையில் காயமடைந்த வீரர்களை அப்புறப்படுத்திக் கொண்டிருந்த பில்லாவும் வீரச்சாவைத் தழுவுகின்றனர்.

காயமடைந்து மயக்க நிலையில் உயிருடன் இருந்த பெண் போராளி ஒருவர் காலையில் மயக்கம் நீங்கியும் வெளியேற மடியாத நிலையில் அடுத்த நாள் இரவு ஏறக்குறைய 15 மணிநேரத்தின் பின்னர் உயிருடன் மீட்கப் பட்டார்.

இந்த முயற்சியில் 27 தோழர்கள் தமது உயிர்களை அர்ப்பணித்துக் கோட்டையைக் கைப்பற்ற முனைந்தனர்.

இப்பாரிய தாக்குதலின் தாக்கங்களும், வெற்றி கொண்டுவிட தீரமுட்ன முனைந்த புலிவீரர்களின் மன உறுதியும், போராடும் ஆற்றலும் சிறீலங்கா அரசுக்கு கலக்கத்தை ஊட்டியது. எனவே கோட்டையை மீட்பதற்காக பாரிய பொருட்செலவில் ஒரு படை எடுப்பொன்றை நடாத்தத் சிறீலங்கா அரசு தீர்மானித்தது.

4000 இற்கும் மேற்பட்ட படையினரையும், 8 போர் விமானங்களையும், மூன்று அவ்ரோ விமானங்களையும் 6 ஹெலிகொப்டர்களையும், 2 கடற்படைப் பீரங்கிக் கப்பற்பிரிவையும் இதற்கு இடுபடுத்தத் தீர்மானித்தது.

ஊர்காவற்துறையிலிருந்து சுமார் 12 மைல் நீளமுள்ள மண்டைதீவுக்கு படையெடுத்து, அங்கிருந்து சென்று கோட்டையைச் சுற்றியுள்ள புலிகளின் நிலைகளை உடைத்து கைப் பற்றி, அங்கிருந்து வைத்தியசாலை,




கோட்டையை மீட்பதற்காக சிங்களப்படைகள் நடாத்திய படையெடுப்பின் பாதைகள்

கச்சேரி உட்பட நகர்ப்புறத்தையும் தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர சிங்கள அரசு கனவு கண்டது.

இத் திட்டத்திற்கு ஒப்பறோசன் போட்




(Operation Fort) எனப் பெயரும் இட்டனர்.

சதுப்பு நிலத்தையும், நீண்ட வெளிகளையும் கொண்ட புவியில் அமைப்பை உடைய தீவகத்தில் ஒரு அடி கூட எடுத்துவைக்க முடியாத சிங்கள இராணுவத்தினர் வான் படைகளின் உதவியுடன் மண்டைதீவைக் கைப்பற்றினர். மண்டைதீவுச் சண்டையில் 44 போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

மண்டைதீவில் இருந்தபடியே கோட்டையை பிடிக்க இராணுவம் திட்டம் தீட்டியது. 300 கிலோ எடை கொண்ட பீப்பாக் குண்டுகளையும் 50 கிலோ கொண்ட விமானக் குண்டுகளையும் வீசி யாழ். நகரப் பகுதிகளில் இருந்த கட்டிடங்கள் அனைத்தையுமே அழிக்க முயன்றுகொண்டிருந்தது.

இத்துடன் நேபாம் குண்டுகளையும், நச்சுக் கிருமிகளைப் பரப்பும் குண்டுகளையும், இரசாயனக்குண்டுகளையும் வீசியது.

13.09.1990 ஆம் ஆண்டு, அதிகாலை 5:00 மணியளவில் சீனத்தயாரிப்பான "வை 12" ரக விமானமொன்று யாழ். நகரப் பகுதிக்கு மேலாகப் பறந்து 300 கிலோ கொண்ட பீப்பாக் குண்டுகளை வீசத்தொடங்கியது. சிறிது நேரத்தில் நடைபெற இருந்த தனது படை எடுப்பிற்கு இறுதிநேர உதவியாக புலிகளின் நிலை என தான், கருதிய இடங்களில் குண்டுகளை வீசியது.

அத்துடன் கோட்டைக்குத் தெற்கே ஒரு கி .மீ. தூரத்திலுள்ள சிறுத்தீவு என்ற இடத்தில் இரண்டு கடற்படைப் பீரங்கிக் கப்பல்களும் நிறுத்தப்படிட்ருந்தன.

சரியாக 5:55 மணிக்கு கோட்டைக்குள்ளிருந்து எமது காவல் அரண்கள் அனைத்தையும் நோக்கி சரமாரியான துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. அது ஒரு வழமைக்கு மாறான சம்பவமாகத் தென்பட்டது.

மண்டைதீவுக் கடலுக்குள் இருந்த எமது வீரர்களின் கண்களை கோட்டையின் மீது பதிப்பிப்பதற்காகவே அது செய்யப்பட்டது. என்பதை சில நொடிகளில் புரிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது.

சிறுத்தீவிலிருந்து சுமார் 20 விசைப்படகுகள் கோட்டையை நோக்கி வருவதை எமது தோழர்கள் அவதானித்து விட்டார்கள், உடனடியாகவே அனைத்துக்காவல் அரண்களுக்கும் செய்தி அனுப்பப்பட்டுவிட்டது எமது துப்பாக்கிகள் படகுகளை நோக்கி முழங்கின. படகுகள் புறப்பட்ட அதேநேரம் சிறுத்தீவுக் கடற்பரப்பில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 2 பீரங்கிப் படகுகளும் குண்டுகளைப் பொழிந்தன. பொலிஸ் நிலையக் கட்டிடத்தில் அமைக்கப்பட்டிருந்த எமது காவல் அரணும், பண்ணைச் சந்தி உட்பட தொலைத்தொடர்பு நிலையக்காவல் அரண்களும் எதிரிகளின் பிரதான இலக்குகளாக இருந்தன.

கோட்டைக்குள்ளிருந்தும் எறிகளைத் தாக்குதல்கள் நடாத்தப்பட்டன.

விநாடிக்குப் பத்திற்கும் மேற்பட்ட எறிகணைகள் பீரங்கிக்குண்டுகள் எமது காவல் அரண்கள் மீது வீசப்பட்டது.

மழைபெய்யும் பொழுது ஒவ்வொரு அங்குல இடைவெளிக்குள்ளும் நீர்த்துளிகள் விழுவதைப்போல் எமது காவல் அரண்களுக்கு மேலும், கீழும் முன்னும், பின்னும் அருகருகிலும் குண்டுகள் விழுந்து வெடித்தன.

எமது சில காவல் அரண்கள் சரிந்தன; சில உடைத்தன. எமது தோழர்கள் சிலர் செத்து விழுந்தனர். சிலர் காயமடைந்தபடி முனகிக் கொண்டு கிடந்தனர். ஆனாலும் எஞ்சிய தோழர்களின் துப்பாக்கிகள் கடலைநோக்கி முழங்கியபடியே இருந்தன. வந்த படகுகளில் ஏழு மூழ்கடிக்கப்பட்டது. மற்றவைகள் தொடர்ந்து கோட்டையை நோக்கி விரைவாக முன்னேறாதவாறு தடுக்கப்பட்டன. எமது துப்பாக்கிகளிலிருந்து புறப்பட்ட ரவைகளுக்குத் தப்புவதற்காக எஞ்சிய படகுகளில் இருந்தவர்கள் கடலுக்குள் குதித்து கோட்டையை நோக்கி நடந்து செல்ல முற்பட்டனர்.

இவர்களில் பலர் கடலுக்குள்ளேயே குண்டடிபட்டு விழுந்தனர். ஒரு சில படகுகள் மண்டைதீவிற்கே மீண்டும் தப்பியோடின. ஒரு சில

## கோட்டையை முற்றுகைக்குள் வைத்திருந்த எமது காவலரண்கள்




1. பண்ணைச் சந்தியில் 2. தொலைத்தொடர்பு நிலையப் பகுதியில் 3. கொட்டடி இடுகாட்டில் 4. பெரிய தபாற்கந்தோரில் 5. வீரசிங்கம் மண்டபத்தில் 6. திறந்தவெளி அரங்கில் 7. பொது நூல் நிலையத்தில் 8. விளையாட்டரங்கில் 9. பொலிஸ் நிலையத்தில்.

### கோட்டையின் பிரதான பகுதிகள்

அ. முற்றவெளி ஆ. கோட்டை அகழி இ. அகழி வெளிப்புறச்சாய்சுவர் ஈ. கோட்டையின் கொத்தளங்களும் உட் சுவரும் உ. கோட்டையின் பிரதானவாயில் ஊ. ஸ்ரீ லங்கா இராணுவத்தினர் புறமுதுகிட்டு ஓடி வெளியேறிய பாதை (கோட்டை பெண்கள் சிறைச்சாலைக்கு அருகிலிருந்த முன்னைய வாயில். இது முன்னர் கழிவுகள் அகற்றப் பயன்பட்டது. பின் கதவு அகற்றப்பட்டு கல்லால் அடைக்கப்பட்டிருந்தது. அதனை அகற்றி அதனூடாகத்தான் ஸ்ரீ லங்கா இராணுவம் புறமுதுகிட்டோடியது).

படகுகள் காயமடைந்தவர்களுடன் மண்டை தீவிற்குச்சென்றது. ஒரு சில படகுகள் கோட்டையை நோக்கியும் இழுத்துச் செல்லப் பட்டனன.

ஆச்சரியமூட்டக்கூடிய விதத்தில் வேகமான திடீர்த்தாக்குதலைச் செய்து, புலிகளை மலைக்க வைத்து அவர்களின் காவல் அரண்களை உடைத்து அவற்றைக்கைப்பற்றி விடலாம் என எதிர்பார்த்தே சிங்கள இராணுவம் தாக்குதலைத் தொடங்கியது.

ஆனால், அவர்களது திட்டத்தின் முதல் கட்டத்தை வழிப்புணர்ச்சியுடனும், நிதானமான எதிர்த்தாக்குதல் மூலமும் கடலுக்குள் வைத்தே முறியடித்தோம். 6 படகுகளை மூழ்கடித்ததினாலும் தொடர்ந்தும் படகு மூலம் வேகமாக கோட்டையை அடையவிடாது தடுத்ததினாலும் அதைச் செய்தோம்.

இதைத் தொடர்ந்து இராணுவம் எமது நிலைகளுக்குள்ளே புக முயற்சி செய்தது. இரண்டு விதமான யுக்திகளை இதற்காக இராணுவத்தினர் கடைப்பிடித்தனர்.

1. பொலிஸ் நிலையக் கட்டிடத்தின் மீது தொடர்ச்சியான எறிகணைப், பீரங்கித் தாக்குதல்களை நடாத்திக் கொண்டு, அதேசமயம்;

2. தொலைத்தொடர்பு நிலையம் மற்றும் பண்ணைச்சந்திக் காவலரண்கள் மீது விமானத் தாக்குதலையும், அதற்கு அனு சரணையாக கோட்டையிலிருந்து பீரங்கித் தாக்குதலையும், ஆர். பி. ஜி. மூலம் “ரொக்கற்” தாக்குதலையும் நடாத்தியது.

இதற்கு மத்தியில் கடற்கரையை அண்டியிருந்த, கோட்டை மதிலை அடைந்த இராணுவத்தினர் அங்கிருந்து நிலை எடுத்து, பண்ணைச் சந்தியிலிருந்த எமது காவலரண்களை கைப்பற்ற முயற்சி செய்தனர்.

பண்ணைச்சந்தி காவலரண்களைக் கைப்பற்ற இராணுவம் எடுத்த இந்த முயற்சிகளை மனோ உறுதியை அடித்தளமாகக் கொண்ட தந்திரோபாயங்களைக் கடைப்பிடித்து முறியடித்தோம்.

சதுர வடிவில் தண்டவாளங்கள், மண்மூடைகள், ரயர்கள் கொண்டு ஒரு பலமான காவலரணை பண்ணைச் சந்தியில் அமைத்திருந்தோம். இக்காவலரணையும் தொலைத்தொடர்புநிலையத்தையும் இணைக்கும் வகையில் எலிவளை போன்ற ஒரு தொடர் அகழியை அமைந்திருந்தோம்.

இப்பண்ணைச்சந்தி அரணானது திறந்த வெளியில் எதிரிக்கு சவால் விடுவதைப்போல நிமிர்ந்து நின்றது. இது கோட்டையிலிருந்து சுமார் 60 யார் தொலைவில் இருந்தது.

இக்காவலரணை உடைத்து அதைக்கைப்பற்றுவதன் மூலம் தொலைத்தொடர்பு நிலையத்தையும் புலிகளின் கையில் இருந்து மீட்டு விடலாம் என்ற நம்பிக்கையில் இராணுவம் செயற்பட்டது.

தனித்திருந்த அக்காவல் அரண் விமானத்தால் தாக்கப்பட்டது. ஆர்.பி.ஜி மூலம் ரொக்கற் தாக்குதல் நடாத்தப்பட்டது. கோட்டை மதிலின் மீதிருந்த பீரங்கிகள் மூலம் தாக்கப்பட்டது. காற்று வீசுவதைப்போல் துப்பாக்கிக்குண்டுகள் தாக்கின.

புயலுக்குள் அகப்பட்ட கப்பலைப்போன்று, அவ்வரண் பிய்த்தெறியப்பட்டது. தண்டவாளங்கள் உடைந்தன, ரயர்கள் எரிந்து, மண்மூடைகள் சிதறின. ஆனாலும் அதற்குள் இருந்து புலிகளின் துப்பாக்கிகள் வெடித்துக் கொண்டிருந்தன.

எலிவளை போன்ற தொடர்குழிக்கூடாக காயம் அடைந்த போராளிகள் அப்புறப்படுத்தப்பட்டனர். பதிலுக்கு புதிய புலி வீரர்கள் அவ்விடத்துக்குச் சென்று எதிரியுடன் கடுமையான யுத்ததை நடாத்திக்கொண்டிருந்தார்கள்.

சிறிது நேரத்தில் அந்தக் காவலரணும் உடைந்துபோய்விட்டது. பின்னர் அதற்கு அருகில் இருந்த இன்னொரு காவலரணிற்குள் சென்று புலிவீரர்கள் போரிட்டுக்கொண்டிருந்தார்கள்.

### போர் விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது

தொலைத்தொடர்புக் கட்டிடத்திலிருந்து பண்ணைச் சந்திக்காவலரணுக்கு உதவிகள் செல்வதைத் தடுப்பதற்காக மூன்று போர் விமானங்கள் தொலைத்தொடர்பு நிலையப்பகுதியில் மாறிமாறி குண்டுகளை வீசத்தொடங்கின.



## யாழ் கோட்டை முற்றுகையில் சுட்டு வீழ்த்தப்பட்ட சியாமா செட்டி விமானம் (1990)

அவ்விமானங்கள் குண்டுகளை வீசிக்கொண்டிருக்க பண்ணைச் சந்தி அரணை நோக்கி முன்னே வந்த இராணுவத்தினரும் எமது துப்பாக்கிகளுக்கு இரையாகிக் கொண்டு வந்தனர். பண்ணைச் சந்தியிலுள்ள எமது நிலைக்கு 5-6 யார் முன்னாலுள்ள காப்பிடப் பகுதியில் வந்து நிலை எடுத்திருந்தும் அரணைக்கைப்பற்ற முடியாது தடுக்கப் பட்டனர்.

புலிகள், காற்றைக் காப்பரணாக்கி உயிரை ரவைகளாக்கி எதிரியுடன் போரிட்டுக்கொண்டிருந்தனர்.

இந்நிலையில் எதிரி விமானமொன்று ஆகாயத்தில் நாம் வரித்திருந்த ரவைக்குடையைப் பிய்த்தபடி கீழேவந்த சரிநேராக எமது நிலைகளைத் தாக்கத் தொடங்கியது.

இரண்டு, மூன்று தடவைகள் அவ்விதமாகப் பதிந்து தாக்குவதும் பின்னர் மேலெழுவதும் சத்தமும் கேட்டது. இறுதியாக உறுமியபடி பின்புறத்திலிருந்து எமது நிலைகளை நோக்கி வந்த விமானம் வழமைக்கு மாறாக பண்ணைக்கடல் பக்கமாக வித்தியாசமான ஒலியை எழுப்பியபடி சென்றது. பின்னர் எந்த விமானத்தின் ஒலியும் எமக்குக் கேட்கவில்லை.

“ஓடு மீன் ஓட உறுமீன் வருமளவும் வாடி இருக்குமாம் கொக்கு” என்பதைப் போல, தொலைத்தொடர்பு நிலையத்துக்கு அப்பால் ஒரு முளையில் உருமறைப்புச் செய்தபடி விமான எதிர்ப்புத் துப்பாக்கியுடனிருந்த ஒரு தோழனுக்கு இரைகிடைத்துவிட்டது.



சுட்டு விழ்த்தப்பட்ட சிறிலங்கா வான் படைக்குச் சொந்தமான போர்விமானத்தின் சிதைவுகளில் ஒரு பகுதி

இச்சண்டையிலீடுபட்டிருந்த புலிவீரன் ஒருவன் தெரிவித்தான் - சுமார் 11:15 மணி இருக்கும். காது செவிடுபடும்படியான குண்டுச்சத்தங்களின் மத்தியில் விமானங்களின் இரைச்சல் - மிகமிகத் தளாப் பறப்பதற்கான அறிகுறியுடன் - கேட்டது.

பிடரிப்பக்கம் வந்து மோதுவதைப் போன்று மிகவும் தாளப்பறந்து குண்டு வீசுவதும் பின்னர் காணாமல்போவதுமாக இருந்தது.

இந்தச் சத்தத்திற்குச் செவிசாய்த்து அரணை விட்டு வெளியே வந்து பார்க்க அவகாசம் இருக்கவில்லை.

அவ்விமானம், தமிழீழ மண்ணில் தாளப் பறந்ததற்கான தண்டைனைளைப் பெற்று பண்ணைக்கடலுக்குள் குப்புற விழுந்து விட்டது.

பண்ணை வீதிக்குக் கிழக்குப்பகுதியில், கோட்டைக்கு நேரே முன்னால் சமார் 1000 யார் தொலைவில் வீழ்ந்த அதன் பாகங்கள் சிலவற்றை மறுநாள் எமது கடற்புலிகள் கரை சேர்த்தனர்.

விமானம் வீழ்த்தப்பட்டவுடன் சிங்களப் படைக்கு இருந்த இறுதி நம்பிக்கையும் அற்றுப் போக பண்ணைச் சந்திப்பக்கமாக நகர்ந்த வந்த இராணுவத்தினரில் எஞ்சியவர்கள் இறந்தவர்களின் உடல்களையும், ஆயதங்களையும் விட்டுவிட்டு கோட்டையின் பின்புறத்தை நோக்கி பின்வாங்கினர்.

இது இவ்வாறிருக்க பொலிஸ் நிலையப்பகுதி அரண்களைப் பார்ப்போம்.

அதிகாலை 6:00 மணிக்குத் தொடங்கி ஒரு சில நிமிடங்களில் கோட்டையை அடைந்து விடலாம் என்ற நம்பிக்கையுடன் புறப்பட்ட படகுகளில் மூழ்கடிக்கப்பட்டவை தவிர ஏனையவை கோட்டையை வந்தடைய சுமார் ஒரு மணி நேரத்திற்கும் அதிகம் சென்றது.

பண்ணைச்சந்திக்காவலரணைக் கைப்பற்றச் சென்றதைப்போலவே மண்டைதீவிலிருந்து வந்த இராணுவத்தினரில் சிலர் பொலிஸ் நிலையக் கட்டிடங்களையும் கைப்பற்ற கோட்டையின் பின்புறமுள்ள கடற்கரை வீதியால் செல்லமுயன்றனர்.

எமது மதிவெடிகளில் சிக்கியும் பொலிஸ் நிலையக்காவல் அரண்களிலிருந்தும், விளையாட்டரங்குக்காவல் அரணுக்குள்ளிருந்தும் முழங்கிய எமது துப்பாக்கிகளுக்கும் ஒவ்வொருவராக விழத்தொடங்கினார்கள்.

ஒரு மணிநேரமாக மண்டைதீவிலிருந்தும் கடலிலிருந்தும், கோட்டையிலிருந்தும், விமானத்திலிருந்தும் ஏவப்பட்ட குண்டுகளினால் எமது காவலரண்களில் சில உடைந்தேவிட்டன. உடைந்து குவிந்த அந்தக் காவலரண்களையே காப்பரண்களாக்கி புலிகள் போரிட்டனர்.

மழைபோல் பொழிந்த ஏறிகணை வீச்சுகளினாலும், பீரங்கிக் குண்டுகளினாலும் இப்பகுதி அரண்களில் நின்ற பலர் காயமடைந்துவிட்டனர். உடனடியாக அவர்களது இடத்தை நிரப்பி நின்று போரிடுவதற்காக மேலதிக போராளிகள் அனுப்பப்பட்டனர். காயமடைந்த போராளிகள் உடனடியாக அப்புறப்படுத்தப்பட்டு சிகிச்சை அழிக்கப்பட்டனர்.

பொலிஸ் நிலையப்பக்கமிருந்து எதிரிக்கு கடுமையான எதிர்ப்பைக்கொடுத்து அவனது முன்னேற்றத்தை தடுத்தபடி இருந்த காவல் அரண் ஒன்று எதிரியின் பீரங்கித் தாக்குதலால் சரிந்து வீழ்ந்துவிட்டது, கப்டன் ஆனந்த பாபுவின் தலைமையில் நின்று தீரமுடன் போராடிக் கொண்டிருந்த புலிகள் அதற்குள் சிக்கிவிட்டனர்.

எதிரிக்குச்சவாலாக இருந்த எமது காவல் அரணொன்று அழிக்கப்பட்ட திருப்தியில் எதிரி மீண்டும் ஒரு முறை ஒரு புதிய நகர்வை எடுக்கத் தீர்மானித்தான்.

இதே சமயம் இந்தக் கோட்டை முகாம் முற்றுகைக்குப் பொறுப்பாக இருந்த புலிவீரன், சுரேஸ், குண்டுபட்டுக்காயமடைகின்றான். (இந்திய இராணுவத்துடனான போரில் வவுனியாக்காட்டில் ஒரு குண்டு வெடிப்பில் சிக்கிய சுரேஸ் தனது ஒரு கையை இழந்தது குறிப்பிடத்தக்கது).

இவனுக்குப் பதிலாகப் புதிய புலிவீரன் ஒருவன் போர் முனைக்கு அனுப்பப்படுகின்றான்.

நேரம் பி.ப. 1:00 மணியைத் தாண்டிவிட்டது.

இந்த நிலையில்தான் கோட்டைக்குள்ளிருந்து ஒரு இராணுவ கவசவண்டி வந்து கொண்டிருந்தது.

மண்மூடைகள் அடுக்கப்பட்டு உள்ளே சுமார் 10 இராணுவத்தினரை ஏற்றியபடி பொலிஸ் நிலையக்கட்டிடத்திற்குள், உடைக்கப்பட்ட கப்டன் ஆனந்தபாபுவின் காவலரணையும் தாண்டி உள்ளே சென்று நின்றது. இந்த வண்டியை காப்பரணாக்கிக் கொண்டி பல இராணுவத்தினரும் எமது நிலைகளுக்குள் வரமுயன்றனர்.

ஏறக்குறைய பொலிஸ் நிலையக்கட்டடங்கள் அனைத்துமே உடைந்து விட்டன. எமது பிரதான காவல் அரண் ஒன்றும் சரிந்துவிட்டது இனி இந்தக்கட்டடங்களுக்குள் மனிதர்கள் இருக்கமுடியாது எனக்கருதிக் கொண்டே இராணுவத்தினர் அந்த இறுதி முயற்சியை எடுத்தனர்.

ஆனால் உடைந்த சிதைவுகளுக்குள்ளே இருந்து புலிகள் எழுந்தார்கள். இராணுவ வாகனத்தில் வந்தவர்கள் தாக்கத்தொடங்கு முன்னர் தாக்கப்பட்டனர். மிரண்ட இராணுவத்தினர் கோட்டைக்குள்ளே ஓட எத்தனித்தனர். விளையாட்டரங்கில் இருந்த புலிவீரர்களின் துப்பாக்கிகள் இயங்கித்தணிந்தபோது பொலிஸ் நிலைய வாசலிலேயே 7 இராணுவத்தினர் சுருண்டு விழுந்தனர்.

எஞ்சியவர்கள் காயங்களுடன் கோட்டைக் குள்ளே ஓடித்தப்பிவிட்டனர்.

எதிரியின் இறுதி முயற்சியும் முறியடிக்கப்பட்டு விட்டது. எதிரியின் மூக்குநுனியின் முன் னாலேயே அவனது சக பாடிகளின் சடலங்கள் கிடத்தன. ஆனால் அவனால் அதை எடுக்க முடியவில்லை. நேரம் மூன்று மணியையும் தாண்டிவிட்டது. சிறிது நேரத்தில் பறந்து வந்த அவ்ரோ விமானமொன்று எமது காவல் அரண்களை அண்டிய யாழ் நகரின் மத்திய பகுதிகளில் ஒருவகை இரசாயனக் குண்டு களை வீசத் தொடங்கியது.

மாலை 5:00 மணிவரை 25 ற்கும் மேற்பட்ட இரசாயனக் குண்டகளை நகர்மீது வீசி தனது ஆத்திரத்தை தீர்த்துக் கொண்டது. தான் போக வழியில்லாத மூஞ்சூறு விளக்கு மாற்றையும் காவிக்கொண்டு போனதைப்போல. கோட் டையை மீட்க வந்த இராணுவம் கோட்டைக் குள்ளே மாட்டிக் கொண்டு கோட்டை முகா முக்குள் சிக்குண்டு கிடந்தவர்களுக்கு மேலும் பாரமாகியது.

அன்று தொடக்கம் இரவு, பகல் என்றபேத மின்றி தொடர்ச்சியாகக் கோட்டை தாக்கப் பட்டது.

முதல் நாள் பகல் கோட்டை மதிலோரம் சென்று விட்ட சில படகுகளின் உதவியுடன். தண்டு வலித்து காயமடைந்த இராணுவத் தினர் இரவில் இருட்டின் உதவியுடன் மண்டைதீவுக்குத் தப்பி ஓடவும் முயன்றனர்.

இவர்கள் இடைநடுவில் பண்ணைக் கடலுக் குள் கடற்புலிகளினால் பலதடவைகள் தாக் கப்பட்டனர்.

“பாதுகாப்பான பகுதி” என எதிரி கருதிய மண்டை தீவை நோக்கியிருந்த கோட்டை யின் கடற்கரைப்பகுதிகளுக்குள்ளும் தினமும் இரவில் இராணுவத்தினர் மீது தாக்குதல்களை நடாத்தினோம்.

எதிரிகளை மலைக்கச் செய்யும் வகையில் தரையில் எவ்விதம் தாக்கப்பட்டார்களோ அதைப்போலவே கடலிலும் தாக்கப்பட்டார்கள்.



கோட்டையின் உட்புற வாசலில் புலிக்கொடி பறக்கின்றது

ஒவ்வொரு விடிகாலையிலும் புதிய பொலிவு பெற்று வருவதைக் கண்டு எதிரி திகைத் திருப்பான்.

திலீபனது 3வது நினைவு நாளும் நெருங்கிக் கொண்டிருந்தது அந்த நாளை நினைத்து எதிரி கலங்கிக்கொண்டிருந்தான்.

கோட்டை தாக்கப்படப் போகின்றது. என எதிர்பார்த்தான்.

கோட்டையை விட்டுத்தப்பி ஓடுவதற்குத் தீர்மானித்து மண்டைதீவை நோக்கியிருந்த

கோட்டைப் படை எடுப்பு முறியடிக்கப்பட் டவுடன் கோட்டைக்குள் சிக்கிக்கிடந்த இராணுவத்தினர் தப்பி ஓட நடவடிக்கைகள் எடுப்பார்கள் என்பது எமக்கு நன்கு தெரியும்.

எனவே கடற்கரையை நன்கு நோட்டமிட்ட படியே இருந்தோம். இராணுவத்தினர் ஒரு சில படகுகள் மூலம் தண்டுவலித்தும், கடலுக் கூடாக நடந்தும் தப்பி ஓடுவதைக் கண்டு விட்டு கடலுக்குள் வைத்தே தாக்கத்தொடங்கினோம். “இவர்களிடமிருந்து ஆயுதங்களைப் பறிக்க வேண்டும், இவர்களை தப்பி

இம்மண்ணின் மைந்தர்களுள் எத்தனை யோபேரை விழுங்கி ஏப்பம்விட்ட யாழ. கோட்டை இருளில் வெறுமனே கிடந்தது. 370 வருட சரித்திரத்தில், ஒரு நாளுமே இல்லாதவாறு, ஒரு பின்னிரவு, கோட்டை மனித சஞ்சாரம் அற்றுக்கிடந்தது.

26.09.1990 விடியற்காலையில், எதிரி விதைத்த பொறிவெடிகளை அறுவடை செய்த படி புலிவீரர்கள் கோட்டைக்குள் புகுந்து



கொண்டிருந்தார்கள்.

கோட்டையைச் சூழ முற்றுகையில் ஈடுபட் டிருந்த புலிவீரர்கள் கோட்டையை உற்று நோக்கியபடி இருந்தார்கள்.

கோட்டையைப் போலவே அவர்களுடைய முகங்களும் புதிய தோற்றத்துடன் காணப் படுகின்றன.

அவர்களளுடைய பார்வைகள் ஆயிரம் கதை களைக் கூறுகின்றன.

05.08.1990 அன்று, சுதந்திரத்தை மீட்கச் சென்ற வரிப்புலி உடைகள் சில ஆங்காங்கே கிடந்தன. அவற்றுடன், அடக்குமுறைக்கு வேலி போடச்சென்ற புலிகளின் எலும்புகளும் கிடந்தன.

காவல் அரண்கள் மீது ஏறி நடந்த புலிகள் அவற்றைச் சேகரிக்கின்றார்கள்.

சரியாக 10:48 மணிக்கு - இது திலீபன் வீரச் சாவடைந்த நேரம் - யாழ் மாவட்டத் தளபதி திரு. பானு கோட்டை மீது புலிக்கொடி (தமிழீழத் தேசிய கொடி) ஏற்றுகின்றார்.

கோட்டை வெற்றிச்செய்தியுடன், வீழ்ந்துவிட்ட புலிவீரர்களின் எலும்புகளும் மக்களிடம் சுமந்து செல்லப்படுகின்றன.



முன்னரே போட்ட திட்டத்தின்படி தனது படை வீரர்கள் யாழ் நகரத்தைக்கைப்பற்றி விடவார் கள் என்ற அதீத நம்பிக்கையில் சிறீலங்கா அரசியல் தலைவர்கள் கோட்டை கைப்பற்றப் பட்டதாக வெற்றிப்பிரகடனங்களைச் செய்தபடி இருக்க.

இங்கே... மதில்மீது காவல் கடமைக்கு வரும் ஒவ்வொரு சிப்பாயும் புலிகளை காவல் காத் ததுடன் புலிகளின் காவல் அரண்களுக்கு அருகில் செத்துக்கிடந்த தனது சகபாடிகளின் அழுகிய உடல்களை எடுக்கத்திராணி அற்று பச்சாதாபத்துடன் பார்த்துக்கொண்டிருந்தான்.

நாட்கள் நகர்ந்துகொண்டிருந்தன...

எதிரியினது குண்டுவீச்சுக்களினால் சிதைக் கப்பட்டுக் கிடந்த எமது காவல் அரண்கள்

கடற்கரை யோரமாக சீமெந்திடப்பட்டு மூடி வைக்கப்பட்டிருந்த பின்கதவு அகற்றப்பட்டு (முன்னர் கழிவுகள் அகற்றப்பயன்பட்டது) தயாராக வைக்கப்பட்டிருந்தது.

### விடிந்தால் திலீபனின் மூன்றாவது ஆண்டு நினைவு நாள்

எதிரி நினைத்திருந்ததைப் போலவே இரவு 12:00 மணியளவில் எமது தயாரிப்பான சக்தி வாய்ந்த ஏறிகணைகள் கோட்டைக்குள் வீசப் பட்டன. பாரிய சத்தத்துடன் கொத்தளங்கள் சரியும் வண்ணம் ஏறிகணைகள் வீழ்ந்து வெடித்த அதே சமயம் கோட்டையின் பின்புற வாசல் உடைக்கப்பட்டு தப்பி ஓடும் படலம் ஆரம்பமாகியது.

ஓடவிடக்கூடாது” என்று சத்தமிட்ட படி கடற் கரைப்பக்கம் ஓடிச் சென்று இராணுவத் தினரை வழிமிறத்துத் தாக்கிய நகுலன் எதிரியின் குண்டு பட்டு வீழ்ந்தான்.

இன்னொருமுனையில் சிசிலியா, ரகு வீரச் சாவடைகின்றார்கள்.

திசைமாறி கடலுக்கூடாக நடந்தும், நீந்தியும் சென்ற இராணுவத்தினரை மண்டைதீவி லிருந்த இராணுவத்தினர் அடையாள வெளிச் சங்களைப் பாச்சி தம்பக்கம் வருமாறு சைகை செய்தபடி இருந்தனர்.

இதுவரை காலமும் எமது மக்களை ஆக்கிர மித்து வைத்திருக்க உதவிய கூடாரங்களில் ஒன்றைக்கைவிட்டு நடு நிசியில் எதிரி தப்பி ஓடிக்கொண்டிருந்தான்.


AFFORDABLE
REFRIGERATION
SERVICES INC
Walk - In Freezers
Walk - In Coolers
Reach - In Freezers
Reach - In Coolers
We Sell. Install used &
new Walk in Cooler, Walk in Freezer
Kapil: 647.515.8643
kapil.afr@gmail.com


New RANGANAS
JEWEL HOUSE
நியூ ரங்கனாஸ் நகைமாடம்
NEW RANGANAS JEWEL HOUSE
SINCE 1996
கனடா வரலாற்றில்
எங்கும் கண்டிடாத
சேவை
சிங்கப்பூர், டுபாய் நகைகள்
மிகவும் மலிவான விலையில்
Singapore, Dubai Jewellery
for Lowest Price
1%
முதல் தங்க
நகை
அடைகு
சேவை
Markham & Steeles
(Yellow Building)
திருமணத்துக்கான தாலிக்கொடி
குறைந்த விலையில்
பெற்றுக்கொள்ள கனடாவில்
நம்பிங்கை நாணயம் கைராசி
ஒரே இடம் நியூ ரங்கனாஸ்
Tel: 647.702.2159
647.947.2864
New RANGANAS JEWELLERY
647-947-2864
6055 Steeles Ave., E. Unit C102, Scarborough ON M1X 0A7
www.newranganasjewelhouse.com
kprranga@hotmail.com


MORTGAGE
SUBRA MORTGAGES INC.
Residential/Commercial/Industrial
& Investment Properies
1st, 2nd & 3rd Mortgages
Purchase Refinance
Renewal Switches
Equity Line of Credit
Pre-Approvals
Self-Employed
Multi Rental Properties
New Immigrants
Mortgage In Any Situations
LOAN
LINE OF CREDIT
WE DEAL WITH ALL BANKS
NESAN
416-908-5656
www.subra.com or www.nesan.ca
email:mortgage@subram.com
MORTGAGE ALLIANCE
Independently Owned & Operated
Lic. No: M15001465, Brokerage No: 10530
Corp Off: 2005 Sheppard Ave E, Suite 200
North York, ON M2J 5B4
Office: 1585 Markham Rd, Unit 406, Scarborough ON M1B 2W1
Off: 416-660-5656/Fax: 647-351-3099/ Toll: 1-844-878-2721




# திருமலைப் படுகொலைகள் யூன், ஒகஸ்ட், செப்டம்பர் – 1985

இம்மாதங்களில் திருமலை மாவடடத்தில் பல படுகொலைகள் நடந்தேறின. பிரசைகள் குழுக்களின் இணைப்பு அமைப்பின் அறிக்கைகளின் படி முன்னூற்று பதினொரு தமிழர்கள் யூன் 1985 இல் திருமலையில் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. சற்றடே ரீவ்யூ நாளேடு 21.12.1985 இன்று வெளியிட்ட செய்தியில் இத்தொகை முன்னூற்று எண்பத்துமூன்று எனக் கூறியுது. ஜெரமி கிளிங் என்கிற செய்தியாளர் சாம்பல் தீவில் பலர் காணாமல் போயிருப்பதாகவும் அவர்கள் கொல்லப்பட்டிருக்கலாமென டெல்லி நீயூசில் தகவல் வெளியிட்டிருந்தார்.

1985 ஆம் அண்டு செப்ரெம்பர் மாதம் நான்காம் திகதிக் கும் ஒன்பதாம் திகதிக்குமிடையில் திட்டமிடப்பட்ட முறையில் மகிப் பெரிய இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. திருகோணமலை நகரின் வடபகுதியிலிருந்து தமிழர்களைத் துரத்தும் நடவடிக்கையாக இவ்விராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. இதில் ஆகாய வழியாக உலங்கவானூர்தியும் கடலிலிருந்து எறிகணைத் தாக்குதலும், துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டன. சென்ரல் வீதி, பிரதான வீதி, ஏகாம்பரம் வீதி, வீரநகர், திருக்கடலூர், உப்புவெளி, மூன்றாம் கட்டை, நாவலர் றோட், உப்புவெளிச் சந்தி ஆகிய இடங்களில் கனரக ஆயுதங்கள் தரித்த இராணுவத்தினர் குவிக்கப்பட்டிருந்தனர். அத்துடன் ஊர்காவற்படையினரும் இங்கு குவிக்கப்பட்டிருந்தனர். இவ்விரு குழுக்களும் சேர்ந்து தமிழாகளுக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். இதன்போது தமிழர்களுக்குச் சொந்தமான ஆயிரத்து ஐநூறு வீடுகளும் கடைகளும் கட்டடங்களும் அழிக்கப்பட்டதுடன் தமிழர்களுக்குச் சொன்தமான வள்ளங்களும் சொத்துக்களும் சூறையாடப்பட்டன. இந்த நடவடிக்கையின் போது இருநூறு சிறுவர்கள் தங்கியிருந்த சிவானந்த தபோவனத்தின் கட்டடமும் தகர்த்து அழிக்கப்பட்டது. இந்தக் கோயில்கள் முற்றாக அழிக்கப்பட்டன. இருபத்தைந்து பொதுமக்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். மேலும் அழிப்பதற்கு தமிழர்களுக்கு எந்தச் சொத்தும் இல்லை என்றவுடன், இத்தாக்குதல் நிறுத்தப்பட்டது. இத்தாக்குதல் நடவடிக்கை வெளியிற் தெரியாமல் இருக்க நாளேட்டு நிருபர்களோ, வெளிநாட்டு நிருபர்களோ இப்பகுதிக்குச் செல்லத் தடைவிதிக்கப்பட்டனர்.

# பருத்தித்துறை திக்கம் படுகொலை – 16.09.1984

16.09.1984 அன்று நாலு சிறீலங்கா படையினர் ஒரு கண்ணணி வெடித் தாக்குதலில் கொல்லப்பட்டனர். இதற்குப் பழிவாங்கும் நோக்கத்தில் சிறீலங்கா பொலிசார் 16 பொதுமக்களை தாக்கிக்கொன்றனர். அதோடு பருத்தித்துறையில் அமைந்துள்ள ஹாட்லிக்கல்லூரி நூல் நிலையமும் அதன் விஞ்ஞான பரிசோதனை அறைகளும் பொலிசாரால் தீமூட்டி எரிக்கப்பட்டது.



# நிலாவெளி படுகொலை – 16.09.1985

திருகோணமலை மாவடடத்தின் குச்சவெளிப் பிரதேசசெயலர் பிரிவிற்குட்பட்ட நிலாவெளிப் பிரதேசமானது. திருகோணமலை நகரிலிருந்து பத்த கி. மீ. தூரத்திலுள்ளது. 1983 ஆம் ஆண்டு இனக்கொலையைத் தொடர்ந்து 1985 ஆம் ஆண்டு நிலாவெளி அகதி முகாம் மக்களால் நிறைந்து காணப்பட்டது.

16.09.1985 அன்று நிலாவெளியில் நிலைகொண்டிருந்த சிங்கள இராணுவமும் ஊர்காவற்படையினரும் சேர்ந்து அகதிமுகாமைச் சுற்றிவளைத்தனர். அங்கிருந்த முப்பதிற்கும் மேற்பட்ட பொதுமக்களைக் கைதுசெய்து. அவ்விடத்திலேயே நிறுத்தி வைத்துச் சுட்டத்தில் அனைவருமே உயிரிழந்தனர்.

**16.09.1985 நிலாவெளிப் படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்**

1. முருகேசு தங்கராசா (46)
2. கச்சுமுகைதீன் முகம்மது காலித் (33)
3. வேலு சிவசுந்தரம் (24)
4. வேலு சிதம்பரநாதன் (25)
5. செல்லத்தம்பி நிர்மலானந்தன் ( 26)
6. சோசுந்தரலிங்கம் அருட்குமரன் (20)
7. அந்தோனிப்பிள்ளை கபிரியேல் (-)
8. இராஜேந்திரன் (29)
9. செய்யதுபுகாரி அப்துரசாக் (32)
10. கந்தையா கந்தசாமி (28)
11. கணபதிப்பிள்ளை சௌந்தரராஜன் (28)
12. செல்லத்தம்பி ரட்ணராஜா (41)
13. நேசதுரை றெறன்ஸ் (19)
14. கதிர்காமத்தம்பி கனகசபை (39)
15. முகமட் காசிம் முகமட் ராசிக் (31)
16. தாமோதரம் பிள்ளை நேமிநாதன் (19)
17. வல்லிபுரம் தருமலிங்கம் (18)
18. தர்மதாஸ் உதயநேசன் (19)
19. சுப்பிரமணியம் காளிராஜா (20)
20. செல்வவினாயகம் ஜெயகோபன் (26)
21. இராசையா துரைநாயகம் (36)
22. தாமோதரம்பிள்ளை சண்முகதாசன் (24)
23. மாமாங்கம் ரஞ்சநேசன் (21)
24. அபுசாலிபு அப்துல்நாயீர் (21)
25. சித்திரவேல் மாரிமுத்து (53)
26. சிங்கராயர் கிலீற்றஸ் பிரேமதாஸ் (20)
27. சிவபாலன் கெங்காதரன் (34)
28. பொன்னுத்துரை பார்த்தீபன் (34)
29. யோகராசா (27)
30. இரத்தினசாமி பார்வதி (23)

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.

# மண்டைதீவில் கைது செய்து காணாமற் போனவர்கள் 25.08.1990 – 23.09.1990

யாழ். நகரத்திற்குத் தெற்காக வேலணைப் பிரதேசசேயலகப் பிரிவினுள் ஆயிரத்து இருநூறிற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்ற மண்டைதீவுப் பிரதேசம் அமைந்துள்ளது.

25.08.1990 அன்று சிங்கள இராணுவத்தினர் ஊர்காவற்துரையிலிருந்து மண்டைதீவு நோக்கி இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டனர். இந்நடவடிக்கையின் போது மக்களைப் பாதுகாப்புக் கருதி ஆலயங்களிற் தங்குமாறு முதல் நாள் உலங்குவானூர்தியிலிருந்து துண்டுப் பிரசுரங்களை வழங்கி மக்களுக்கு அறிவித்தனர். இதன்படி மண்கும்பான், அல்லைப்பிட்டி போன்ற கிராமத்து மக்கள் மண்கும்பான் அந்தோனியர் தேவாலயத்திலும், அல்லைப்பிட்டி பிலிப்நேரியார் ஆலயத்திலும் அகதிகளாகத் தஞ்சம் புகுந்தனர்.

24.08.1990 அன்று மண்கும்பான் அந்தோனியார் ஆலயத்திலும், இருபத்தைந்தாம் திகதி அதிகாலை அல்லைப்பிட்டி பிலிப்நேரியார் கோயிலிலும் தஞ்சமடைந்த மக்களில் பதினைந்து வயதிற்கும் நாற்பது வயதிற்கும் இடைப்பட்டவர்களை சிங்கள இராணுவத்தினர் கைதுசெய்தனர். இதில் ஒரே குடமபத்தைச் சேர்ந்த மூவர், இருவர் என மண்டைதீவில் இருபத்தெட்டுப் பேரும், அல்லைப்பிட்டியில் முப்பதிரண்டு பேரும், மண்கும்பானில் பத்துப் பேருமாக மொத்தம் எழுபது பேர் கைது செய்யப்பட்டனர்.

28.08.1990 இல் கைதுசெய்தவர்களில் ஒரு சிலர் விடுவிக்கப்பட்டனர். பின்பு 23.09.1990 சிங்கள இராணுவத்தினரும், துணைக் குழுக்களும் (ஈ.பி.டி.பி) சேர்நது மண்கும்பான் அ.த.க பாடசாலையிலிருந்து பதினெட்டு மாணவர்களைக் கைது செய்தனர். எல்லாமாக மூன்று கிராமத்திலும் எண்பத்தெட்டுப் பேர் கைதுசெய்யபபட்டனர். ஆனால் இவர்கள் எவரும் இன்று வரை விடுதலையாகவில்லை.

இச்சம்பவத்தில் கைது செய்யப்பட்ட ஒரோ குடும்பத்தைச் சேர்ந்த விஜயரட்ணம், சுகிர்தரட்ணம், பிரேமரட்ணம் ஆகிய மூன்று பிள்ளைகளின் தந்தையான யேசுரட்ணத்திடம் இது தொடர்பாகக் கேட்ட போது:
"கைது செய்யப்பட்ட என் பிள்ளைகளின் நிலை தொடர்பாக 1991 ஆம் ஆண்டு முதல் வாரத்தில் நாங்கள் சிறிதர் விதியில் இருக்கும் ஈ.பி.டி.பி. செயலகத்திற்குச் சென்று திரு. டக்ளஸ் தேவானந்தாவிடம் கேட்டோம். ஜி அப்போது அவர் "அநேகமாக மூன்று பிள்ளைகள் என்றால் ஒன்றும் நடந்திருக்காது நான் அனுராதபுரம் போய்வந்து சொல்கிறேன். ஜி என்றார். அப்போது நாங்கள் பிள்ளைகளின் ஆவணங்களைக் கொடுத்தபோது அதைப் பிரதி பண்ணித் தரும்படி கேட்டார். அதன்படியே நாங்கள் அடுத்த நாள் அவரிடம் கையளித்தோம்.

அதன் பின்பு கூட்டுப்படைத் தளபதியாக இரந்த திரு. டென்சில் கொப்பேகடுவ அவர்களிடம் மனு செய்தோம். நேரிலும் அவரிடம் பல தடவைகள் கேட்டோம். ஒவ்வொரு தடவையும், ஒவ்வொரு முறையும் டக்ளஸ் தேவானந்தா வோடு தொடர்பு கொண்டார்களா" என்று தான் கேட்பார். கடைசி முறையாக 13.05.1992 நானும், அப்போதைய கல்விப் பகுதி பிரதி அமைச்சர் திருமதி. இராஜமனோகரி புலெந்திரன் அவர்களும் திரு. டென்சில் கொப்பேகடுவ அவர்களைக் கேட்ட போது, அவர் நான் இம்முறை தீவுப்பகுதிக்ப் போய்வந்து உங்கள் பிள்ளைகளைக் காட்டுகிறேன் என்றார். அதன் பின்னர் 1992 ஆனி மாதம் இறுதி வாரத்தில் கொழும்பு பார்க் வீதியில் இருக்கும் ஈ.பி.டி.பி செயலகத்தில் திரு. டக்ளஸ் தேவானந்தாவைக் கேட்டோம். அவரும் தான் இம்முறை தீவுப்பகுதிக்குப் போய் வந்து சொல்லுவதாகக் கூறினார்.

14.08.1992 திருமலை சீ.சீ.எம்.பி சிறையில் எமது பிள்ளைகள் உட்பட எண்பது பேர் மதிய உணவின் பின்னர் பாதுகாப்பாக வெளியே கொண்டு செல்லப்பட்டனர் என தகவல் கிடைத்தது. அதன் பின்னர் 23.12.1994 இல் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கவிடம் மனு பண்ணினோம். அப்போது அவர் ஆணைக்குழு விசாரணை செய்யப்போவதாகவும், அதற்கு எங்களை விண்ணப்பம் பண்ணும்படியும் சொன்னார். அதன்படியே ஆணைக்குழு விசாரணைக்கு விண்ணப்பித்தோம்.

12.06.1996 இல் ஆணைக்குழு விசாரணைக்கு வரும்படி அழைக்கப்பட்டு விசாரணை நடைபெற்றது. அப்போது ஆணைக்குழுவினர் உங்கள் பிள்ளைகளை திரு. டக்ளஸ் தேவானந்தாவிடம் கேளுங்கள் என்று கூறினார்கள். ஆனால் நாங்கள் கேட்கமுடியாது நீங்கள் கேட்டுச்சொல்லுங்கள் என்று கூறினோம். அதன்படி தாங்கள் கேட்டுச்சொல்லுவதாகக் கூறினார்கள். ஆனால் இதுவரை எவ்வித பதிலும் எனக்குக் கிடைக்கவில்லை" எனத் தெரிவித்தார்.

சிறீலங்கா இராணுவத்தினராலும் துணைக்குழுக்களாலும் கைது செய்யப்பட்டு காணாமற்போனவர்களில் பலர் சித்திரவதைகளின் பின் உயிரிழந்ததாகவும், அவர்களது உடல்களை மண்டைதீவில் வீட்டு வளவினுள் உள்ள கிணற்றிற் போட்டதாக ஊர் மக்கள் தெரிவித்தனர். இவர்களிற் சிலரின் எலும்பு கூடுகளும் மீட்கப்பட்டன. இவ்வாறு காணாமற்போய் உயிரிழந்தவர்களின் நினைவாக மண்டைதீவில் நினைவுக்கல் கட்டப்பட்டுள்ளது.

**25.08.1990 – 23.09.1990 வரை மண்டைதிவில் கைது செய்து காணமற்போனவர்கள் விபரம்**

1. சூசைப்பிள்ளை செல்வநாயகம் (35)
2. இ. சுதாகரன் (20)
3. இ. விபுலானந்தர் (30)
4. இரட்ணம் ஜெயசீலன் (23)
5. உதயகுமார் (-)
6. ந. குகானந்தராசா (24)
7. பாலசிங்கம் (30)
8. பத்திநாதர் டயஸ் (22)
9. பத்திநாதர் சென்யூட் (27)
10. பழனித்துரை சத்தியபாலன் (34)
11. பி.தவம் (18)
12. பி. ஜெயச்சந்திரன் (18)
13. பி. சதீஸ்வரன் (-)
14. பி. பத்மராசா (20)
15. ரி. இருதயராசா (26)
16. ரி. ஆரோக்கியநாதன் (23)
17. ரி. அருள்நேசன் (22)
18. ரி. யோகராசா (18)
19. ரி. ஞானேந்திரன் (25)
20. ரி. செல்வரட்ணம் (20)
21. ரி. சுந்தரலிங்கம் (24)
22. ரி. சாந்தலிங்கம் (20)
23. ரி. சிமோன் (20)
24. ரி. ராஜ்குமார் (32)
25. ரி. ராதாகிருஸ்ணன் (-)
26. ரி. ரவீந்திரன் (21)
27. வை. எட்வேட் (21)
28. த. பாலரட்ணம் (20)
29. திரநாயகம் சட்டநாத பிள்ளை (32)
30. மா. தவசீலன் (24)
31. மடுதீன் ஸ்ரானிக் (21)
32. மிசேல் ஸ்ரானிக் (19)
33. மிசேல் சில்வஸ்ரார் (32)
34. அ. அழகராசா (19)
35. அ. ஜெயசீலன் (23)
36. அன்ரன் அசில்லாஸ் (28)
37. அன்ரன் அருள்தாஸ் (26)
38. அந்தோனி ஆரோக்கிய ராசா (23)
39. அந்தோனி றொபேட் (20)
40. ஆர். முருகானந்தன் (21)
41. ஆர். ரவீந்திரன் (20)
42. அலம்பின் றொபேட் (18)
43. ஜெயக்குமார் (22)
44. ஜோர்ச் சில்வஸ்ரார் (20)
45. ஜேசுதாஸ் (-)
46. யோ. விஜயபாலன் (21)
47. நோபேட் ரமேஸ் (19)
48. கே. இந்திரகுமார் (21)
49. கே. இராசசேகரன் (21)
50. கே. பிரமாதீஸ்வரன் (22
51. கே. பீற்றர்போல் (17)
52. கே. விஜயகுமார் (19)
53. பொ. காந்தலிங்கம் (24)
54. செ. சுவக்கிப்பிள்ளை (30)
55. சொர்ணலிங்கம் லிங்கேஸ்வரன் (21)
56. ச. சதானந்தராசா (28)
57. சாள்ஸ் அன்ரனி அன்னதாஸ் (27)
58. சி. அரவிந்தன் (20)
59. சி. சந்தியசீலன் (29)
60. சி. விமலதாஸ் (20)
61. சிவபாலசிங்கம் (28)
62. வி. டொன்போஸ்கோ (19)
63. விஜயரட்ணம் ரவி (23)
64. வில்பிரேட் தேவராசா (25)
65. எஸ். விறேமரட்ணம் (16)
66. எஸ். திருச்செல்வம் (-)
67. எஸ். மகேந்திரன் (20)
68. எஸ். அன்பழகன் (19)
69. எஸ். அருள்நேசன் (28)
70. எஸ். செல்வநாதன் (21)
71. எஸ். சுகிர்தரட்ணம் (19)
72. எஸ். சிவரூபன் (16)
73. எஸ். சிவகுமார் (19)
74. எஸ். சிவபாலன் (19)
75. எஸ். ரஞ்சித்குமார் (19)
76. எஸ். ரவீந்திரன் (15)
77. எஸ். லிங்கேஸ்வரன் (22)
78. என். இரட்ணசிங்கம் (21)
79. என். ஜேசுதாஸ் (45)
80. எம். சிந்தாத்துரை (28)
81. என். விஜயரட்ணம் (35)

**வேறு நாட்களில் காணாமற் போனவர்களின் விபரம்**

1. நிசோலஸ் டயஸ் எட்வின் (17) – 17.07.1996
2. பி. வரோதயநாதன் (18) – 25.05.1993
3. தாவீது பென்ஜமீன் (25) – 1992 ஒகஸ்ட்
4. என. சச்சிதானந்தராசா (24) – 1986
5. வி. பாலரஞ்சன் (39) – 1991 பெப்ரவரி

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.

# மாத்தளன் படுகொலை 18.09.1993

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடற்பரப்பினை ஒரு பக்க எல்லையாகக் கொண்டமைந்த கிராமங்களில் மாத்தளன் கிராமமும் ஒன்று. இக்கிராம மக்கள் தமது அன்றாடத் தேவைகளைப் பூர்த்திசெய்யக் கடற்றொழிலையே நம்பியிரந்தனர். அத்தோடு தமது பொழுதுபோக்கு மையங்களாக இந்தக் கடற்கரைகளையே பயன்படுத்தி வரலாயினர். இவர்கள் தமது நாளாந்த தேவைகளை ஈடுசெய்ய வேண்டுமாயின் நான்கு கி.மீ. இற்கு அப்பாலுள்ள புதுக்குடியிருப்புச் சந்திப் பகுதிக்கே செல்லவேண்டிய நிலையும் இரந்தது. தமது கடற்பரப்பில் பிடிக்கப்படும் மீன்களைக்கூட இவர்கள் நீண்ட தூரம் சென்றே மக்களுக்கு விற்பனை செய்ய வேண்டிய நிலையில் வாழ்ந்து வந்தார்கள்.

இலங்கையில் உள்நாட்டுப் பிரச்சனை தொடங்கிய காலத்திலிருந்து கடற்படையினர் கடலில் மீன்பிடிப்பதற்குத் தடைவிதித்ததுடன்., மீனவர்களைக் கடலில் தாக்கியும் வந்ததர்கள். ஆனாலும் மீனவர்கள் தொடர்ந்தும் கடற்றொழிலைப் பல சிரமங்களுக்கு மத்தியிலும் செய்து வந்தனர்.

18.09.1993 அன்று மாலை 3:45 மணியளவில் மாத்தளன் சந்தியில் கட்டப்பட்ட பொது மண்டபத்தின் திறப்புவிழாவிற்காக முல்லைத்தீவு மாவட்டத்தின் பல பகுதிகளைச் சேர்ந்த இடம் பொயர்ந்த மக்களும், யாழ்ப்பாணம், கிளிநொச்சி போன்ற இடங்களிலிருந்து இடம்பெயர்ந்து அப்பகுதியில் வசித்த மக்களும் அப்பகுதியில் வாழ்ந்த மக்களும் அங்கு கூடினர். நிகழ்வுகள் நடைபெற்றுக்கொண்டிருந்த சமயத்தில் மாலை நான்கு மணியளவில் விமானப்படையின் "உலங்கு வானூர்தி" அப்பகுதியால் சென்றது. நேரம் மாலை 5:30 மணிக்கு மாத்தளன் வான்பரப்பிற்குள பிரவேசித்த சிறீலங்காவின் விமானப் படையின் "புக்காரா" குண்டுவீச்சு விமானங்கள் பத்திற்கும் அதிகமான றொக்கட் குண்டுகளை மண்டபத்தினை நோக்கி வீசியதில் மூன்று குண்டுகள் மண்டபத்தின் மீது விழுந்தன. ஏனைய குண்டுகள் மண்டபத்தின் முன்புள்ள சிறிய வயற்பகுதிகளில் விழுந்து வெடித்தன. எங்கும் "ஐயோ" என்ற அவலக்குரலுடன் மக்கள் திக்குத்திசையறியாது சிதறியோடினர். மண்டபம் புகைமண்டலமாக மாறியது. இவ்விமானத் தாக்குதலில் இருபது பொதுமக்கள் அவ்விடத்தில் உடல் சிதறிப் பலியானார்கள்.

நாற்பதிற்கும் அதிகமானனோர் படுகாயமடைந்தனர். குறிப்பிட்ட பொதுமண்டபமும் முற்றாகச் சேதத்திற்குள்ளானது. தாக்குதல் நடந்த சிலமணி நேரத்தின்பின் காயமடைந்தவர்கள் அம்புலன்ஸ் மூலம் புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்படடனர்.

**18.09.1993 மாத்தளன் படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்**

1. இன்ரிகிறேஸ் ஜோசப் (31)
2. இம்மானுவேல் ஆனந்தராஜா (19)
3. பிரான்சிஸ் அருள்தாஸ்(23)
4. பிலிப்புதவராசா சுஜாத்தா (10)
5. பரமானந்தம் (40)
6. தம்பிராசா குணசிங்கம் (18)
7. தியாகராஜா கண்ணன் (16)
8. மரியதாஸ் அன்ரன் ஜெயபாலன் (32)
9. மரியதாஸ் அன்ரன் யேசுதாஸ் (30)
10. முத்தையா துரைசிங்கம் (45)
11. மரியதாஸ் இன்மானுவேல் ஆனந்தராசா (19)
12. டானியல்பிள்ளை பிலிப்புதவராசா (39)
13. அந்தோனிப்பிள்ளை சகாயநாயகி (18)
14. யோசப் வினிற்றா கிறேஸ் பிரெட்றிக் (31)
15. யேகமார்க் அன்ரனிதாஸ் (29)
16. செல்லையா செல்வம் (கண்ணன்) (16)
17. சியாத்தா திலீப்மேரி (09)
18. சின்னப்பு அல்போண்ஸ் (22)
19. சங்கரசிவம் புலேந்திரன் (15)
20. சங்கரசிவம் சுரேந்திரன் (18

**காயமடைந்தவர்களின் விபரம்:**

1. கந்தையா குமாரசாமி (45)
2. அன்னலிங்கம் சொர்ணலிங்கம் (37)

குறிப்பு: - இச்சம்பவத்திற் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.



# சாவகச்சேரி – சங்கத்தானை புக்காராக் குண்டுவீச்சு 28.09.1993

யாழ் நகரிலிருந்து கிழக்குப்புறமாக யாழ்-கண்டி நெடுஞ்சாலையில் சாவகச்சேரி நகர் அமைந்துளள்து. சாவகச்சேரி நகரப்பகுதியிலிருந்து ஐநூறு யார் தொலைவில் கண்டி வீதியின் கிழக்குப் பக்கமாக சங்கத்தானைக் கிராமம் அமைந்துள்ளது.

1990 இன் பின்னர் போர் தீவிரமடைந்தது. இதன்போது விமானங்கள் மக்கள் குடியிருப்புக்கள், பொது இடங்களென எங்கும் தமது தாக்குதலை நடத்தின.

அத்துடன், சிங்கள இராணுவத்தினர் நீண்டதூர எறிகணைத் தாக்குதல்களையும் மேற்கொள்ளத் தொடங்கினார்கள். இதன்விளைவாகப் பொதுமக்கள் தம்மை விமானத் தாக்குதல், எறிகணைத் தாக்குதல்களிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக காப்பகளழிகளை அமைத்து வந்தனர்.

இக்கிராமத்தில் “உதயன் மரக் காலையில்” அமைந்திருந்த பதுங்குகுழி அயலில் வாழுகின்ற மக்களின் பாதுகாப்பரனாக இருந்தது. 28.09.1993 அன்று மாலை 5 மணியளவில் சாவகச்சேரி நகரப் பகுதியில் பெரும் இரைச்சலுடன் வந்த ஆஜன்ரினா நாட்டுத் தயாரிப்பான இரண்டு “புக்காரா” விமானங்கள் இரு தடவைகள் வானில் வட்டமிட்டன. பீதியுற்ற மக்களில் முப்பத்தைந்திற்கும் மேற்பட்டவர்கள் தம்மைப் பாதுகாக்க உதயன் மரக்காலையில் அமைக்கப்பட்ட காப்பகழிக்குள் சென்றனர். இவ் விமானங்கள் வீசிய முதலாவது குண்டு காப்பகழி மீது வீழந்து வெடித்ததால், காப்பகழிக்குள்ளிருந்த குழந்தைகள் உட்பட முப்பது பேர்வரை சம்பவ இடத்தில் மண்ணுக்குள் புதைந்த நிலையில் உயிரிழந்தார்கள். காப்பகழியில் தஞ்சமடைந்த மக்களில் ஐந்துபேர் மட்டும் காயங்களுடன் மீட்கப்பட்டனர்.

உயிரிழந்தவர்களின் நினைவாக சாவகச்சேரி சங்கத்தானை “உதயன் மரக்காலையில்” நினைவுத்தூபி எழுப்பப்பட்டுள்ளது.

**28.09.1993 அன்று சாவகச்சேரி – சங்கத்தானை புக்காராக் குண்டுவீச்சில் கொல்லப்பட்டடோர் விபரம்**

1. இரத்தினகோபால சுதர்சன் (11)
2. நாகேஸ்வரி குருநாதன் (56)
3. கந்தையா செல்வராசா (40)
4. கணேசன் கௌசிகா (12)
5. பாலசுந்தரம் சந்திரசேகரம் (09)
6. பாலசுந்தரம் சுரேஸ் (12)
7. பாலசுந்தரம் ரதி (03)
8. தஸ்யனி பாலசுந்தரம் (02)
9. தங்கம்மா கணபதிப்பிள்ளை (56)
10. தங்கராசா சுசீலா (21)
11. மகேஸ்வரி செல்லையா (52)
12. அமுதலிங்கம் லச்சம்மா (53)
13. ஜெகதீஸ்வரன் ஜனனி (07)
14. ஜெகதீஸ்வரன் தினேஸ் (08)
15. ஜெகதீஸ்வரன் தசாஜினி (11)
16. ஜெகதீஸ்வரன் சாந்தினி (31)
17. கோபாலபிள்ளை சுதர்சன் (09)
18. கோபாலரத்தினம் சுபாஜினி (15)
19. பொன்னுத்துரை ஞானேஸ்வரி (60)
20. தெய்வேந்தீரன் நாகேந்திரன் (19)
21. செல்வராசா யசோதா (18)
22. செல்வராசா சுஜாதா (16)
23. சுரேக்கா கோபாலரட்ணம் (09)
24. சின்னராசா நிறஞ்சினி (13)
25. சின்னராசா பிரபா (10)
26. சின்னராசா பிரபாலினி (10)
27. சின்னராசா பவானி (21)
28. ரட்ணகோபால் துஸ்யேந்திரன் (09)

குறிப்பு:- இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.

# கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்மன் ஆலயம் மீதான தாக்குதல் 29.09.1993

யாழ்ப்பாணத்தின் நல்லூர் பிரதேசத்தில் கொக்குவில் கிராமம் அமைந்துள்ளது. சைவசமய வளர்ச்சிக்கும், சைவ அபிவிருத்திக்கும் முன்னோடியாக இக்கிராமத்தில் நந்தாவில் எனும் ஊரில் கற்புலத்து மனோன்மணி அம்மன் ஆலயம் அமைந்துள்ளது. இவ்வாலயம் இற்றைக்கு இருநூற்றைம்பது வருடம் பழமை வாய்ந்ததாகவும், பல வரலாற்றுச் சிறப்பம்சங்களைக் கொண்டதாகவும் காணப்படுகின்றது.

வரலாற்றுச் சிறப்புமிக்க இவ்வாலயத்தில் 1988 ஆம் ஆண்டு இந்திய இராணுவத்தினராலும், 1993 ஆம் ஆண்டு சிறீலங்கா விமானப்படையாலும் மக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

1988 ஆம் ஆண்டு ஆவணி மாதம் காலை 8:00 மணியளவில் ஆலயப் பகுதியாற் சென்ற இந்திய இராணுவத்தினர் ஆலயத்தில் வழிபாட்டில் ஈடுபட்டுக்கொண்டு நின்றவர்களைச் சுட்டதில் எஸ். சண்முகம் (நல்லூர் ப.நோ.கூ.ச. ஊழியர்), கண்ணன் (ஆலய பூசகர்), குலேந்திரன் (A.G.A கோப்பாய்) ஆகியோர் உயிரிழந்தார்கள். மேலும் ஐந்து பேர் காயமடைந்தனர்.

29.09.1993 காலை 10:00 மணியளவில் சிறீலங்கா விமானப் படையின் “புக்காரா” விமானம் ஆலயம் மீது குண்டுத்தாக்குதலை நடத்தியதில் ஆலய வழிபாட்டில் நின்றவர்களில் மூன்று பெண்கள்



# யாழ் வடமராட்சி கிழக்கு நாகர்கோயில் பாடசாலைப் படுகொலை 1995.09.22









# யாழ் வடமராட்சி கிழக்கு நாகர்கோயில் பாடசாலைப் படுகொலை 1995.09.22





யாழ் மாவட்டத்தில் வடமராட்சியில் நாகர்கோயிற் கிராமம் அமைந்துள் ளது. இக்கிராமத்து மக்களின் பிரதான தொழில் மீன்பிடித்தல் ஆகும். கிராமத்தில் 15.02.1956 இல் திரு. வி. நாகநாதன் அவர் களின் முயற்சியினால் நாகர் கோயில் வடக்கில் யாழ். நாகர் கோயில் நாகேஸ்வரர் வித்தி யாலயம் அரசாங்கத்தினால் அமைக்கப்பட்டது. பின்னர் 1967 இல் யாழ். நாகர்கோயில் மகாவித்தி யாலமாகத் தரம் உயர்த்தப்பட்டது.

1990 ஆம் ஆண்டு சிங்கள இராணுவ நடவடிக்கை காரணமாக மயிலிட்டிக் கிராமத்திலிருந்து இடம்பெயர்ந்தவர்களில் ஆறுநூறு குடும்பங்கள் நாகர்கோயிலிற்கு இடம்பெயர்ந்தன. நாறூறு மாண வர்களைக் கொண்டிருந்த பாட சாலையின் மாணவர் தொகை எழுநூறாக உயர்ந்தது. 1991 ஆம் ஆண்டு ஆனையிறவுப் பகுதியில் நடைபெற்ற சண்டையினால் வெற் றிலைக்ணேி, ஆழியாவளை, கட் டைக்காடு போன்ற கிராமமக்களும் நாகர்கோயிலிலேயே தஞ்ச மடைந்தனர். 1993 ஆம் ஆண்டுக் குப் பின்பு மாணவர்களின் எண் ணிக்கை எண்ணூற்றுமுப்பதாக அதிகரித்தது. ஆசிரியர்களின் எண்ணிக்கை முப்பதாக அதிகரித் துக் காணப்பட்டது.

1995 ஆம் ஆண்டு செப்ரெம்பர் அருபத்தோராம் திகதி வடமராட் சியின் பல பாகங்களுக்கும் பலாலி யிலிருந்து சிங்கள இராணுவத் தினர் எறிகணைத் தாக்குதலை மேற்கொண்டனர். மறுநாள் இருபத் திரண்டாம் திகதி வெள்ளிக்கிழமை 6:30 மணிக்கு வடமராட்சி கிழக்குப் பகுதியில் சிறீலங்கா விமானப் படையின் "புக்காரா" குண்டுவீச்சு விமானம் மணற்காடு கிறிஸ்தவ தேவாலயத்துக்கு அருகில் குண்டுத் தாக்குதலை மேற்கொண்டதில் தேவாலயம் சேதமடைந்ததுடன், மணற்காட்டைச் சேர்ந்த இரத்தினம் அன்ரனிதாஸ் (08), மனோகரதாஸ் மரியஜித் (10), ஜோன்பொஸ்கோ கார்மிளா (05) ஆகிய மூவரும் உயிரிழந்ததுடன், பலர் படுகாய மடைந்தனர்.

அன்றைய நாள் (22.09.1995) வடமராட்சி கிழக்கில் காலை பதற் றமாக இருந்தபோதும் நாகர் கோயில் மகாவித்தியாலயத்துக்கு வழமைபோல மாணவர்கள் வந்தனர். அன்றையநாள் எண் ணூற்றுமுப்பது மாணவரில் எண் ணூற்றுபத்து மாணவர்கள் வந் திருந்தனர். வெள்ளிக்கிழமை என்ப தால் காலையில் இறைவழிபாடு ஆரம்பித்தது. இறைவழிபாட் டினைத் தொடர்ந்து நற்சிந்தனை இடம்பெற்றது. அன்றைய நற்சிந் தனையினை ஏழாம் ஆண்டில் கல் விகற்கும் "நவரத்தினசாமி உமாதேவி" எல்லோரையும் கவரக் கூடிய விதத்தில் இனிய குரலில் இருபத்தைந்து நிமிடம் உரையாற் றினார். இதனைத் தொடர்ந்து மாணவர்கள் கல்வி கற்றுக் கொண் டிருந்தார்கள்.

மதியம் 12:45 மணியளவில் வகுப்புக்கள் நடைபெற்றுக் கொண் டிருந்தபோது நாகர்கோயில் வான்பரப்பிற்குள் பிரவேசித்த சிறீலங்கா விமானப்படையின் இரண்டு "புக்காரா" விமானங் களிலிருந்து மாறி, மாறி எட்டு றொக்கட் குண்டுகள் பாடசாலை யையும், கிராமத்தையும் நோக்கி வீசப்பட்டதினால் அப்பிரதேசம் புகை மண்டலமானது.

இத்தாக்குதலில் காலைப் பிரார்த் தனையில் உல்லோராலும் பாராட் டப்பட்ட "நவரத்தினசாமி உமா தேவி" உட்பட எழு மாணவர்கள் பாடசாலையினுள் உயிரிழந்தார் கள். படுகாயத்துடன் உயிருக்காகப் போராடிய பதின்மூன்று மாணவர் கள் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும் வழியிலும், வைத்திய சாலையிலும் இறந்தனர். மேலும் நாற்பத்திரண்டு மாணவர்கள் படு காயமடைந்தனர். இன்னும் சில மாணவர்கள் தமது உடல் உறுப்புக் களை இழந்தனர். அன்று நடந்த புக்காராக் குண்டுவீச்சில் பாடசாலை மாணவர்களுடன் நாகர்கோயில் கிராமத்தைச் சேர்ந்த இருபத்திற்கும் மேற்பட்ட பொதுமக்களும் உயிரிழந் ததுடன், எண்பதைந்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் காயமடைந்தார்கள். அன்றை தாக் குதலில் இருபது மாணவர்கள் உட்பட நாற்பது பேர் உயிரிழந்தனர். நாற்பத்திரண்டு மாணவர்கள் உட்பட நூறு பேர் காயமடைந் தனர்.

**இச்சம்பவத்தில் வலது காலை இழந்த ச. சிறிவித்தியா கூறு கையில...**

"அன்று புக்காரா விமானம் பாட சாலை அருகில் முதல் குண்டை போட்டவுடன் எல்லோரும் சிதறி ஓடினோம். அப்போது மீண்டும் விமான இரைச்சல் சத்தம் பெரி தாகக் கேட்ட போது நான் பாட சாலையிலுள்ள அத்திமரத்தின் கீழே விழுந்து படுத்து விட்டேன். குண்டு பாடசாலை வளாகத் திற்குள் விழுந்து வெடித்தது பாடசாலை முழுக்க புகை மண் டலமாக இருந் தது. எங்கும் ஒரே அழு குரல்கள் கேட்டது. நானிருந்த இடத்தில் இருந்து தலையைத் துக்கிப் பார்த்த போது எங்கும் இரத்தமாக இருந் தது. எனது உடம்பிலும் காலிலும் காயமடைந்திருந்தேன அப்போது நான் அத்திமரத்தை பிட்டு எனக் கருகிலிருந்து எனது ஒன்றுவிட்ட சகோதரியையும் கூட்டிக்கொண்டு ஓடும் நோக்குடன் எழும்ப முயன்ற போது என்னால் ஓடமுடியாமற் போய்விட்டது. அந்தநேரம் எனது அண்ணாதான் வந்து என்னைத் துக்கிக்கொண்டுபோய் மந்திகை வைத்தியசாலையிற் சேர்த்தார். அங்கு எனது வலது காலினைக் கழற்றினார்கள். அத்துடன் எனது வலது கையையும் கழற்ற வேண்டு மென்று கூறினார்கள். பின்னர் யாழ் போதனா வைத்திய சாலையில் மேலதிக சிகிச்சை பெற்றுகுண மடைந்தேன்."

**22.09.1995 அன்று யாழ் வட மராட்சி கிழக்கு நாகர்கோயில் பாடசாலைப் படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்**

1. இராமநாதன் மேதினி (13)
2. இராமச்சந்திரன் சங்கீதா (14)
3. இராசரத்தினம் உமா காந்தன் (16)
4. இராசரத்தினம் கவிதா (10)
5. இரவீந்திரராசா அமிர்தா (10)
6. உ.தர்சினி (12)
7. நாகமுத்து செல்தில்வேல் (15)
8. நவமணி மிதுரா (14)
9. நவரத்தினசாமி உமா தேவி (12)
10. குகசரவணைமலை தர்சினி (13)
11. கிருஸ்ணகோபால் தவ சீலன் (13)
12. பூலோகராசா துஸ்யந்தி (13)
13. பாலச்சந்திரன் றெஜிதா (10)
14. த.சமித்தா (10)
15. தர்மலிங்கம் உசா நந்தினி (14)
16. தாமோதரம்பிள்ளை சகுந்தா (12)
17. தம்பிப்பிள்ளை கோபி தரன் (-)
18. மயில்வாகனம் கண நாதன் (13)
19. மகாலிங்கம் சண்முக வடிவேல் (16)
20. மார்க்கண்டு நாக லோசனி (10)
21. அன்ரன் மரிய மனோகர தாஸ் மரியஜித் (09)
22. அன்ரனி மரியறோஸ் அன்ரனிதாஸ் (08)
23. அல்போன்ஸ் அமலவிஜி (14)
24. யோன் பொஸ்கோ கார் மிலரா (04)
25. செல்வகுலசிங்கம் செல் வதி (17)
26. செல்வம் (16)
27. சிதம்பரப்பிள்ளை சசிரூபி (11)
28. ராகவன் (16)

**காயமடைந்தவர்களின் விபரம்**

1. தங்கவேலாயுதம் றேணு காயினி (12)
2. அ.றோமியா (10)
3. அக்கினேஸ்திரேசா கலி மண்ட் (12)
4. அக்கினேஸ்திரேசா அகிலதாஸ் (06)
5. அருமைலிங்கம் தாட் சாயணி (13)
6. சி. நரேசினி (09)
7. சி. சாரதா (45)

குறிப்பு: - இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.




நாகர்கோவில் பகுதிப் பாடசாலை [illegible] மீது சிறீலங்கா விமானப்படை விமானங்கள் நடத்திய தாக்குதலில் பலியான மாணவர்களின் பாடப்புத்தகங்கள் இரத்தம் தோய்ந்த நிலையில்

# அம்பாறை பொத்துவில் இரத்தன்குளம் படுகொலை – 17.09.2006

அம்பாறை பொத்துவில் பிரதேசத்திலிருந்து 11 கிலோ மீற்றர் தொலைவில் இரத்தன் குளம் உள்ளது. இந்த அணைக்கட்ட அமைந்துள்ள பிரதேசம் பொத்துவில் கிராமசேவகர் பிரிவிற்குப்பட்டது. எனினும் தற்போது அந்தக் கிராமம் சிங்களப் பகுதியிலுள்ள லபுகல கிராமசேவகர் பரிவிற்கு மாற்றப்பட்டுள்ளது. பொத்துவிலின் இரத்தன்குளம் பகுதியில் புத்தர்சிலை ஒன்றினை நிவும் முயற்சிகளை சிங்களவர்கள் மேற்கொண்டிருந்தனர். இதனையடுத்து அப்பகுதியில் சிங்களவர்களக்கும். தமிழ் முஸ்லிம்களுக்கும் இடையில் முறுகல் நலை ஏற்பட்டிருந்தது. அத்தோடு சிங்களவர்கள் பொத்துவிலிருந்து தமிழ் முஸ்லிம்களை முழுமையாக வெளியேற்றும் நோக்கில் அப்பகுதியில் வெனகல் என்னும் பெயரில் புதிதாக ஓர் பிரதேசசெயலகர் பிரிவை தனியாக உருவாக்கினர். இதனைத் தொடர்ந்து தமிழ் முஸ்லிம்களுக்கும் சிங்களவர்களுக்குமிடையே எல்லைச் சண்டைகளும், காணிப் பிரச்சனைகளும் தொடர்ந்து வண்ணமே இருந்தன. இதனால் இரு இனத் தலைவர்களுக்கும் இடையே முறுகல் நிலை மேலும் வலுப்பெற்றது.

இந்த நிலையில் மேற்படி குள அணைக்கட்டை புனரமைப்பதற்காக 2006 செப்ரெம்பர் 17 ஆம் நாள் தமிழ் முஸ்லிம் இளைஞர்கள் சென்றிருந்தனர். சிறீலங்கா அதிரடிப்படையினர் அங்கு அவர்களைக் குத்தியும், வெட்டியும், கழுத்தறுத்ததுமாக பத்து தமிழ் முஸ்லிம்களை படுகொலை செய்தனர். ஒருவர் படுகாயமடைந்த நிலையில் தமிழ் முஸ்லிம் மக்களால் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனமதிக்கப்பட்டார். இந்த நிலையில் மேற்படி சம்பவ தினத்திற்கு மூன்று நாட்களுக்கு முன்னர் சின்னப்பிள்ளை என்னுமிடத்தில் அமைந்துள்ள தமிழ் முஸ்லிம்களின் மையவாடிப் பகுதியில் சிங்களவர்கள் அத்துமீறி நுழைந்து ஒருவரின் உடலைப் புதைப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர். இதனைத் தொடர்ந்து தமிழ் முஸ்லிகள், சிங்களவர்களுக்கிடையில் பெரும் இன முரண்பாடுகள் ஏற்பட்டன.

இவ்வாறு தமிழ் முஸ்லிம்கள் குடியிருக்கும் நிலங்களை தமது ஆதிக்கத்திற்குக் கீழ் கொண்டு வரவதற்கான முயற்சியில் ஈடுபட்டுவந்த சிங்களப் பேரினவாதிகள் தொடர்ந்தும் தமிழ் முஸ்லிம்களை ஒடுக்கும் முயற்சியின் ஒரு கட்டமாக அவர்களுக்கு எச்சரிக்கை ஒன்றினை விடக்கும் நோக்கிலேயே சிறீலங்கா விசேட அதிரடிப்படையினரால் இப்படுகொலைகள் மேற்கொள்ளப்பட்டதாக கருதப்படுகின்றது.

**இச்சம்பத்தின் போது உயிரிழந்தவர்களின் பெயர் விபரம்**

1. எம் அனுர்தீன் (15)
2. எம். நபார் (15)
3. எம். சமுதீன் (18)
4. எ.எம். பைசல் (19)
5. எல். அனிஸ் (19)
6. எம். ஜப்பர் (20)
7. எஸ்.எல். றிசாட் (-)
8. ஏ.எம். அஜ்மீர் (18)
9. எம். பைரூப் (19)
10. எம். ஐ. சியம் (-)

**காயமடைந்தவர்**

1. எம். மீரமுகைதீன் (55)

# கோணாவில் விமானக் குண்டுவீச்சுத் தாக்குதல் 27.09.1996

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேசெயலர் பிரிவில் உள்ளடங்கியுள்ள கிராமங்களில் ஒன்று கோணாவிலாகும். அத்துடன் இது ஒரு விவசாயக்கிராமமாகும். இங்கு பலர் கூலித்தொழிலிகளாவர். இந்தக் கிராமத்து மக்கள் யுத்தகாலத்தில் பல தடவைகள் இடம்பெயர்ந்து பற்பல இன்னல்களையும் அனுபவித்தவர்களாவார்கள்.

1996 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் இருபத்தேழாம் திகதி காலை 11:30 மணியளவில் சிறீலங்கா விமானப் படையின் இரண்டு "கிபிர்" விமானங்கள் கோணாவில் காந்தி கிராமச்சந்தியில் குண்டுகளை வீசியது. இவ்விமானக்குண்டு வீச்சில் காந்தி கிராமச்சந்தியில் நின்ற மூன்று பொதுமக்கள் அவ்விடத்தில் உடல் சிதறிப்பலியானதுடன், பலர் படுகயமடைந்தனர். படுகாயமடைந்தவர்களில் இருவர் அக்கராயன் வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற பின் சிகிச்சை பலனழிக்காமல் உயிரிழந்தனர்.

**இச்சம்வத்தில் தகப்பனையிழந்த விமலேஸ்வரி சம்பவம் பற்றி கூறுகையில்**

"1996ஆம் ஆண்டு சத்ஜெய இராணுவ நடவடிக்கை காரணமாக நாங்கள் இடம்பெயர்ந்து போய் இராஜன் குடியிருப்பிலே இருந்தோம். அன்றை தினம் அம்மா மதிய உணவைச் சமைத்துக் கொண்டிருந்தார். அப்பா மரக்கறி வாங்குவதற்காக காந்தி கிராமம் சந்திக்குச் சென்ற போது தான் கிபீர் விமானம் குண்டு போட்டது. அப்பா நெஞ்சுப்பகுதி முழுவதும் சிதைந்து போய் அவ்விடத்திலேயே இறந்து விட்டார். இதை அறியாத நானும் அம்மாவும் காந்தி கிராமத்திற்கு ஓடி வந்து பார்த்தபோது அப்பாவைக் காணவில்லை. சிலவேளை வீட்டிற்கு வந்தீருப்பார் என்று நினைத்து திரும்பவும் வீடு போய்ப் பார்த்த போது அங்கேயும் இல்லை. அப்பா இறந்தது தெரியாது நாங்கள் தேடித்திரிந்த போது தெரிந்த ஒரு அண்ணா வந்து சொன்னார், உங்களுடைய அப்பா காலில் காயம்பட்ட நிலையில் அக்கராயன் வைத்தியசாலையில் இருக்கிறார் என்று. உடனே நாங்கள் அவருக்குத் தேவையான பொருட்கள் எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு வைத்தியசாலைக்குப் போனோம். அங்கே எனது அப்பாவின் உடலையும் தாத்தாவின் உடலையும் அத்தையும் சில உறவினர்களும் எடுத்து வைத்திருந்ததை கண்ட போது தான் இருவரும் இச்சம்பவத்தில் கொல்லப்பட்டார்கள் என்பது தெரிந்தது. பின்னர் இருவரது உடல்களையும் அக்கராயன் முதலாம் இலக்க அரிசி அலை வளவில் வைத்து இறுதிக் கரியைகளைச் செய்தோம். அப்பா இல்லாததுடன் வீடு வாசல்கள் இல்லாமல் மரங்களுக்கு கீழே இருந்து சரியாகக் கஸ்ரப்பட்டோம். மில்லுக்கப் போய் உமியைப் பிடைத்து அதில் வரும் அரிசியை எடுத்துச் சாப்பிட்டோம். அது இல்லாத வேளை வேறு ஆட்களின் காணியிற் போய் தேங்காயை எடுத்து வந்து அதை உரித்துச் சாப்பிட்டு வந்தோம். பின்னர் கஸ்ரம் தாங்கமுடியாமல் திரும்ப சித்தியினுடைய வீட்டிற்கு வந்து அதிலிருந்து எங்களுடைய சொந்த வீட்டிற்கு வந்திருந்தோம். சரியான கஸ்ரத்தின் மத்தியில் நெல்லுப் பிடைச்சுத் தான் சாப்பிடுகின்றோம். நான் படிப்பை விட்டு விட்டேன். எனது அண்ணாவும் அப்படித்தான் படிப்பை விட்டு விட்டார். தற்போது நானும் ஒரு அண்ணாவும் தங்கையும் அம்மாவும் மட்டுந்தான் இருக்கின்றோம். அம்மா புல் பிடுங்கப் போனாற் தான் நாங்கள் சாப்பிடுவது. இல்லாது விட்டால் நான் தான் ஏதாவது ஒரு வேலைக்குப் போகவேண்டும். நாங்கள் எந்தவிதக் குறையும் இல்லாது வாழ்ந்த வேளை எங்களுடைய அப்பாவை சிறீலங்கா விமானப்படை கொடூரமாகக் கொன்றதாற் தான் நாங்கள் இப்படிக் கஸ்ரப்படவேண்டி வந்திருக்கிறது. அப்பா அருந்திருந்தால் எங்களை நல்லபடியாகப் பார்த்து படிக்க வைத்திருப்பார். இப்போது எதிர்காலம் தொடர்பான கேள்விக் குறியுடன் மிகுந்த கஸ்டத்தின் மத்தியிலேயே எமது நாட்கள் செல்லுகின்றது."

**இச்சம்பவத்தின் கணவனை இழந்த வைகுந்தவாசன் பரிமளா என்பவர் கூறுகையில்...**

"எனது கணவர் ஒரு ஓவியர், விளம்பரம் பலகைகள் வரைவது அவரது தொழில், கிளிநொச்சி மக்கள் எல்லோரும் இடம்பெயர்ந்து அக்கராயன் பக்கம் சென்று கொண்டிருந்தார்கள். கணவர் சந்தைக்குப் போய்விட்டு வருவதாகச் கூறிச் சென்ற சில நேரத்தின் பின் கிபீர் விமானங்கள் சுற்றி குண்டு போட்டவுடனேயே நான் சந்திக்குப் போனேன். அங்கு அவரில்லை. அங்கு நிற்பவர்கள் சொன்னார்கள் அவர் காயப்பட்டு அக்கராயன் வைத்தியசாலைக்கு கொண்டுசென்று விட்டார்கள் என்று. பின்னர் நானும் மூத்த மகனுமாக வைத்தியசாலைக்குச் சென்றபோது அவர் உயிரிழந்துவிட்டார். செஞ்சிலுவைச் சங்கத்தினர் தான் அவரின் உடலை வீட்டிற்குக் கொண்ட வந்து தந்தார்கள். உரிய முறைப்படி தகனம் செய்தோம். அவர் இறந்த பிறகு பிள்ளைகளும் பெரிதாகப் படிக்கவில்லை. அக்கராயனுக்கு இடம்பெயர்ந்தும் பெரிய கஸ்ரத்தை நான் அனுபவித்தேன். அரிசி இடித்துக் கொடுப்பது புல்லுப் பிடுங்குவது போன்ற கூலித் தொழிலைச் செய்து தான் இன்றும் சீவியம் நடத்துகின்றேன் என்றார்."

**27.09.1996 அன்று கோணாவில் விமானக் குண்டுவீச்சுத் தாக்குதலில் கொல்லப்பட்டோர் விபரம்**

1. இராசதுரை திருக்குமார் (20)
2. கந்தையா விஜயகுமாரி (31)
3. முத்துசாமி வைகுந்த வாசன் (39)
4. பெரியசாமி வேலு (61)
5. சிவனாண்டி ஜெனகாந் (15)

**காயமடைந்தவர்கள் விபரம்**

1. பொன்னையா ஜெய நாதன் (16)

குறிப்பு:- இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.



# புதுக்குடியிருப்பு மந்துவில் படுகொலை 15.09.1999



முல்லைத்தீவு மாவட்டத்தில் புதக் குடியிருப்புப் பிரதேசத்திற்கு அருகில் மந்துவில் கிராமம் அமைந்துள் ளது. இக்கிராமத்து மக்களின் தேவைகளை நிறைவு செய்யக் கூடிய வகையில் மந்துவில் சந் தியில் பொது நிறுவனங்கள், வியாபார நிலையங்கள், சிறிய சந்தை, கோயில், தேவாலயம் என்பன அமைந்துள்ளன. மந்து விற் கிராம மக்கள் நாளாந்த தேவைகளிற் பெரும்பாலான வற்றை இங்கெ பூர்த்திசெய்து வாழ்ந்து வந்தனர்.

15.09.1999 அன்று வழமைபோல குழந்தைகள், இளையவர், முதியவ ரென பலதரப்பட்டவர்களும் சந்திக் குத் தமது தேவைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு வந்திருந்தனர். காலை 10:25 மணியளவில் சிறீலங்கா விமானப்படையின் இரண்டு “கிபீர்” குண்டுவீச்சு விமானங்கள் முல்லைத்தீவு வான் பரப்பினூடாக பறந்து வந்து மந்து விற் பகுதியை பத்து நிமிடங்களாக வட்டமிட்டு மக்கள் கூடிநின்ற மந்துவில் சந்தைப் பகுதிமீது குண்டுத் தாக்குதலை நடத்தின.

விமானத் தாக்குதலில் சம்பவ இடத்தில் பன்னிரண்டு பொது மக்கள் உயிரிழந்தனர். உயிரிழந் தவர்களின் உடல்கள் சில அவ் விடத்திலும், வீதியிலும், பற்றைக் குள்ளும், கிணற்றுக்குள்ளும் தூக் கி வீசப்பட்டிருந்தன. இறந்தவர் களின் உடல்கள் சிதைந்த நிலை யிலிருந்தன. படுகாயமடைந் திரந்தவர்களை அப்பகுதி மக்கள் வாகனங்களில் ஏற்றி புதுக்குடியிரப் பு வைத்தியசாலைக்குக் கொண்ட சென்றார்கள். இதில் பத்திற்கும் மேற்பட்டவர்கள் அன்று மாலையே உயிரிழந்தனர். இச்சம்பவத்தின் போது நாற்பதிற்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர். வியாபார நிலையங்கள், பயன்தரமரங்கள், கால்நடைகள் போன்ற பல இலட்சம் பெறுமதியான சொத்துக்களும் அழிந்தன.

**இச்சம்பவத்தில் கணவரை இழந்த சுப்பிரமணியம் சரஸ்வதி கூறும்போது...**

“எனது கணவர் காணியில் கிடைக் கும் தேங்காய்களை கொண்டு சென்று மந்துவில் சந்தியில் விற்றுவிட்டுவருவார். சம்பவ தினமன்றும் பத்துத் தேங் காய்களை விற்றுவிட்டு சாமான்கள் வாங்கி வரவென்று போனார். கிபீர் விமானங்கள் சந்திப் பகுதியில் குண்டுகளைப் போட்டதென்று அறிந்தவுடன், தகப்பனைத் தேடி மகன் பிறேமன் போனார். நான் என்ன நடந்ததோ என்று தெரி யாமல் பயத்துடனிருந்தேன். மகன் போன போது வேலிக்கரையில் நாடியைப் பொத்திப் பிடித்தபடி படுத்திருந்தாராம், உடனே வீதியில் வந்த மோட்டார் சைக்கிளை வாங் கி புதுக்குடியிருப்பு வைத்திய சாலைக்கு ஏற்றிக்கொண்டு போகும் போது இடை நடுவிலே இறந்து விட்டார். ஏற்கனவே எனது ஆறா வது மகன், 1985 ஆம் ஆண்டு சிறீலங்கா இராணுவப் பிரச்சனைக் குப் பயந்து, வவுனியாவில் இருந்த மூத்த மகனின் வீட்டில் இருந்து பத்தாம் ஆண்டு படித்தக் கொண்டு ருந்த வேளை, 1985 ஆம்ஆண்டு வைகாசி மாதம் இருபதாம் திகதி யன்று வவுனியா ஆச்சிக்குளம் பகுதியில் வைத்து சிறீலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டார். தற்போது பதின் நான்கு ஆண்டகளின் பின்னர் எனது கணவரையும் சிறீலங்கா விமானப்படையினர் குண்டு வீசில் கொன்றுள்ளனர்.”

**15.09.1999 அன்று புதக்குடியிருப்பு மந்துவில் படுகொலையில் கொல்லப்பட்டோர் விரபம்:**

1. சின்னையா ஜெயபாலசிங்கம் (37)
2. சண்முகம் கிருபாகரன் (22)
3. சவிரி யோன் (52)
4. சங்கரப்பிள்ளை செல்வமாணிக்கம் (70)
5. ஞானசேகரம் இலட்சுமிப்பிள்ளை (43)
6. ஜெயராமன் சந்திரகுமார் (20)
7. அலன்றோஸ் கொண்டுயூசியஸ் (19)
8. அந்தோனிப்பிள்ளை (-)
9. ஆறுமுகம் ஜெயராமன் (50)
10. சின்னையா ஜெயபாலசிங்கம் (37)
11. பாக்கியநாதன் றீற்றம்மா (56)
12. தனராஜ் ஜெனோவி (24)
13. வேதநாயகம் செபஸ்தியாம்பிள்ளை (52)
14. துரைசிங்கம் சபாநாயகம் (21)
15. இராசநாயகம் உதயகுமார் (20)
16. இராசேந்திரம் சத்யகுமார் (25)
17. குணசிங்கம் ஜெயச்சந்திரன் (33)
18. கணபதிப்பிள்ளை சத்தியபாமா (25)
19. கனகசபை மிதிலா (26)
20. அன்ரனனிலியோ கிறிஸ்ரிஸ்புளோரன்ஸ் (54)
21. செல்லையா ஆறுமுகம் (59)
22. கணபதிப்பிள்ளை யோகராசா (36)
23. அன்ரனிதவராசா திரேசம்மா (50)
24. அன்ரனிலியோ மெல்றோஸ் (24)
25. சின்னத்தம்பி தம்பு (55)
26. ஜெயமஸ் ஜெயசங்கர் (33)
27. பத்மராசா ஜெனிற்றா (15)
28. சந்திரசேகரம் சயந்தினி (12)
29. தம்பையா சப்ரமணியம் (67)

**காயமடைந்தவர்களின் விபரம்:**

1. சூ. பேதுறுப்பிள்ளை (80)
2. இ. தனேஸ்வரி (55)
3. இ. மகேஸ்வரி (55)
4. நா. அருந்தவமலர் (52)
5. க. தங்கையா (45)
6. கனகையா (48)
7. சந்தையா நாகலிங்கம் (43)
8. கந்தையா வள்ளிப்பிள்ளை (35)
9. கதிரேசு தேவராசா (70)
10. கதிரேசு தேவராசா (39)
11. கி. அன்னலட்சுமி (61)
12. கிருஸ்ணபிள்ளை அன்னலட்சுமி (51)
13. குணசிங்கம் (50)
14. குணரத்தினம் நிறஞ்சன் (09)
15. பால்ராஜ் பாசமலர் (27)
16. பாலசிங்கம் பால்ராஜ் (29)
17. பத்மராஜா மதியமலர் (40)
18. பி. மரியமலர் (52)
19. பீற்றர்கென்றிலோல் லோறன்சியா (18)
20. சைலன் (03)
21. த. பாலசிங்கம் (66)



22. த. தனுசா (03)
23. த. தேவராசா (39)
24. தி. தர்சினி (17)
25. தியாகராசா தர்சினி (17)
26. தியாகாராசா செல்வாராணி (44)
27. ம. தனராஜ் (20)
28. மயில்வாகனம் (45)
29. மகாலிங்கம் தனராஜா (29)
30. மரியநாயகம் (48)
31. முத்துசாமி (48)
32. முத்துசாமி கோழிமனசாமி (48)
33. அ. இருதயராசா (20)
34. அ. மரியசோபனா (23)
35. அ. விதுச்ன (35)
36. அன்ரன் பெனடிற் (51)
37. அலன்றோஸ் மரியநாயகி (40)
38. ஜெ. ஜெயசங்கர் (30)
39. ஜெ. சரஸ்வதி (50)
40. ஜெயராமன் விமல்ராஜ் (06)
41. ஜெயராமு சரஸ்வதி (50)
42. ஜெயராமன் (60)
43. யோன் நான்சி (19)
44. கே. தவசீலன் (19)
45. கே. மேனகா (18)
46. கோபாலகிருஸ்ணன் பத்மாவதி (45)
47. பொ. வள்ளிப்பிள்ளை (90)
48. பெர்னான்டோ அனரலிவின்சன் (35)
49. பெரியதம்பி நடராசா (51)
50. தெ. மரியமலர் (68)
51. சே. மரியம்மா (68)
52. சேதுப்பிள்ளை (80)
53. செல்லையா சந்திரசேகரம் (27)
54. செல்லத்துரை மகேஸ்வரி (46)
55. ச. யோகராணி (41)
56. ச. லோகிதா (15)
57. ச. சர்மிலா (23)
58. சின்னத்தம்பி கந்தசாமி (37)
59. சீனியர் சிவநாதன் (18)
60. சிவகுரு சூரியமூர்த்தி (33)
61. சிவானந்தம் சுதாகரன் (19)
62. சிவநேசன் அழகேஸ்வரி (29)
63. சிவசுப்பிரமணியம் கம்சநந்தினி (21)
64. சுசிதரன் சூட்டி ( 29)
65. சரஸ்வதி (50)
66. சற்குணன் யோகராணி (41)
67. ராஜா சஜீபன் (03)

குறிப்பு:- இச்சம்பவத்தில் பாதிப் படைந்த அனைவரது பெயர் விபரங்களையும்



JATHU RENOVATION
Free!
ESTIMATES
உங்கள் இல்லத்தை புதுப்பிக்க அழையுங்கள்
★ Basement ★ Carpet ★ Flooring
★ Hardware ★ Kitchen Cabinets
★ Painting ★ Tiles ★ Stairs
★ Moulding ★ Window ★ Garage Door
★ Spotlight ★ Plumping ★ Electrical
RASAN
Cell: 647.532.4162
Off: 647.821.0356
rassan311@gmail.com www:jathurenovation.com




Arasan
ARASAN RAJADURAI
Real Estate & Developments
Sale Representative
C: 416.500.9550
B: 905.831.3300
F: 905.831.8147
realtorarasan@gmail.com
ARANDTEAM.CA
RE/MAX
HALLMARK FIRST GROUP REALTY
RAISING THE BAR
1154 Kingston Rd
Pickering, ON
L1V 1B4 CA




The ESTATE
BANQUET AND EVENT CENTRE
The ESTATE BANQUET AND EVENT CENTRE
The Estate Banquet and Event Centre can make your event "EXCLUSIVE"
The Estate Banquet and Event Centre is able to host,
• Wedding • Christenings • Baptisms
• Anniversary Parties • Corporate Events
and all other Special Occasions
For all events ranging from 50 - 500 Guests
International Menu with Premium Bar
430 Nugget Ave, Scarborough ON M1S 4A4
Tel:416 400 5993
info@estatebanquets.com www.estatebanquets.com




WEXFORD
WELLNESS CARE INC.
We treat all car accident injuries!
★ Massage Therapy
★ Physiotherapy
★ Orthopaedic
★ Acupuncture
★ Chiropractic
★ Orthotic
We deal directly with Insurance Companies, Extended health Care Corporate Insurance, ODSP WSIB, Motor Vihicle Accident (MVA)
Tel: 647-349-5120
Fax: 647-349-5121
Serve Two Location
Unit 301-240 Alton Towers Cir, Scarborough ON M1V 3Z3
2900 Markham Rd Unit F11, Scarborough ON M1X 1E6
(Majestic City, Colombo Rd)

# ஈகைச்சுடர் திலீபனின் வாசகங்கள்

♦ நான் நேசித்த தமிழீழ மண்ணில் வாழ்கின்ற அனைவரும் எமது உரிமையை மீட்பதற்கான பெரும் புரட்சிக்குத் தயாராக வேண்டும்.



♦ தமிழ் மக்கள் மிகவும் வழிப்புடன் இருக்கவேண்டும். இல்லையெனில் அவர்களின் எதிர்காலம் இருண்டதாகிவிடும்.

♦ விடுதலை புலிகள் வாழ வேண்டும் என்றோ, ஆள வேண்டும் என்றோ அசைகொள்ளவில்லை. எமது மக்களுக்கு நிரந்தரமான, சுபீட்சமான எதிர்காலம் கிடைக்குமானால் நாம் அனைவரும் மரணிக்கவும் தயாராக உள்ளோம்.

♦ மக்கள் அனைவரும் எழுச்சியடைவார்களாயின் தமிழீழம் உருவாவதை யாராலும் தடுக்கமுடியாது.

♦ எமது உரிமைகளை நாமே பென்றெடுக்கவேண்டும். இதற்கு வேறு யாருடைய தயவையும் எதிர்பார்க்கக் கூடாது.

♦ நான் என்னுயிரினும் மேலாக நேசிக்கும் மக்களே! உங்களிடம் ஒரு பெரும் பொறுப்பை விட்டுச் செல்கிறேன். நீங்கள் அனைவரும் பரிபூரணமாகக் கிளர்ந்தெழவேண்டும். இங்கு ஒரு மாபொரும் புரட்சி வெடிக்கட்டும்.

♦ எம் எதிர்கால சந்ததி வாழ நிச்சயமாக எமக்கோர் நாடு அவசியம். இல்லாவிட்டால் எங்களைப்போல்தான் நாளை எமது எரிர்கால சந்ததியும் துன்பப்படும், கருதப்படும்.

♦ நான் ஆத்மரீதியாக உணர்கிறேன். இன்றில்லா விட்டாலும் என்றோ ஒரு நாள் எமது மக்கள் நிச்சயமாக விடுதலையடைவார்கள்.

♦ ஒரு மாபெரும் சதிவலைக்குள் சிக்கி வரும் எம் மக்களை எப்படியாவது விடுவிக்கவேண்டும்.

♦ என் போராட்ட வரலாற்றுச் சாதனைகளையிட்டு நான் மாபெரும் மகிழ்ச்சியும் பூரண திருப்தியும் அடைகிறேன்.

♦ எமது போராட்டத்தை அமைதி தழுவியதாகவோ அல்லது இரத்தம் தோய்ந்ததாகவோ அமையவேண்டுமெனத் தீர்மானிக்கவேண்டியவர்கள் இங்குள்ள முதலாளித்துவ ஆட்சியாளர்களே.

♦ சுதந்திரத்திற்கு விலையாக எங்கள் உணிரையே கொடுக்கத் தயாராக உள்ளோம்.

♦ மக்கள் புரட்சி இங்கு வெடிக்கட்டும். அது நிச்சயமாகத் தமிழீழத்தை எனது இறப்பின் மூலம் பெற்றுத்தரும். இதனை வானத்திலிருந்து இறந்த ஏனைய போராளிகளுடன் தானும் பார்த்து மகிழ்வேன்.

♦ மரணம் ஒரு தடவைதான் வரும். ஆதற்காக மானத்தை விற்றுச் சிவிக்கமுடியுமா? இறப்புக்குப் பயந்து ,னத்தை அழியவிட முடியுமா?



♦ இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை இனவாதப் பூதம் விழுங்கும் போது, இந்தியா எமது நிலைப்பாட்டை ஆதரிக்க வேண்டி ஏற்படும்.

♦ எமது மண்ணின் விடுதலைக்காக யார் போராடுகிறார்களோ அவர்களே இந்த மண்ணின் மைந்தர்கள்.

♦ எமது மண்ணின் விடுதலையை நேசிக்காத எவரும் இம் மண்ணை ஆள அருகதையற்றவர்கள்.

# மக்கள் மனம் கவர்ந்த ஈகைச்சுடர்

**1ம் நாள்**
கண்ணீருடன் திலகமிடுகிறாள் ஒரு தாய்.

**2ம் நாள்**
நிலமையை தலைவர் கண்டு மனம் நெகிழ்ந்து போனார்.

**3ம் நாள்**
ஒரு சொட்டு சிறுநீரும் கழிக்கவில்லையாம்.

**4ம் நாள்**
நம் மக்கள் திலீபனின் நிலைகண்டு பயந்தனர்.

**5ம் நாள்**
இந்தியப்படை கேணல் பரா பார்வையிட்டார்.

**6ம் நாள்**
கிட்டண்ணாவை பார்க்க திலீபன் விரும்புகிறார்.

**7ம் நாள்**
உடல் தளர்ந்து குடல் சுருங்கியது.

**8ம் நாள்**
தமிழீழமெங்கும் எழுச்சித் தீ பரவுகிறது.

**9ம் நாள்**
கோட்டையில் மக்கள் கொந்தளிப்பு.

**10ம் நாள்**
எங்கள் திலீபனை சாகவிடாதேயென நல்லை வீதியெங்கும் மக்கள் வெள்ளம்.

**11ம் நாள்**
எங்கள் மகரயாழ் தந்தி தொய்ந்து கிடந்தது.

**12ம் நாள்**
மலை உயரம், முகில் உயரம், வானுயரம் திலீபனின் மனத்திடத்தின் முன்னே எது உயரம்.



# யாழ். கோட்டை முன்பாக லெப். கேணல் திலீபன் ஆற்றிய வரை

**செப்டம்பர் 07, 1987**



சுட்டெரிக்கும் வெய்யிலில் பசியோடும் பட்டினியோடும் இத்தனை நேரமும் நீங்கள் ஓர் உன்னதப்போராட்டத்தில் கலந்து கொண்டிருக்கிறீர்கள். யாழ் குடாநாடு முழுவதிலு முள்ள இந்திய இராணுவ முகாம்களின் முன்னால் இந்தப் போராட்டம் இன்று நடைபெறுகிறது. கொழுத்தும் வெய்யிலையும் பொருட்படுத்தாமல் பசியொடும் பட்டினியோடும் மக்கள் போராடியதற்கு முதற்கண் விடுதலைப் புலிகளின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தைப் பொறுத்தவரை எமது தோழர்கள் முழுமையான விஷயங்களை முழுமையான தெளிவுகளை உங்களுக்கு ஏற்படுத்தியிருப்பார்கள். ஆனால் எதிர் காலத்திட்டங்கள் என்ன என்பது சம்பந்தமான ஒரு சில விடயங்களைத் தெளிவுபடுத்தலாம் என நினைக்கிறேன். அனைத்திற்கும் முதல் நான் ஓர் உண்மையைத் திட்டவட்டமாகக் கூறுகிறேன்.

இந்த கோட்டை ஒல்லாந்தார் காலத்தில் கட்டப்பட்டது. இன்னும் நமிர்ந்து நிற்கின்றது. ஒல்லாந்த இராணுவம் இதனுல் பல இன ஒழிப்புகளை மேற்கொண்டது. மக்கள் ஆயிரக்கணக்கில் சிறை வைக்கப்பட்டனர். அடுத்து ஆங்கிலேயர் இக்கோட்டைக்குள் புகுந்தனர். ஆனால் ஒல்லாந்தரைவிட மோசமாக இவர்கள் எம்மை அடக்கினர். ஆங்கிலேயரை இங்கிருந்து விரட்ட நாம் சிங்களவருடன் கூட்டுச்சேர்ந்தோம்.

சிங்களவர்களுடன் கூட்டுச் சேர்ந்ததால் 1948ம் ஆண்டு இலங்கை சுதந்திரமடைந்ததாகக் கூறப்பட்டது. ஆனால் நாம் கூட்டுச்சேர்ந்த சிங்கள மக்கள் எம்மை மிக மிக மோசமாக அடக்கி ஒடுக்கினார்கள். இந்தக் கோட்டை இராணுவ முகாமிலிருந்து எத்தனையோ உயிர்கள் பறிக்கப்பட்டன. தமிழ் மக்களின் கோடிக்கணக்கான சொத்துகள் அழிக்கப்பட்டன. இவையனைத்தும் எம்மால் மறக்கமுடியாதவை. யாழ்நகர் இன்று சோவை இழந்திருப்பதற்கு அடிப்படைத் காரணம் இந்தக் கோட்டை. இந்தக் கோட்டை இன்றுகூட எம் கையில் இல்லை. இந்தக் கோட்டையில் என்று புலிக்கொடி பறக்கிறதோ அன்று தான் எமது சுதந்திர விடிவு என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

இன்றும் இங்கு இலங்கை - இந்திய இராணுவங்கள் குடியிருக்கின்றன. சிங்களவருடன் நாம் கூட்டுச்சோர்ந்து ஏறத்தாழ 30 வருடங்கள் கழிந்த பின்னரே அவர்களுடைய உன்மைச் சொரூபத்தை அறிய முடிந்தது. அன்றிலிருந்து இன்று வரை அவர்கள் எம்மை உதிரிகளாகக் கருதிக் கொன்றொழித்துக் கொண்டிருந்தார்கள். எனவே எமது நாட்டில் எமது இராணுவம் நிலைகொள்ளும் வரை எமது சுதந்திரத்தை எவரும் உறுதி செய்ய முடியாது. அதற்காகத் தான் நாம் போராடிக்கொணடிருக்கிறோம். தமிழீழம் கேட்கின்றோம். சகல அடக்கு முறைகளையும் உடைத்தெறியும் ஒரு சமதர்ம சோசலிச தமிழீழம் மிக விரைவில் இங்கு மலரும். அதுவரையில் நாம் எமது போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை.

ஒன்றை மிகத் தெளிவாகவும் உறுதியாகவும் கூறுகின்றேன். நாம் மீண்டும் ஆயுதம் ஏந்துவோம். எமது மக்கள் அழிக்கப்படும் நிலைதோன்றினால் ஆயுதம் ஏந்துவதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை. எமது போராட்டம் தமிழீழத்தை மட்டுமே நோக்கியுள்ளது. இது ஒரு இடைநிலையே தவிர முற்றுப் புள்ளியல்ல.

ஆனால் இந்த உண்மை இன்றும் பலருக்குப் புரியாமல் உள்ளது. இன்று யாழ் குடாநாட்டில் 09 இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் வசிக்கின்றனர். இவர்களிற் பலர் இன்றைய தமிழரின் நிலையைப் புரிந்துகொள்ளாதவர்களாகவே வாழ்கின்றனர். இவர்களின் தெளிவற்ற நிலையை நாம் உணர்கின்றோம். ஆனால் அவர்களையும் தெளிவுபடுத்தி எமது போராட்டத்தில் இணைய வைப்போம். ஒன்றை மட்டும் நீங்கள் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். இன்று எமக்கு ஏற்பட்டுள்ள இழிநிலையைத் தமிழ் மக்கள் புரிந்துகொள்ளத் தவறினால் நாளை எமது வரலாறு மிகவும் பரிதாபத்திற்குரியதாய் இருக்கும்.

நாம் இன்று அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டு ஒடுக்கப்படுகினறோம். எமது அடிப்படை உரிமைகள் படிப்படியாகப் பறிக்கப்படுகின்றன. இதை நீங்கள் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது. எந்தெந்தக் காலகட்டங்களில் தமிழ் மக்கள் உணர்வோடு கொந்தளிப்போடு சுதந்திர உணர்வோடு போராடத் தலைப்படுகிறார்களோ அந்தந்தக் காலகட்டங்களில் எல்லாம் சமாதான ஒப்பந்தங்கள் உருவாக்கப்படுகின்றன. இந்த உண்மையை நீங்கள் மறந்துவிடக் கூடாது. 1957ல் ஏற்பட்ட பண்டா-செல்வா ஒப்பந்தமாயினும் சரி அன்றைய காலகட்டங்களில் தமிழ் மக்கள் உணர்ச்சிக் கொந்தளிப்போடு செயற்பட்டார்கள் என்பதைக் காட்டுகின்றன. மக்கள் புரட்சி வெடிக்கக் கூடிய கூழ்நிலை அப்போது இருந்தது. அதைச் சமாளிக்க மழுங்கடிக்க ஒப்பந்தங்கள் எழுதப்பட்டன. ஒப்பந்தம் ஏற்பட்டபின் உருவான ஒரு தற்காலிக அமைதியில் மக்கள் திருப்திகண்டனர். அதனால் அவர்களது போராட்ட உணர்வு மழுங்கடிக்கப்பட்டது. பின்னர் ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டது. இது தான் தமிழ் மக்களின் உண்மை நிலை.

இதே நிலைதான் இன்றும். ஏறக்குறைய 04 வருட தமிழீழப் போராட்டத்தின் உன்னதமான காலகட்டம். இந் நான்கு வருடப் போராட்டத்தில் பல அரிய சாதனைகளைப் படைத்துள்ளோம். இங்கு உங்கள் முன் இருக்கும் தொலைத்தொடர்பு நிலையத்தை நோக்கின் உங்களுக்கு விளங்கும். அந்த வகையின் நாம் நிலை நாட்டிய சாதனைகள் பல. ஆனால் அதே நேரம் 20,000 மக்களை இழந்துள்ளோம். எனினும் படிப்படியாகத் தமிழீழத்தை நோக்கி முன்னேறிக்கொண்டிருந்தோம். தமிழீழ விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை தற்கொலைப்படைத் தாக்குதல்களைக்கூட இறுதியாக நடத்திக்கொண்டிருந்தோம். தற்கொலைப்படைத் தாக்குதல் உலகளாவிய ரீதியில் மிக அரிதாகவே நடைபெறுகின்றது. ஜப்பானில் ஆரம்பித்த இவ்வகைத் தாக்குதல் தொடர்ந்து லெபனானிலும் இடம்பெற்றது. அதற்கடுத்ததாகத் தமிழீழ மண்ணில்தான் என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது. உலகளாவிய ரீதியில் அரிதாகவே கைக்கொள்ளப்படும் இத்தாக்குதலில் கூட நாம் இறங்கி எமது போராட்டத்தைப் படிப்படியாக வென்றெடுத்த காலகட்டத்தில் தான் ஒப்பந்தம் எழுதப்பட்டது. எமது போராட்டத்தை மழுங்கச்செய்ய ஏற்பட்ட இவ்வொப்பந்தத்தை நாம் நிராகரித்தோம். இவ்வொப்பந்தத்தில் எமக்குரிய அடிப்படை உரிமைகள் எதுவும் பேணப்படவில்லை. தமிழ் மக்களின் முதுகில் குத்தித் துரோகமிழைத்த இவ்வொப்பந்தத்தை நாம் நிராகரித்த போதும் இந்திய அரசின்மீதும், இந்திய இராணுவத்தின் மீதும் கொண்ட நம்பிக்கையால் எமது ஆயுதங்களை ஒப்படைந்தோம்.

இன்று நாம் ஆயுதங்களை ஒப்படைத்தபின் எமக்கு விரோதமாகச் செயல்கள் நடைபெறுகின்றன. தமிழ் மக்களின் உரிமைகள் பறிக்கப்படுகின்றன. தமிழீழப் பிராந்தியங்களில் சிங்கள மக்கள் பல்லாயிரக்கணக்கில் குடியேற்றப்படுகின்றனர். உங்களுக்குத் தெரியும். இந்த நாக விகாரை, எழுச்சியடைந்த எம் மக்களால் எவ்வாறு தாக்கப்பட்டதென்று. இதை மட்டுமல்ல சிங்கள மகா வித்தியாலயத்தையும் உடைத்தெறிந்தார்கள். யாழ் குடாநாட்டில் ஒரு சிங்கள மகன் கூட இருக்க முடியாது. ஆனால் இன்று இவ்வொப்பந்தத்தால் இன்றோ நாளையோ இந்த முற்ற வெளியில் கூட ஒரு சிங்களக் குடியேற்றம் இடம் பெறக்கூடிய சாத்தியக்கூறுகள் தென்படுகின்றன. மீண்டும் நாகவிகாரையைப் புதுப்பிக்க ஆலோசனைகள் நடைபெறுகின்றன. இவ்வாறான நிலைதான் இவ்வொப்பந்தத்தால் ஏற்பட்டுள்ளது. இதைத்தவிர எமக்குச் சாதகமாக எதுவுமேயில்லை.

எம்மைப் பலவீனப்படுத்தி நசுக்கவே முயல்கின்றனர். நாம் இன்றைய நிலையை மிக வழிப்போடு அவதானிக்க வேண்டும். தவறின் எமக்கு எதிர்காலமே இல்லை. எமது எதிர்காலத்துக்காகவே நாம் போராடுகின்றோம். இது ஒரு அகிம்சை தழுவிய போராட்டம். இப்போராட்டத்தின் உண்மைவடிவை நீங்கள் புரிந்துகொள்ளவேண்டும். இது அகிம்சை தழுவியதாயினும் நாளை எமது மக்கள் அழிக்கப்படும் நிலைதோன்றின் ஆயுதப் போராட்டமாக மாறும்.

நாம் ஆயுதத்தைக் கையளித்ததைச் சாக்காகக் கொண்டு சமூகவிரோதக் கும்பல்கள் இம்மண்ணில் உலாவுகின்றன. புலிகளின் நிர்வாகம் இருந்த காலகட்டத்தில் ஒரு சமூகவிரோதக் கும்பல் கூட இல்லை. கொள்ளை, கொலை இல்லை. ஆனால் இன்றோ தினசரி கொலைகொள்ளை. இறுதியாக நேற்றிரவு கூட இந்தச் சாந்தி தியேட்டருக்கருகில் உள்ள மினி சினிமாவில் கொலை கொள்ளை நடைபெற்றிருப்பது உங்களுக்குத் தெரியும். இதற்காகத்தான் அக்கும்பல்களை நாம் தடை செய்தோம். நாம் இந்தியாவிலுள்ள RAW அமைப்பை முழுமையாகச் சந்தேகிக்கிறோம். அவ்வமைப்புத்தான் இச் சமூகவிரோதக் கும்பல்களை ஆயுதத்துடன் நம் மண்ணில் நடமாடவிட்டுள்ளது. சமூகவிரோதச் செயல்களைச் செய்யத் தூண்டிவிடகிறது. நமது மக்களைப் பாதுகாக்க நாம் கிராமரீதியாகப் பாதுகாப்புக் குழுக்களை அமைத்தமை உங்களுக்குத் தெரியும். இக்குழுக்கள் கூட இச் சமூகவிரோதக் கும்பல்களால் தாக்கப்படுகின்றன. கடத்தப்படுகின்றன. குளப்பிட்டியில் மக்கள் பாதுகாப்புக்குழு கடத்தப்பட்டுத் தாக்கப்பட்டபோது இந்திய இராணுவம் அருகிலேயே நின்றது. இவ்வாறாயின் நாம் எவ்வாறு இந்திய இராணுவத்தின் மீது நம்பிக்கைகொள்ள முடியும்.

இச் சமூகவிரோதக் கும்பல்களுக்குத் துணை போவதுதான் இந்திய அரசின் வேலை என்பதைப் புரிந்துகொண்டோம். இதை எம்மால் ஒரு போதும் சகிக்கமுடியாது. ஒன்றை மிகத் தெளிவாகக் கூறிக்கொள்கிறேன். விடுதலைப்புலிகளைப் பொறுத்தவரை மரணத்துக்கு அஞ்சாதவர்கள். துப்பாக்கிகளோ, சுற்றியுள்ள இரும்புக் கம்பிகளோ அவர்களை எதுவும் செய்ய முடியாது. அவர்கள் வாழவேண்டுமென்றோ, ஆளவேண்டுமென்றோ ஆசைவைத்ததில்லை. தமிழீழ இலட்சியமொன்றிற்காகவே அவர்கள் போராடிக்கொண்டிருக்கிறார்கள். எமது இறுதி மூச்சுவரை மக்களுக்காகப் போராடத் தயாராயிருக்கின்றோம். எமது மக்களுக்குச் சுதந்திரமும் சுபீட்சமும் கிடைப்பதற்காகவே எம் தற்கொலைப் படைகள் தயாராய் இருக்கின்றன. இதை இந்திய ஆட்சியாளர்களும் இந்திய இராணுவத்தினரும் புரிந்துகொள்ளவேண்டும் அவர்கள் மட்டுமல்ல முக்கியமாக இங்குள்ள சமூகவிரோதக் கும்பல்கள் புரிந்துகொள்ளவேண்டுமென்பதை மிகப் பகிரங்கமாகக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். நாம் வெறும் சொல்லளவில் நின்றுவிடுவதில்லை. இது அக் கும்பல்களுக்கு நன்கு தெரியும். நாம் குட்டக் குட்டக் குனிபவர்களல்ல.

எம்மிடம் ஆயுதமில்லை; நிராயுதபாணிகளாக நிற்கிறோம் எனக் கருதி மிகப் பயங்கரமான அடாவடித்தனங்களில் ஈடுபட்டுள்ளனர். எமது தோழர்களை அநியாயமாய்க் கொன்றுள்ளனர். இதையெல்லாம் நீங்கள் நன்கு அறிவீர்கள். நாம் தனித்து நின்றே இக் கும்பல்களை ஒரே நாளில் தடை செய்துவிடுவோம். இந்திய இராணுவத் துணையுடன் இவர்கள் செய்யும் அட்டூழியங்களை இனியும் எம்மால் சகிக்கமுடியாது. இறுதியாக ஓர் உண்மையைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். மக்கள் முழுமையான எழுச்சியுடன் போராடினால் எந்தப் பெரிய இராணுவமும் எதிர்த்து நிற்க முடியாது. வியட்னாமிய மக்கள், உலகின் மிகப்பெரிய அமெரிக்க இராணுவத்துக்கெதிராக விடுதலைப்போரை நடத்தி பெற்றிபெற்றமை உங்களுக்குத் தெரியும். எமது மக்கள் பரிபூரணமாக எழுச்சி பெறவேண்டும். இன்று இந்நிலை இல்லாதது எனக்கு மிகுந்த வேதனையை அளிக்கின்றது. ஆறாத சோகத்தைத் தருகின்றது. எமது மக்களின் முழுமையான எழுச்சிநிலை தோற்றுவிக்கப்பட வேண்டும். எமது அடிப்படை உரிமைகளை வென்றெடுக்க வேண்டும். இத்ததைய எமது மக்களின் போராட்டத்துக்கு எவரும் மதிப்பளித்தேயாக வேண்டும்.





உலக வணிகம்
ULAGA VANIKAM
2023



LIST YOUR BUSINESS
ON OUR BUSINESS DIRECTORY

தொடர்புகளுக்கு
437.345.4203

Chapel Ridge
FUNERAL HOME & CREMATION CENTRE

Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.



At Need Funeral Arrangements

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

• Vistation • Funeral & Memorial Service • Reception • Burial • Cremation

நகரங்களில் எமது சேவை மார்க்கம், மற்றும் மிசிசாகா





Christeen Seevaratnam
Licensed Funeral Pre-Planner
416-258-6759

Vilosanan Sivatharman
Licensed Funeral Director
416-993-0826



இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?
Pre-Arranging: A Wise Choice...

FINANCIAL BENEFITS
- Lock in the cost a today's prices
- Convenient time payment
- Insured against early death

EMOTIONAL BENEFITS
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham ON L3R 5G1
www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com

A caring part of our community



# திலீபன் அண்ணா

பத்து மாதம் அன்னையவள்
பத்திரமாய்ச் சுமந்து உன்னை
நிலத்தில் பெற்றெடுத்தாள்
சத்தியமாய் உன்னைப் பெற்று
எடுத்த இடம் தமிழீழம்.
பத்து மாதம் சுமந்தவள்
இன்று
நிலத்தில் இருந்திருந்தால்
உன்
ஒட்டிய வயிறு கண்டு
இரத்தக் கண்ணீர் வடித்திருப்பாள்.
திலீபன் அண்ணா!
உங்களுக்கு
பசியால் பார்வை மங்குவது
எனக்குத் தெரிகிறது.
இங்கிருக்கும் மக்கள் கூட
உங்களிற்கு
மங்கலாகத் தெரிகிறார்கள்
ஆனால்
தமிழீழம் மட்டும்
தெளிவாய்த் தெரிகின்றது.
உங்கள்
குழிவிழுந்த கன்னங்கள் கண்டு
இங்கு
குளமாகும் கண்கள்
எத்தனை, எத்தனை!
திலீபன்னண்ணா!
(உண்ணாமிலிருக்கும் உங்களால்
எப்படிச் சிரிக்க முடியும்?)
எனக்குத் தெரியும்
நீங்கள் சாகும் போதும்
சிரித்துக் கொண்டே சாவீர்கள்.
ஏனென்றால்
நாங்கள் அழக்கூடாது என்பதற்காக,
எப்படியண்ணா அழாமல் இருக்க முடியும்?
உங்கள் ஒட்டிய வயிறும்,
குழிவிழுந்த கண்களும்,
குற்றுயிராய்க் கிடக்கும் நிலையும் கண்டால்
கல் நெஞ்சமும் கசிந்து கண்ணீர் விடும்.
உங்கள் நண்பர்கள் இங்கே
நடைப்பிணமாய்த் திரிகின்றார்கள்.
அவர்கள் ஆசைப்படுவதெல்லாம்
மெயின் மெயின்
திலீபன்
அல்போட் அல்பேட்
திலீபன்
மில்லர் மில்லர்
திலீபன்
என்று நீங்கள் திரும்பத் திரும்ப
வோக்கியில் பேசுவதைத்தான்
தயவு செய்து
ஒரேயொரு முறை இறுதியாக
அவர்களுக்குப் பேசிக்காட்டுங்கள்.
அன்று செந்நிறச் சேலைகட்டி
செங்குருதியில் பொட்டும் இட்டு
பாதாயாத்திரைக்கு அனுப்பி வைத்தீர்களே
அவர்களுக்கும் இறுதியாக
ஒரேயொரு முறை
பேசிக்காட்டுங்கள்.
மௌனமாய் அழைக்கும்
மரணித்த நண்பர்களிடம்
போகப்போகிறேன்
என்று, மக்களிடம் சொல்கிறீர்கள்.
இங்கு வருந்தி அழைத்து
வாடிக்கிடக்கின்றார்களே
உங்கள் குழந்தைகள்,
அவர்களுடன்
ஏன் வாழக்கூடாது?
திலீபனண்ணா!
உங்கள் நண்பர்கள் இங்கே
நடைபிணமாய்த் திரிகிறார்கள்
எங்கே நீங்கள் எங்களை
விட்டுப் போய்விடுவீர்களோ என்று.
தலையிலிருந்து கால்வரை
உங்களைத் தடவிக்கொண்டிருக்கும்
காட்சி கண்டு இங்கே
ரத்தக் கண்ணீர் சிந்துகின்றோம்.
தலீபனண்ணா
நான் நினைக்கவேயில்லை
உயிரோடு உங்களுக்கு
என்கையால் கவி எழுதி
அதை உங்கள் காலடியில் சமர்ப்பிப்பேன்
என்று.
நீங்கள் தமிழீழத்தில் கொண்ட உறுதியால்
இன்னமும் மயங்காமல் இருக்கின்றீர்கள்.
ஆனால் உங்கள்
மீது கொண்ட பாசத்தால்
இங்கே எத்தனை தாய்மார்
தள்ளாடி விழுகின்றார்கள்!
திலீபனண்ணா
எவ்வளவு தைரியம் இருந்தால்
மகாத்மாவிற்கே
சவால் விடுவீர்கள்.
அவர்கூட நீர் அருந்தி நீண்ட நாட்கள்
நினைவோடு இருந்தாரே,
நீங்கள் ஏன் அண்ணா அருந்தக் கூடாது?
எனக்குத் தெரியும்
நீங்கள் இருந்த மாட்டீர்கள்;
தமிழீழத் தாகத்திற்குத்
தண்ணீர் அருந்தமாட்டீர்கள்.
இந்தியாவின் இறுதி முடிவிற்காய்
உங்களின் இறுதி மூச்சை
இழுத்துப் பிடித்திருக்கிறார்கள்;
ஆனால் இங்கே உயிர் கொடுத்தவனை விட,
உணவு கொடுத்தவன் உயர்வாக
மதிக்கப்படுகிறான்.
திலீபனண்ணா
பிரச்சினைக்கு மேல் பிரச்சினை வந்தால்
எம் மக்களிற்கு அடிப்படைப் பிரச்சினை
அறவே மறந்துவிட்டது.
இன்று இவர்கள் பிரச்சினை என்று
பிரகடனப்படுத்துவது எல்லாம்,
ஆமியின் வருகையும் அவசரகாலச் சட்டமும்
பொருளாதாரத் தடையுமே.
இன்று இவைகள் எடுபடலாம்.
நாளை, கல்வியில் சமவுரிமை
பல்கலைக்கழக புகு உரிமை
கிழக்கில் குடியுரிமை,
மலையக மக்களின் பிரசாவுரிமை
இல்லை என்பதை
இவர்கள் உணர்வார்கள்;
இப்போது அறிவார்கள்
அடிமைச் சாசனம் இன்னமும் அழித்தெழுதப்
படவில்லை என்று

மக்கள் புரட்சி வெடிக்காதோ என்று
மனந்தளராதே மாவீரனே!
இதோ நீ உயிரோடு இருக்கையிலே
உன் முன்னாலேயே இங்கொரு மக்கள் புரட்சி
வெடித்து விட்டது.

போராளியின் போனாவிலிருந்து...
(லேப். கேணல் திலீபன் உண்ணாநோன்பு
இருந்த போது கஸ்தூரியினால் மேடையில்
வாசிக்கப்பட்ட கவிதை)

# சிறுவர் இல்லங்கள், ஒரு சில முதியோர் இல்லங்கள் Children's homes, a few nursing homes

இலங்கையில் யுத்தம் ஓய்ந்து ஒரு சாகாப்தகாலம் கடந்து விட்டது. ஆனாலும் வடக்கு, கிழக்கில் பல பராமரிப்பு இல்லங்கள் இன்னமும் இயங்கிவருகின்றன. இவை சிறுவர், மூத்தோர், சிறப்புத் தேவையுள்ளோர் இல்லங்கள் என வகைப்படும். இவை அனைத்தும் பொது மக்களின், பொது அமைப்புக்களின் நன்கொடைகளிலேயே தங்கியுள்ளன. தற்போதைய கோவிட்19 காலத்தில் நன்கொடைகள் குறைந்துள்ள இவ்வேளையில் எம்மாலான சிறு உதவிகளையேனும் இவ்வில்லங்களுக்கு வழங்கி இந்த இக்கட்டான காலத்தை கடக்க அனைவரும் உதவவேண்டுகின்றோம்

COVID 19 நோய்கள் பெரும் பரவல் காலம், உங்களை விட்டால் யாரும் இல்லை இவர்களுக்கு...!

"இந்தக் குழந்தைகள் யாருமற்றவர்களல்லர். தமிழன்னையின் புதல்வர்கள். வரலாற்றுப் பெருமை மிக்க சுதந்திரப் பெருமைமிக்க சுதந்திரப் போராட்ட சூழலில் இந்த இளம் விதைகளைப் பயிரிடுகின்றோம். இவை வேர்விட்டு வளர்ந்து விழுதுகள் பரப்பி விருட்சங்களாக மாறி ஒருகாலம் தமிழீழ தேசத்தின் சிந்தனைச் சோலையாகச் சிறப்புற வேண்டும் என்பதே எனது ஆவல்."



**Amman Women & Child Development Center**
Sagamam Rd, Kolavil 01, Akkaraipattu - Amparai 4 67 490 4955

**Hermans Girls Home**
Main St., Periyaneelavanai, Kalmurani - Amparai 97 76 058 5344

**Jesus Lives Girls Home**
Main St., Kalmuanai - Amparai 01 94 67 492 1161

**Methodist Girls Home**
Wesly School Rd, Kalmuanai - Amparai 94 67 222 9182

**RKM Sharatha Girls Home**
Girls Vidyalaya Rd, Karaithivu Amparai 05 94 67 222 3600

**Seephe Divi Child Delelopment Centre**
Kovil Rd, Veeramunai 01, Sammanthurai - Amparai 94 67 226 1144

**Sri Indasara Child Development Centre**
DK/65, Aralaganvila Rd, Dehiattakandiya - Amparai 94 27 562 2919

**St. Maryís Boys Home**
Yard Rd, Kalmunai - Amparai 01 94 71 354 5782

**Swami Vipuilanantha Boys Children Development Centre**
Kurukkal Rd, Akkaraipattu 7/2 - Amparai 94 67 227 7514

**Canaan Harvest Childrenís Home**
No 320/8, Passara Rd, 3rd Lane - Badulla 94 77 229 2022

**Up Country Children Home**
19/6, Badulupitiya Rd - Badulla 94 55 222 3335

**Arutpani Girls Home**
Beach Rd, Navakkuda - Batticaloa 94 77 6849

**Assisi Boys Home**
Main Rd, Kurukulmadam - Batticaloa 94 65 225 0313

**Benthel Boys Children Home**
Zoneal Education Office Rd, Valaichenai - Batticaloa 94 77 632 8577

**Benthel Girlís Children Home**
Zoneal Education Office Rd, Valaichenai - Batticaloa 94 77 632 8577

**Bethel Girls Children Home**
Vipulanada Rd, Valichenai - Batticaloa 94 77 515 3078

**Eravur Children Care Home**
Meerakerny Rd, Eravur - Batticaloa 94 77 996 6345

**Good Shepherd Children Home**
Post Office Rd, Valaichenai - Batticaloa 94 65 225 7400

**Hari Boys Home**
New Kalmuani Rd - Batticaloa 94 65 222 3653

**Jeevananthan Girls Home**
Main Rd, Pudukuduirippu - Batticaloa 94 65 365 0438

**Kattankudy Boys Home**
Kattankudy 01 - Batticaloa 94 65 224 5308

**London Sivan Kovil Girls Home**
Main Rd, Settipalayam - Batticaloa 94 65 205 6336

**Managayarkarasi Girls Home**
Maruthadi Rd - Batticaloa 94 65 205 7310

**Manikkavasagar Boys Home**
Palaiyadithona, Santhiveli, Kiran - Batticaloa 94 77 191 3037

**Methodist Girls Home**
Bar Rd, Kotamunai - Batticaloa 94 65 222 5402

**Miyani Boys Home**
Miyani nagar, Thannamunai - Batticaloa 94 77 459 0298

**Miyani Girls Home**
Miyani nagar, Thannamunai - Batticaloa 94 77 792 6410

**Pariyowan Boys Home**
Trinco Rd, Santhurukondan - Batticaloa 94 05 222 2524

**Ramakrishana Boys Home**
New Kalmunai Rd, Kalladi - Batticaloa 94 65 222 2752

**Ramakrirushana Girls Home**
New Kalmunai Rd, Kalladi - Batticaloa 94 65 222 2752

**Sakthi Girls Home**
Shakthi Home Rd, Kaluwanchikudy - Batticaloa 94 65 225 0745

**Shakthi Girls Home**
Arasadi Thervu, Kokaticholai - Batticaloa 94 65 364 2290

**Shanthi Bawan Girls Home**
Ghanasooriyam Sq., Cross Rd - Batticaloa 94 65 222 2524

**Spaks Girls Home**
Main Rd, Periya Kallaru - Batticaloa 94 67 222 1875

**Thilahawathiyar Girls.Children Home**
Main St., Kathiraveli, Vaharai - Batticaloa 94 77 629 8461

**Thilahawathiyar Girls Home**
Batticaloa - Hospital Rd, Palukamam - Batticaloa 94 65 225 1166

**Thiruniyanasampathar Gurukulam**
Main Rd, Kaluthavalai - Batticaloa 94 65 225 0277

**Trust Village Womens Development Center**
Savukady Rd, Mayilampavelhi - Batticaloa 94 76 789 7573

**Vidhyajothi Boys Home**
Central Rd - Batticaloa 94 77 481 6576

**Vipulanantha Children Home**

Main Rd, Palukamam - Batticaloa 94 65 225 1101

**Vivehanada Children Home**
Rattnam Rd, Valaichenai - Batticaloa 94 65 205 1442

**Yoga Suwami Saiva Girls Children Home**
Main Rd, Siththandi - Batticaloa 94 65 205 0420

**St.Joseph Elders Home**
Trinco Rd- Batticaloa 94 71 851 1951

**Swami Vipulananthar Elder Home**
Government Quaters Rd, Kallady - Batticaloa 94 65 222 6202

**Ozanam Centre**
Sathurukondan - Batticaloa 94 65 365 8636

**Uthayam Association of Visually Handicapped**
Saratha St., Nochchimunai - Batticaloa 94 65 205 0707

**Elim Boys Child Development Center**
Memorial Lane, Manipay - Jaffna 94 77 742 3824

**Elim Girls Child Development Center**
Memorial Lane, Manipay - Jaffna 94 77 406 9962

**Forth Sq Girls Child Development Center**
No 35, Sellar Rd, Nallur - Jaffna 94 77 064 1109

**Hindu Board Boys Child Development Center**
Kalasalai Rd, Thirunelveli - Jaffna 94 77 990 5304

**Hindu Board Girls Child Development Center**
Kalasalai Rd, Thirunelveli - Jaffna 94 77 699 2082

**Holy Family Girls Child Development Center**
Mirusuvil South, Mirusuvil - Jaffna 94 77 908 1270

**Karunai Girls Child Development Center**
Palaly Rd, Urumpirai, East - Jaffna 94 77 255 4334

**Karunalayam Annai Krishnabai Girls C. D. C.**
No 131, Palaly Rd, Thirunelveli - Jaffna 94 77 905 4873

**Karunalayam Boys Children Development Center**
Karanthan, Neerveli - Jaffna 94 77 416 1002

**Salvation Army Girls Child Development Center**
Kandy Rd, Kaithady - Jaffna 94 77 976 5696

**SOS Village Child Development Center**
No 219, Nayanmarkaddu, Nallur - Jaffna 94 77 373 3711

**Sri Pramanatha Girls Child Development Center**
Vathiri, Karaveddy, Jaffna - Jaffna 94 76 578 3004

**Thurkkapuram Girl Child Development Center**
Thurkkapuram, Tellippalai - Jaffna 94 21 224 9894

**Valluvar Girlsí Child Development Center**
Vaddukoddai East, Vaddukoddai - Jaffna 94 77 525 9513

**Mother Teresa Elder Home Amithi Illam**
Kondavil - Jaffna 94 21 223 0302

**Sivapoomi Elders Home**
Tholpuram. Chulipuram - Jaffna 94 21 225 0085, 94 21 321 4230

**Sivapoomi School ForChildren with Special Needs**
Intellectuals Disability - Jaffna Kondavil - Jaffna 94 21 224 9894

**Vaalvagham-Home for the Vissually Handicapped**
Sabapathipillai Rd, Chunnakam-Jaffna 94 21 224 0146 , 94 76 828 6331

**Aruvucholai Boys Child Development Center**
Thiruvaiaru West, Thiruvaiaru - Kilinochchi 94 21 228 3313

**Aropanam Boys Child Development Center**
Uruththirapuram - Kilinochchi 94 21 228 5088

**Gandhi Nilaya Chidren Home & Training Centre** - Kilinochchi
D-8,Uruthirapuram 94 21 228 4310, 94 77 208 1947, 94 77 720 1461

**Holy Family Girls Child Development Center**
D-8,Uruthirapuram - Kilinochchi 94 76 685 3115

**Karuna Nilayam Girls Child Development Center**
A9 Rd, Kandy Rd - Kilinochchi 94 21 228 5836

**Mahadeva Saiva Boy Child Development Center**
Puthumurippu - Kilinochchi 94 21 492 3121

**Mahadeva Saiva Girls Child Development Center** (11-18 Yrs)
Jeyanthinagar - Kilinochchi 94 21 492 3119

**Mahadeva Saiva Girls Child Development Center (6-10 Yrs)**
Jeyanthinagar - Kilinochchi 94 21 492 3118

**Sencholai Boysí Child Development Center**
Thiruvaiaru, Kilinochchi 94 76 536 8308

**Sencholai Girlí Child Development Center**
Thiruvaiaru - Kilinochchi 94 71 535 4504

**Thangamma Elders Home** -Kilinochchi
Puthukkulam, Kanagarayankulam 024 4931455, 077 449 9619

**Trist Children Home**
Ramanathapuram - Kilinochchi 94 21 206 0694

**Yogar Swamigal Thiruvadi Nilaiyam Home**
Vannerikulam - Kilinochchi 94 76 709 9162

**Association. to Empowerthe Special Needs Children**
Emersion Rd , Karadipokku 94 77 509 4390, 94 77 375 3776

**Killinochchi Special Needs Newtwork**
Malayapuram, Karachi - Kilinochchi 94 77 831 7536

**Annai Girlsí Child Development Center**
Uppukulam - Mannar 94 23 222 2483

**Anpu Sakotharar Boys Child Development Center**
Keeri - Mannar 94 77 534 4427

**Sepamalai Mariyannai Irakathin Girlsí Child Development Center**
Pesalai - Mannar 94 23 205 0095

**Sivanarul Boys Child Development Center**
Thiruketheeswaram - Mannar 94 23 205 0805, 94 77 581 5998

**Sivanarul Girls Children Development Center**
Thiruketheeswaram - Mannar 94 23 2050 804

**Vetijin Nalnampikai Illam Good Faith Home of Victory**
No 43, Convent Rd, Pattah - Mannar 94 23 2222 545

**Saradha Mission Child Development Center**
Kirigalpotta - Matale 94 66 205 1721

**St. Francis Child Development Center**
Vihaara Rd - Matale 94 77 438 4851

**Anpu Boysí Child Development Center**
Muthu Vinayagar Puram, Oddusuddan 94 71 535 4502

**Barathy GirlChild Development Center**
Putharikuda, Mulliyavalai - Mullaitivu 94 77 201 5234

**Ladani Girls Child Development Center**
Silawaththai - Mullaitivu 94 77 422 8853

**Nallayan Girls Child Development Center**
Jaffna Rd, Mankulam - Mullaitivu 94 21 206 1034

**Pari Girlsí Child Development Center**
Mulliyavalai - Mullaitivu 94 21 206 1034

**Iniya Vazhvu Illam**
A Division , Thevipuram - Mullaitivu 94 21 206 1949

**Happy Home Child Development Center**
Wanigasekarapura, Kotagala - Nuwara Eliya 94 51 224 4174

**Maranatha Child Development Center**
Hatton - Nuwara Eliya 94 51 222 2489

**Rainbow Child Development Center**
Drayton Estate, Kotagala - Nuwara Eliya 94 77 532 1680

**Shalom Child Development Center**
Lackam Estate, Maskeliya - Nuwara Eliya 94 52 227 7222

**Annai Saratha Children Home**
Mallihaitheevu, Muthur - Trincomalee 94 26 205 4506

**Anpu Illam**
167, Central Rd - Trincomalee 94 26 222 1214

**Four Square**
707 Anpuvalipuram - Trincomalee 94 26 222 7170

**Grace Girls**
3rd Mile Post, Cholaiyadi, Uppuveli - Trincomalee 94 26 722 3644

**Hasanath Boys**
Kurinchakerny, Kinniya - Trincomalee 94 26 223 6135

**Hasanath Girls**
Kurinchakerny, Kinniya - Trincomalee 94 26 223 6135

**My Fatherís House Boys Children Homes**
46, Kandasamy Rd - Trincomalee 94 26 222 6861

**Rawlathul Athfal**
PMB Rice Mill, Muthur - Trincomalee 94 77 934 7438

**Rewathe Child Development Center**
5th Post, Kandy Rd - Trincomalee 94 26 224 2328

**Sivayogasamayam Swami Gangadaranatha Children Home**
64 Main St. - Trincomalee 94 26 222 2049

**Sri Sanmuga Boys** 294 inner Harbor Rd - Trincomalee 94 26 567 0234

**Sri Sanmuga Girls** 57, Viddyalaya Rd - Trincomalee 94 26 222 2521

**Thapovanam Boys**
Thirukadaloor - Trincomalee 94 26 222 1469

**Thapovanam Girls** Thirukadaloor - Trincomalee 94 26 222 1469

**Deva Anpu Children Home**
Thiththikulam, Murunkanoor - Vavuniya 94 24 4921 859

**Hindu Anpakam Children Home**
Mannar Rd, Veppankulam - Vavuniya 94 24 222 3683

**Salvatorian Girls Home**
Iluppaikulam, Neriyakulam, Cheddikulam - Vavuniya 94 24 324 4577

**Sri Ahilandeswary Children Home** Kovilkulam - Vavuniya 94 24 222 1685

**Mother Teresa Elder Home** Pampaimadu -Vavuniya 94 24 205 4494

**Sivan Elders Home**
Ellappar Marutham Kulam - Vavuniya 94 24 222 1685, 94 77 656 7827

**Thanagamma Eleders**
No. 1 Puthukulam Rd, Puthukula - Vavuniya 94 76 248 2766

# சிங்களவர் பார்வையில் திலீபன்

என். சரவணன்



இது "திலீபன் நினைவு காலம்" திலீபன் போரில் சமர் புரிந்து கொல்லப்பட்டவர் அல்ல. அகிம்சா ரீதியில் மனிதாபிமானக் கோரிக் கைகளை முன்வைத்து உண்ணாவிரத மிருந்து மரணித்துப் போனவர். 1987 செப்டம்பர் 15ஆம் திகதி உண்ணாவிரத மிருக்கத் தொடங்கியவர் செப்டம்பர் 26 ஆம் திகதி 12 வது நாள் அவர் உயிர் நீத்தார். திலீபன் அப்போது 23 வயது மட்டுமேயான மருத்துவபீட மாணவன்.

சமீபத்தில் பாதுகாப்புச் செயலாளரும், "வெற்றிப் பாதை வழியே நந்திக் கடகடலுக்கு" என்கிற நூலை எழுதியவருமான மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன

"இலங்கையின் வரலாற்றில் உண்ணா விரதம் இருந்து செத்த ஒரே ஆள் திலீபன் மட்டுமே. அதுவும் திலீபன் செத்தது தனக்கு இருந்த நோயால் தான். அதனால் தான் பிரபாகரன் திலீபனை உண்ணாவிரதம் இருக்கப் பணித்தார்." என்று அறிவித் திருந்தார். தமிழர்களுக்கு எதிரான போரைப் பற்றி 900 பக்க நூலை எழுதிய கமல் குணரத்னவுக்கு 1988 ஆம் ஆண்டு இந்தியப படைக்கு எதிராக உண்ணாவிரதமிருந்து உயிர்நீத்தார் என்கிற தகவலைக் கூட அறிந்திருக்கவில்லை என்பதோடு திலீபன் நோயால் மரணித்தார் என்கிற அண்டப் புலுகையும் சொல்ல முடிகிறதென்றால் அதிகாரத்துவ இனவெறி எகத்தாள வெளிப்பாடாக மட்டுமே நம்மால் கணிக்க முடியும். மேற்படி அவரின் கருத்தை பல சிங்கள ஊடகங்களும் பெரிதுபடுத்தி வெளியிட்டிருந்தன. அக் கருத்தை உள்வாங்கிக்கொண்ட சிங்கள வெகுஜன உளவியல் அதை அப்படியே பிரதி செய்து பல இடங்களிலும் வினையாற்றி வருவதை காண முடிந்தது.

மாவீரர் தினத்தை மட்டுமல்ல, முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தையும், நினைவு கொள்ள விடாதது போல திலீபன் நினைவையும் மேற்கொள்ள முடியாதபடி கடும் கட்டுப்பாடுகளை திணித்துவருகிறது.

இறந்த தங்கள் அன்புக்குரியவர்களின் நினைவாக எங்காவது கல்லறைகளை உருவாக்குவதன் மூலம், நம்முடைய அன்புக்குரியவர் மீதுள்ள அன்பையும், அவரின் நினைவையும் நிரந்தரமாக நிலைநிறுத்த முயற்சிக்கிறோம். எல்லாளன் துட்டகைமுனு சண்டையின்போது துட்டகைமுனு எல்லாளனைக் கொன்ற போதும். போரில் தோற்கடிக்கப்பட்ட தனது எதிரி எல்லாளனுக்காக துட்டகைமுனு ஒரு கல்லறைக் கோபுரத்தை அமைத்து துட்டகைமுனுவுக்கு மரியாதை செய்ய மறக்கவில்லை என்பதை மகாவம்சம் வழியாக அறிகிறோம். அந்தக் கல்லறை வழியாக கடந்து செல்லும் எவரும் அங்கு வந்து தமது தலைக்கவசங்களை கழற்றி கௌரவம் செய்யவும் உத்தர விட்டாராம் துட்டகைமுனு.

இறந்துபோனபின் ஒருவரின் கல்லறை மதம், இனம், இனம், சாதி என்பவற்றினதும் சின்னமாக ஆகிவிடுவதில்லை. மறுபுறம் இறந்து மண்ணுக்குள் புதைந்துபோன ஒருடல் எந்த சமூக அடையாளங்களுக்கும் சொந்தமாகி விடுவதில்லை. ஒருவரையோ, ஒரு நிகழ்வையோ நினைவுகொள்வது என்பது அரசியல் பண்பாடல்ல மாறாக வழிவழிவந்த பண்பாட்டு மரபின் தொடர்ச்சி, அதற்கென்று பண்பாட்டுப் பெறுமதி, அரசியல் பெறுமதி, அறப் பெறுமதி, மரபுப் பெறுமதி என ஒரு திரட்சியான பெறுமதியைக் கொண்டிருக்கிறது. நினைவு கொள்ளல் என்பது நமது மரபின் ஒரு அங்கமாகவே ஒட்டியிருக்கிறது. அதை வெறுப்பதும், மறுப்பதும், தடுப்பதும் பண்பாட்டு அறமுள்ள ஒன்றாக இருக்க முடியாது. ஆனால் இனக் குரோதத்துடன் அந்த நினைவழிப்பு வன்முறை ஒரு தொடர் நிகழ்வாகவும், பேரினவாத அரசியலின் அங்கமாகவும் ஆகியிருக்கிறது.

இலங்கையில் நிகழ்ந்த போரில் உயிரிழந்த சிங்கள இராணுவத்தினருக்கு சிங்களப் பிரதேசங்களில் மாத்திரமன்றி தமிழர் பிரதேசங்களெங்கும் ஏராளமான நினைவுத் தூபிகள் எழுப்பப்பட்டு நினைவுச் சின்னங்களாக ஆக்கப்பட்டுள்ளன. அவை சிங்கள பௌத்த வீரத்தனத்தின் பெருமையாக கொண்டாடப் படுகின்றன. தமிழர் பிரதேசங்களில் பிரமாண்டமாக கட்டப்பட்டுள்ள பல இராணுவ நினைவுத் தூபிகளில் ஒரு கையில் சிங்கக் கொடியையும், மறு கையில் துப்பாக்கியையும் உயர்த்தி ஏந்தியபடி இருக்கும் சிலைகள் நிறுவப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

யுத்தம் நிகழ்ந்துகொண்டிருந்த காலத்தில் வடக்கு கிழக்கு பகுதிகளில் கொல்லப்பட்ட தமிழ்ப் போராளிகளின் நினைவாக அங்கு உருவாக்கப்படிருந்த மாவீரர் துயிலும் இல்லங்களில் அவர்களின் சொந்தங்கள் வந்து அழுதாறி, தீபத்தை ஏற்றி, ஒரு பூவை வைத்து விட்டுச் செல்ல உரிமை இருந்தது.

ஆனால் "சமாதானத்துக்கான யுத்தம்" என்றும், "தமிழர்களை பயங்கரவாதிகளிடம் இருந்து விடுவிக்கும் யுத்தம்" என்றும் போர் புரிந்த சிங்கள அரசு போர் நிறைவடைந்ததன் பின்னர் அம்மக்களுக்கு ஏற்கெனவே இருந்த அந்த உரிமையை மறுத்துவிட்டது. அம்மக்கள் அதுவரை அழுதாறி வந்த அந்தக் கல்லறைகள் எதையும் மிச்சம் வைக்காது புல்டோசர் வைத்து தகர்த்து சின்னாபின்னமாக அழித்து விட்டது. அப்படி அடையாளம் தெரியாமல் தரைமட்டமாக்கப்பட்ட இடங்களில் அந்தக் கல்லறைகளுக்கு சொந்தமானவர்களின் தாய்மார்களும், பிள்ளைகளும், சகோதரர்களும், துணைவியரும், உறவினர்களும் வந்து ஒரு பொது இடத்தை தெரிவு செய்து ஒரு தீபத்தை ஏற்றக் கூட விடாமல் யுத்தம் முடிந்து இந்த பதினோரு வருடங்களாக தொடர்ந்தும் தடுத்து வருகிறது சிங்கள அரசு.



இடிக்கபடுவதற்கு முன்னர் இருந்த திலீபனின் நினைவுத் தூபி

சிசிரவின் பதிவுக்கு...

அரச அதிகாரத்தின் மறுப்பு இப்படி இருக்கையில் மறுபுறம் திலீபனைக் கொண்டாடும் சிங்களத் தோழர்கள் பலரும் இருக்கவே செய்கிறார்கள். ஊடகவியலாளரும் இடதுசாரி முகாமைச் சேர்ந்தவருமான சிசிர யாப்பா திலீபன் மாபெரும் கூட்டமொன்றில் உரையாற்றிக்கொண்டிருக்கும் படத்துடன் ஒரு குறிப்பையும் முகநூலில் பகிர்ந்திருந்தார்.

**"திலீபன்!**

**ஒருபோதும் சந்தித்துக்கொள்ளாத சகோதரனே!**

**உன் பெயருக்குக் கூட பீதியுருவோரும் இருந்த போதும் நான் உன்னை நினைவில் வைத்து மரியாதை செய்கிறேன்!"**

என்று எழுதியிருந்தார். இந்தப் பதிவை அவரின் பக்கத்திலிருந்து மாத்திரம் 170 சிங்கள நண்பர்கள் பகிர்ந்திருந்தார்கள். இப்படி வேறு சில சிங்கள தோழர்களும் திலீபனின் நினைவேந்தலை செய்திருந்தனர். சிசிர யாப்பாவின் பதிவின் கீழ் அப்பதிவை வரவேற்று பல பதிவுகள் இருந்தன. அதுபோல அவரை சபித்தும், தகாத வார்த்தைகளால் திட்டியும் பல வாதங்கள் அங்கே காணப்பட்டன. புற்று நோயால் பாதிக்கப்பட்டிருந்த திலீபனை வலுக்கட்டாயமாக சாக அனுப்பியதாக அங்கே விவாதங்கள் நடக்கின்றன. அவற்றுக்கு சிசிர யாப்பா தான் அறிந்த திலீபன் பற்றி விவாதித்துக் கொண்டிருக்கிறார்.

மறுபுறம் இன்னொரு சிங்கள நண்பர் சிசிரவிடம் கேட்கிறார்.

**"சிசிர அண்ணா! திலீபன் பற்றி விரிவான கட்டுரையை எழுதுங்கள். முடிந்தால் ஒரு ஆவணப்படத்தை சிங்களத்தில் செய்யுங்கள் நான் உங்களுடன் ஒரு கெமராமேனாக பயணிக்கிறேன்...."**

என்கிறார்.

திலீபனை சிங்கள சமூகத்திடம் கொண்டு போய் சேர்த்ததில் ஜயதிலக்க பண்டாரவுக்கு முக்கிய பாத்திரமுண்டு.

மருத்துவ மாணவரும், புலிகளின் அரசியல் பிரிவு பொறுப்பாளருமான திலீபனுக்காக நல்லூர் கோவில் அருகில் கட்டப்பட்டிருந்த நினைவுச் சின்னம் இப்போது அங்கில்லை. திலீபன் போர் புரிந்து கொல்லப்பட்டவரும் அல்ல. தன் மக்களுக்காக விடாப்பிடியான உண்ணாவிரதம் இருந்து மரணித்த ஓர் உண்ணாவிரதி.

உடைத்து அழிக்கப்பட்டுள்ள திலீபனின் நினைவுத் தூபி



ராஜீவ் காந்தி மற்றும் ஜே.ஆர். ஜெயவர்தன வுடன் இந்தோ-இலங்கை உடன்படிக்கையின் கீழ் இலங்கையில் இந்திய துருப்புக்கள் பங்கு வகிப்பதை எதிர்த்து ஐந்து கோரிக்கைகளை எதிர்த்து திலீபன் 1987 செப்டம்பர் 15 அன்று ஒரு கொடிய உண்ணாவிரதத்தை மேற் கொண்டார். யாழ்ப்பாணத்தின் நல்லூர் கந்த சாமி கோவில் அருகே உள்ள நிலத்தை திலீபன் தேர்வு செய்தார். உண்ணாவிரத மிருந்த அந்தப் பகுதியை நோக்கி மக்கள் தொகைதொகையாக வந்து ஒன்று கூடினர். பலர் இரவுபகலாக அங்கேயே அமர்ந்திருந் தனர். திலீபனுக்காக பாடல்களையும் பாடினர்.

மகாத்மா காந்தி மற்றும் திலீபனின் உரு வத்தை தாங்கிய பதாகைகள் அந்த இடத்தை அலங்கரித்தன. திலீபன் தன் இலட்சியத்துக் காக மரணத்தை அண்மித்துக்கொண்டிருந் தார். அவருக்காக பக்திப் பாடல்களைப் பாடிய தமிழ் மக்கள் திலீபனின் தலைவிதியை வேதனையுடன் பார்த்துக் கொண்டிருந் தார்கள். அதைத் தவிர அவர்களுக்கு வேறொன்றும் செய்வதற்கில்லை. கையறு நிலை. உண்ணாவிரதம் தொடங்கி பதி னொரு நாட்களுக்குப் பிறகு, செப்டம்பர் 26, 1987 அன்று, திலீபன் மூச்சுத்திணறினார். திலீபனின் கடைசி பெருமூச்சுடன் அந்த இட மெங்கும் கூடி இருந்த தமிழ் மக்களின் கண் களில் இருந்து ஏக்கம் மிகுந்த வேதனையும் கண்ணீரும் பெருமூச்சும் பீறிட்டது. திலீபன் ஒரு நிராயுதபாணியாகவும் அமைதியாகவும் இலட்சிய மரணத்தைத் தழுவினார். திலீ பனின் மரணம் அரசியல் வர்ணனையாளர் களால் **"ஆயுதங்கள் மீதான நம்பிக்கை வன் முறையற்ற போர் வடிவமாக மாற்றுவதற்கான வாய்ப்பு"** என்று வர்ணிக்கப்பட்டுள்ளது. அதனால்தான் திலீபனின் மரணம் வடக்குக்கு மட்டுமன்றி தெற்கும் முக்கிய செய்தியாக அமைந்தது.

## நினைவுகளையும் எங்கே புதைத் தீர்கள்?

வடக்கைப் போலவே தெற்கில் உள்ள மக் களுக்கும் திலீபனின் இறப்பு ஏற்படுத்திய அதிர்ச்சி பல்வேறு பல்வேறு கலை, இலக்கிய படைப்புகளால் பேசுபொருளானது பெப்பிலி யானா சுனேத்ராதேவி பிரிவேனாவின் தலைவராக இருந்த கோன்கஸ்தெனிய ஆனந்த தேரோ என்கிற ஒரு பௌத்த பிக்கு இந்தச் சம்பவத்தால் மனம் நொந்து போனவர் களில் ஒருவர். அவர் ஒரு படைப்பாளியும் கூட. அவர் தனது கவிதைப் படைப்பால் பட்டினிப் போராட்டம் இருந்து மரணித்த திலீபனுக்கு அஞ்சலி செலுத்தினார்.

**"வானத்தைப் பார்த்து எரியும் சூரியனைத் தாங்கிக் கொள்**

**தரையில் சிந்தியுள்ள இரத்தக் கடலைப் பார்**

**உயிரால் விலை கொடுத்த சகோதர திலீபனே**

**நீயும் நானும் ஒரு தாய் பிள்ளைகள் திலீபன்"**

இப்படியான கவிதைகளை யுக்திய பத்திரிகை அப்போது வெளியிட்டது. யுக்திய பத்திரிகை தென்னிலங்கையின் முக்கிய மாற்றுப் பத் திரிகையாக இருந்தது. இனங்களுக்கு இடை யே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத் தினால் அது அப்போது வெளியிடப்பட்டு வந்தது. இதே இயக்கத்தின் வெளியீடாக அப் போது பிரபலமான தமிழ் மாற்றுப் பத்திரிகை யான சரிநிகரும் வெளிவந்தது. இந்தக் கவிதையை ஒரு பாடலாக நாடெங்கும் சிங்கள மேடைகளில் கொண்டு சென்றார் பிரபல சிங்களப் பாடர் ஜயதிலக்க பண்டார. 1971 ஜேவிபி கிளர்ச்சியில் பங்குகொண்டு நான்கு வருடங்கள் சிறைத்தண்டையும், சித்திரவதை யும் அனுபவித்து விடுதலையானவர். அதன் பின்னர் மீண்டும் ஜே.வி.பியின் "விடுதலை கீதம்" (விமுக்தி கீ) அணியில் இணைந்து பல தொழிலாளர் வர்க்க எழுச்சிப் பாடல்கல் பல வற்றை பாடியிருக்கிறார் ஜயதிலக்க பண்டார. அடிமட்ட மக்களின் போராட்டம் நடக்கும் இடங்களில் எல்லாம் ஒரு கலைஞராக அவர் தனது பாடல்களால் பங்களித்தார். அது மட்டு மன்றி அநியாயத்துக்கு எதிரான பெரும் பாலான ஆர்ப்பாட்டங்களில் எல்லாம் அவ ரைக் காணலாம்.

90களின் நடுப்பகுதியில் சந்திரிகாவின் ஆட் சிகாலப்பகுதியில் "வெண்தாமரை இயக்கம்" நாடளாவிய ரீதியில் தமிழ் - சிங்கள மக்கள் மத்தியில் சமாதான உறவை வளர்க்கும் என்கிற நம்பிக்கை தோழர் ஜயதிலக்க பண்டாரவுக்கு இருந்தது. அதனால் அவர் வெண்தாமரை இயக்க பிரச்சார மேடைகளில் பிரதான பாடகராக ஜொலித்தார். தமிழ் மக்களின் துயரங்களைச் சொல்லும் பல பாடல்களை அவர் பாடினார். "பயத்திலிருந்து விடுபடுவோம்" (බියෙන් අත්මිදෙමු) என்று அன்று ஜே.வி.பியின் மேடைகளில் பாடிய பாடல்களை மீண்டும் இந்த மேடைகளில் பாடினார். அந்தப் பாடல்ககள் வரிசையில் முக்கிய பாடலாக இருந்தது தமிழீழ விடு தலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் துறை யைச் சேர்ந்த திலீபனின் உண்ணாவிரத இறப்பை நினைந்து பாடப்பட்ட இந்தப் பாடல்.

அவர் 2017 ஆம் ஆண்டு வெளியான "சமபிம" என்கிற சிங்கள சஞ்சிகையில் **"நினைவு களையும் எங்கே புதைத்தீர்கள்"** என்கிற தலைப்பில் ஒரு கட்டுரையில் இப்படி குறிப் பிடுகிறார்.

**"மக்களை கொல்வது பரிநிர்வாணத்திற்கு வழி வகுக்கும் ஒரு நல்லொழுக்கம்" என்பது போன்ற கருத்தை பரப்புகிற போர் இலக்கியங் கள் சிங்கள சமூகத்தில் பரப்பப்பட்டுக்கொண் டிருந்த அந்த சந்தர்ப்பத்தில் இந்த பௌத்த துறவி மரண அச்சுறுத்தலையும் மீறி தனது பேனையைப் பயன்படுத்தினார். தமக்கு தொடர்பேயில்லாத போரில் தொடர்புடையவர் கள் மரணித்து வருவதைக் கண்டு மனம் நொந்தவர்களில் ஆனந்த தேரரும் ஒருவர். அவர் தனது கவிதையின் இறுதியில் மரணித் துவிட்ட திலீபனை நோக்கி "உன் சிலையை நடந்துவந்து மண்டியிட்டு முத்தமிடுகிறேன்..."**



என்று உருகுகிறார்.

"ஆனால் இனி முத்தமிடுவதற்கு மட்டுமல்ல நினைவு கொள்வதற்கோ கூட அந்த சிலை அங்கில்லை. அது இடித்து வீசியெரியப் பட்டுவிட்டது..." என்கிறார்.



மேலும் அவர் இப்படிக் குறிப்பிடுகிறார்.

**"சமாதான காலப்பகுதியில் இந்த பாடலை திலீபன் நினைவுத் தூபியின் முன் ஒரு மேடை யில் பாட எனக்கு வாய்ப்பு கிடைத்தது, அந்தத் தூபி பிரசித்திபெற்ற நல்லூர் கந்தசாமி கோவில் அருகே உள்ள நிலத்தில் கட்டப் பட்டிருந்தது. யுத்தத்தின் பின் நான் அங்கு சென்றிருந்தேன். நல்லூர் கோவிலருகில் அமைதியாக நின்றிருந்த அந்த சிலையைக் காணவில்லை. அதை இனிமேலும் நிரந்தரமாக காண முடி யாது என்பதை விளங்கிக் கொண் டேன்.**

**மரணித்த தமிழ் போராளிகளுக்காக கட்டப் பட்டிருந்த மற்ற கல்லறைகளின் எச்சங்களைத் தவிர வேறெதையும் அங்கு காண முடிய வில்லை. இறந்த மற்ற தமிழ் வீரர்களுக்காக கட்டப்பட்ட நினைவுச்சின்னங்களின் எச்சங் களைத் தவிர வேறு எதுவும் காணப்பட வில்லை. யுத்தம் முடிவடைந்த பின்னர் நாங் கள் நல்லிணக்கத்தை விரும்புபவர்களாக இருந்தால் தமிழ் போராளிகளுக்காக கட்டப் பட்டிருந்த நினைவுச்சின்னங்களையும் கல் லறைகளையும் அழித்ததன் மூலம் ஒரு நல் லிணக்கத்தை கொண்டுவர முடியாது என்கிற உண்மையை நாம் எப்போது உணர்ந்து கொள்ளப்போகிறோம். வீரர்களுக்காக கட்டப் பட்ட நினைவுச்சின்னங்கள் அல்லது கல் லறைகளை இடிப்பது நல்லிணக்கத்தை ஏற் படுத்தாது என்ற உண்மையை எப்போது உணரு வோம்...?"**

என்று ஏக்க அழுகுரலில் ஜயதிலக்க பண்டார கூறுகிறார்.

ஜெயதிலக்க பண்டார பாடிய அந்தப் பாடல் மீண்டும் இப்படித் தொடர்கிறது...

**"வானத்தைப் பார்த்து எரியும் சூரியனைத் தாங்கிக் கொள்**

**தரையில் சிந்தியுள்ள இரத்தக் கடலைப் பார்**

**உயிரால் விலை கொடுத்த சகோதர திலீபன்**

**நீயும் நானும் ஒரு தாய் பிள்ளைகள் திலீபன்**

**உனதும் எனதும் எதிரி யார் என்பதை கண்டு பிடிக்கலையே**

**ஒரு தாய் பிள்ளைகள் என்பதை ஏற்றுக் கொள்ளலையே**

**நாம் ஓர் வழியில் செல்ல உடன்படவு மில்லையே**

**வாழ்ந்தபடி போராட விரும்பவுமில்லையே**

**நாங்கள் சிங்களவர், நாங்கள் தமிழர்கள் என்கிற**

**மூடத்தனத்தை கைவிட்டு – அடுத்த தலை முறை**

**நாட்டை ஒன்றிணைத்து மனிதத்தை நேசிக் கும் நாள் வரும்போது**

**உன்னை நினைத்தபடி – அந்த கோவிலரு கிலிருந்து**

**நடந்துவந்து மண்டியிட்டு முத்தமிடுகிறேன் உன் சிலையை...**

இந்தப் பாடலின் உள்ளடக்கத்தையும், அதன் மெட்டும், உருக்கமான இசையையும் கேட்டு அழுத சிங்களவர்களை நான் கண்டிருக் கிறேன். குறிப்பாக வெண்தாமரை இயக்கம் முன்னெடுத்த "சாது ஜன ராவ" என்கிற இசை நிகழ்சிகளை பார்வையிட குழுமியிருந்த சிங் களவர்கள் பலர் அழுதிருக்கிறார்கள். "சாது ஜன ராவ" இசை நிகழ்ச்சி இலங்கையின் மூலை முடுக்கெங்கும் 1200 க்கும் மேற்பட்ட தடவைகள் நிகழ்த்தப்பட்டிருக்கிறது. 2014 ஆம் ஆண்டு வீதி வீதியாக சென்று "வீதியே விரோதய" (வீதியில் எதிர்ப்பு) என்கிற வீதி நாடகத்தை நாட்டின் பல பகுதிகளில் நிகழ்த் தினார்கள். அந்த வீதி நாடகத்தின் பிரதான பாடல் குரல் ஜயதிலக்க பண்டாரவினது. நாட் டின் அராஜகத்தை எதிர்த்து நிகழ்த்தப்பட்ட நாடகம் அது. 2014 நவம்பர் 25 ஆம் திகதி கொழும்பில் ஆரம்பித்து வீதி வீதியாக நடந்து பல நாட்கள் சென்றது அந்த நாடகக் குழு. டிசம்பர் 5 ஆம் திகதி ஹம்பாந்தோட்டை நகரத்தில் வைத்து ராஜபக்ச அரசாங்கத்தைச் சேர்ந்த அரசியல் பிரமுகரும் மேயருமான எராஜ் தன் சண்டியர்களுடன் சேர்ந்து அந்தக் குழுவை கடுமையாக விரட்டி விரட்டி தாக் கியது. ஜயதிலக்க பண்டார கடுமையாக தாக் கப்பட்டார்.

ராஜபக்ச அரசாங்கத்தின் தொடர் அச்சுறுத்தல் காரணமாக அவரின் நண்பர்கள் அவரை நாட்டை விட்டு வெளிநாட்டுக்கு அனுப்பி வைத் தார்கள். அப்படி அவர் ஐரோப்பாவுக்கு வந் திருந்தபோது அவர் எனது நண்பர் ஒருவரின் வீட்டில் தான் தங்கிருந்தார். தோழர் ஜயதிலக்க பண்டாரவுடன் தொலைபேசியில் உரையாடிய போது அவர் சோர்ந்து காணப்பட்டார். எப் போதும் இயங்கியே பழகிய மனிதர் இங்கு வந்து அரசியல் ஒர்மம் பிடுங்கப்பட்டுக் கொண்டிருப்பதை உணர்ந்தவராக இருந்தார். நான் இங்கு இருக்க மாட்டேன் சென்று விடு வேன் என்றார். அதுபோலவே அச்சுறுத்தல் மத்தியில் மீண்டும் நாட்டுக்குச் சென்று வாழ்ந்து வருகிறார்.

திலீபனைப் பற்றிய பாடல் மட்டுமன்றி அவர் தமிழர்களுக்காக பாடிய ஏனைய பாடல் களையும் நீங்கள் கேட்க வேண்டும்.

யுத்தத்தின் போதும் யுத்தம் முடிவடைந்ததன் பின்னரும் போர் கொண்டாட்ட, போர் களிப்பு பாடல்கள் தென்னிலங்கை சிங்களவர் மத்தி யில் வெகுஜன ரசனையை உயர்த்தும் அள வுக்கு போர் போதை ஊட்டப்பட்டாகிவிட்டது.

திலீபனை நினைவுகொள்ள முடியாதபடி சிறீலங்கா இனவெறித் தேசம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளும், உறுமல்களும், மிரட் டல்களும் "தமிழருணர்வைத்" தான் ஊட்டிப் பெருக்கியிருக்கிறது என்பதை சிங்களத் தேசம் அறியாது. செப்டம்பர் 15-26 வரையான நாட்களையும் சினமேற்றும் நாட்களாக சிங் களத் தேசம் ஆக்கியதாக புரிந்துகொள் கிறோம்.

சீப்பை ஒளித்துவிட்டால் கலியாணம் தான் நின்றுவிடுமா? நினைவுகொள்ளலை மறுத்து விட்டால் மறதிதான் வந்திடுமோ? கல்லறை களை சிதைத்துவிட்டால் வேட்கைதான் ஓய்ந்திடுமா?

நன்றி - தாய்வீடு - ஒக்டோபர் 2020
















சங்கத்தமிழ்

ஒவ்வொரு தனி நபரினதும் வளர்ச்சியில் தான்
ஒரு நாட்டின் வளர்சி தங்கி நிற்கின்றது...!

உங்கள் அறிவித்தல்கள் - விளம்பரங்கள்
சங்கத்தமிழ் மின் இதழில் வெளியிட வேண்டுமா?

விளம்பரம் இன்றி வியாபரம் இல்லை
உங்கள்
விளம்பரங்கள்
அறிவித்தல்கள்
துயர்பகிர்வுகள்
விற்பனை
வாடகை
மற்றும்
வரி விளம்பரங்களுக்கும்

437.345.4203

# மனித உரிமை மீறல்களுக்கு பொறுப் புக்கூற வேண்டும் – நடா அல் நஷிப்!




செப்டம்பர் 12, 2022

ஜெனீவாவில் நடைபெற்று வரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் (UNHRC) 51வது வழக்கமான அமர்வில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் இலங்கை தொடர்பான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மனித உரிமைகளுக்கான பதில் உயர்ஸ்தானிகர் நடா அல் நஷிப் இலங்கை தொடர்பான அறிக்கையை இன்று சபையில் சமர்ப்பித்தார்.

அறிக்கையை முன்வைத்த நடா அல்-நஷிப், இலங்கையில் நிலைமை பலவீனமாக இருப்பதாகவும், மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்புக்கூற வேண்டும் என்றும் கூறினார்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் வருமாறு

இலங்கையின் புதிய அரசாங்கம் மனித உரிமைகள் மற்றும் நல்லிணக்கத்தை முன்னெடுப்பதற்கு ஒரு தேசிய உரையாடலைத் தொடங்க வேண்டும். கடந்த கால மீறல்கள் மீண்டும் நிகழாமல் தடுக்க பொறுப்புக்கூறல் மற்றும் ஆழமான நிறுவன சீர்திருத்தங்களுக்கு அழைப்பு விடுக்கிறது.

இலங்கை தனது அரசியல் வாழ்வில் முக்கியமான கட்டத்தில் உள்ளதாகவும், அனைத்து சமூகங்கள் மற்றும் அனைத்து தரப்பு மக்களின் மனித உரிமைகளை கடுமையாகப் பாதித்துள்ள கடுமையான பொருளாதார நெருக்கடியின் மத்தியில் இருப்பதாகவும் அறிக்கை ஒப்புக்கொள்கிறது. இது ஆழமான சீர்திருத்தங்கள் மற்றும் பொறுப்புக்கூறலுக்கான அனைத்து சமூகங்களிலிருந்தும் இலங்கையர்களின் பரந்த அடிப்படையிலான கோரிக்கைகளை தூண்டியுள்ளது, மேலும் நாட்டை ஒரு புதிய பாதையில் வழிநடத்த அரசாங்கத்திற்கு புதிய வாய்ப்பை வழங்குகிறது.

எவ்வாறாயினும், நிலையான முன்னேற்றங்கள் நடைபெறுவதற்கு, கடந்த கால மற்றும் தற்போதைய மனித உரிமை மீறல்கள், பொருளாதார குற்றங்கள் மற்றும் உள்ளூர் ஊழல்களுக்கு உட்பொதிக்கப்பட்ட தண்டனை உட்பட, பொருளாதார நெருக்கடிக்கு பங்களித்த அடிப்படை காரணிகளை அடையாளம் கண்டு நிவர்த்தி செய்வது இன்றியமையாதது.

தற்போதைய சவால்களை எதிர்கொள்வதற்கும், கடந்த கால மனித உரிமை மீறல்கள் மீண்டும் நிகழாமல் தடுப்பதற்கும் அடிப்படை மாற்றங்கள் தேவை.

கடுமையான பாதுகாப்புச் சட்டங்கள் மற்றும் அமைதியான போராட்டத்தின் மீதான ஒடுக்குமுறைகள் மீதான நம்பிக்கையை உடனடியாக முடிவுக்குக் கொண்டு வரவும், இராணுவமயமாக்கல் நோக்கிய நகர்வை மாற்றியமைக்கவும், பாதுகாப்புத் துறை சீர்திருத்தம் மற்றும் தண்டனையின்மையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான புதுப்பிக்கப்பட்ட அர்ப்பணிப்பைக்காட்டவும்.

பொதுமக்கள் போராட்டங்களுக்கு பதிலளிப்பதில் பாதுகாப்புப் படைகள் சமீபத்தில் கணிசமான நிதானத்தைக் காட்டினாலும், அரசாங்கம் கடுமையான அணுகுமுறையை எடுத்தது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் சில மாணவர் தலைவர்களைக் கைது செய்தது மற்றும் அமைதியான போராட்டங்களை வன்முறையில் ஒடுக்கியது.

நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கில் அதிக அளவில் இராணுவமயமாக்கப்பட்ட சூழல் மற்றும் கண்காணிப்பு கலாச்சாரம் தொடர்கிறது.

நம்பகமான உண்மையைக் கண்டறியும் பொறிமுறையை நிறுவுதல் மற்றும் நடவடிக்கை எடுப்பது உட்பட நிலுவையில் உள்ள கடப்பாடுகளைச் செயல்படுத்த காலக்கெடுத் திட்டத்துடன், நிலைமாறுகால நீதி மற்றும் பொறுப்புக்கூறல் தொடர்பான விரிவான மற்றும் பாதிக்கப்பட்டவர்களை மையப்படுத்திய மூலோபாயத்தை மீண்டும் தொடங்குமாறு புதிய அரசாங்கத்தை வலியுறுத்துகிறது.

ஒரு தற்காலிக சிறப்பு நீதிமன்றம். அனைத்து பொறுப்புக்கூறல் மற்றும் நிலைமாறுகால நீதிப் பொறிமுறைகளை வடிவமைத்து செயல்படுத்துவதில் பாதிக்கப்பட்டவர்களுக்கு முக்கியப் பங்கு வழங்கப்பட வேண்டும் எனக் கூறுகிறது.

2019 ஆம் ஆண்டு ஈஸ்டர் ஞாயிறு குண்டுவெடிப்புகள் பற்றிய உண்மையை நிலைநாட்டுவதில் முன்னேற்றம் இல்லாதது குறித்து கவலையை வெளிப்படுத்தும் அறிக்கை, சர்வதேச உதவி மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களது பிரதிநிதிகளின் முழுப் பங்கேற்புடன், தொடர்ந்து சுதந்திரமான மற்றும் வெளிப்படையான விசாரணைக்கு அழைப்பு விடுக்கிறது.

இலங்கை அரசு, அடுத்தடுத்த அரசாங்கங்கள் உட்பட, மொத்த மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்களில் ஈடுபடுபவர்களை பொறுப்புக்கூற வைப்பதற்கும், உண்மை, நீதி மற்றும் இழப்பீடுகளுக்கான பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகளை நிலைநிறுத்துவதற்கும் பயனுள்ள நிலைமாறுகால நீதிச் செயன்முறையைத் தொடரத் தவறிவிட்டது.

மாறாக, அவர்கள் பொறுப்புக்கூறலுக்கு அரசியல் தடைகளை உருவாக்கியுள்ளனர். மேலும் அரசாங்கத்தின் மிக உயர்ந்த மட்டங்களில் போர்க்குற்றங்களில் நம்பத்தகுந்த வகையில் சம்பந்தப்பட்ட சில இராணுவ அதிகாரிகளை தீவிரமாக ஊக்குவித்து இணைத்துள்ளனர்.

தேசிய மட்டத்தில் பொறுப்புக்கூறலுக்கான முன்னேற்றம் இல்லாத நிலையில், இலங்கையில் சர்வதேச சட்டத்தின் கீழ் இழைக்கப்பட்ட குற்றங்களை விசாரிப்பதற்கும், விசாரணை செய்வதற்கும், வெளிநாட்டிலும் உலகளாவிய அதிகார வரம்பிலும் உள்ள வழிகளைப் பயன்படுத்தி பொறுப்புக்கூறல் முயற்சிகளில் ஒத்துழைக்குமாறு வலியுறுத்துகிறது.

கூடுதலாக, சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் மொத்த மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்கள் அல்லது சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் கடுமையான மீறல்களுக்கு பொறுப்பானவர்கள் என்று நம்பத்தகுந்த வகையில் குற்றம் சாட்டப்பட்டவர்களை குறிவைத்து மேலும் நடவடிக்கைகளை ஆராயுமாறு வலியுறுத்துகிறது.

கவுன்சில் தீர்மானம் 46/1 க்கு இணங்க, பொறுப்புக்கூறல் தொடர்பான OHCHR பணியின் முன்னேற்றத்தை அறிக்கை கோடிட்டுக் காட்டுகிறது. மேலும் அதன் திறனை வலுப்படுத்த அழைப்பு விடுக்கிறது.

## முதலாம் ஆண்டு
## நினைவு நிகழ்வும் அஞ்சலி கூட்டமும்



# வர்ண ராமேஸ்வரன்

**துயரில் பங்குகொள்வோம்**

அவரின் துயரில் பங்குகொள்ள
அழைக்கின்றார்கள்
பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள்

திகதி : ஆவணி **25, 2022**
நேரம் : மாலை **3.00**
இடம்: தமிழிசைக் கலாமன்றம்
தொடர்புகளுக்கு **(647) 203-3369 (647) 402-4379**

# 26.09.2022











Call today to Save energy
Free Estimate!
Call today
$50 OFF
Broken Glass...?
We will fix it within 24 hour.
Let us help with...
Replacement (Door & Windows)
Custom Door & Windows
Front Door & Patio Door
Garden Door
Door & Windows Re-Caulking (Important)
Painting Doors & Windows
Basement Separate Entrance Door
Home Painting
Spotlights installation
California Shutters
PTR DOORS & WINDOWS
-Over 10 years experience-
Call Ravi: 416-825-9482
Call Kanna: 647-297-7815
E-mail: ptrrenovation@gmail.com


வங்கிக் கடன்
தொல்லைகளிலிருந்து
விடுதலை
NEW LIFE FRESH START
PAST DUE NOTICE
கடன் 80% குறைய நடவடிக்கை
Reduce your debts upto 80%
கடனுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts
கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புக்கள், சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்
Stop collection calls, legal action & garnishments
உங்கள் சொத்துக்கள் பாதுகாக்கப்படும்
Protect all your assets (House, Car, RRSP, RESP)
மாதாந்த ரீதியில் எல்லாக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors
வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions with out bankruptcy
வங்குரோத்து சட்டங்களில் மாற்றங்கள். மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்.
NEW Changes from Bankruptcy Act. Call me for Details.
Suren Sornalingam
Certified Insolvency Counsellor
DSC DEBT SOLUTION CANADA
55 Town Centre Court, Suite 700,
Scarborough, ON
M1P 4X4
Tel: 647-274-2832
Fax: 647-794-1991
web: www.debtsolutioncanada.ca


அகரம்
Akaram
வரைகலை வடிவமைப்பு ஆலோசகர்
Graphic Design Consultant
தங்களது அனைத்துவிதமான அச்சுக்கலை வடிவமைத்தல்
(Business Cards, Flyers, Posters, Logo, Banner
Advertisement Designing & Much More)...
இலட்சிணை வடிவமைப்பு (Logo Design)
இவற்றிற்கான ஆலோசனைகளையும்,
தொடர்புகளையும் பெற்றுக்கொள்ள
அழையுங்கள் (Call):
437.345.4203


Nickon
Photo & Video
Digital Album
நிக்கொன்
போட்டோ & வீடியோ
டிஜிட்டல் அல்பம்
உங்கள் குடும்ப மற்றும்
சமூக நிகழ்வுகளை நினைவில்
நிறுத்தி, நிழற்படமாக்கிட...
Call: Vijay
416.554.8899
Facebook ID:
Nickon Studio

# HUNGER STRIKE FOR THILEEPAN 2022



# தியாகி திலீபனின்
# 35ஆம் ஆண்டு நினைவாக




இராசையா பார்த்தீபன்
27.11.1963–26.09.1987
ஊரெழு – தமிழீழம்

# உணவுக்கொடை

தியாக தீபம் திலீபன் அவர்கள் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தன்னை உருக்கி 12 நாட்களாக ஒரு சொட்டு நீரோ, ஒரு சொட்டு உணவோ இன்றி ஐந்து அம்சக் கோரிக்கைளை முன் நிறுத்தி தமிழர்களுக்காக தன்னை தியாகியாக்கியதன் நினைவாக கனடா உணவு வங்கிக்கு தாராளமாக உலர் உணவுகள் வழங்கி உதவுமாறு, குறிப்பாக முதியவர்கள் பயன்படுத்தும் டயப்பர்கள்(Diapers ) போன்ற அத்தாயாவசியப் பொருட்களையும் உணவு வங்கி வரவேற்கிறது. தாராள மனத்துடன் போராட்ட காலத்தில் இருந்து இன்றுவரை உதவுவது போன்று உதவுமாறு வர்த்தக பெருமக்களையும், தனவந்தர்களையும், பொதுமக்களையும் உரிமையோடு நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் வேண்டி நிற்கின்றது.

**Contact: 647-262-5587 647-783-3466 613-854-3336**

நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்



# தமிழீழ உட்கட்டுமானம்

## STRUCTURES OF THAMILEELAM



**சுயநிறைவான தன்னில்தானே தங்கிநிற்கும் பொருளாதார வாழ்வுடைய சமூகமாக எமது சமூகம் உருவாகவேண்டும் என்பதே, எனது விரும்பம்: மக்கள் தம்மைத்தாமே ஆளும் உரியையுடைய சனநாயக ஆட்சி முறையையே நான் விரும்புகின்றேன். இந்தப் புதிய சமூகத்தில், உழைக்கும் மக்கள் மத்தியில் பொருளாதார சமத்துவம் நிலவ வேண்டும்.**

**தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு. திரு. வே. பிரபாகரன் அவர்கள்**

**தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன வெளியீடு**

## நீர் வழங்கலும் வடிகாலும்

### *பகுதி 1*

**சிபார்சு**

ஆகவே மேலே தரப்பட்டுள்ள நீர் வளத்தை விருத் தி செய்கின்ற திட் டங்களை அமுல் படுத்த வேண் டும். சரியான ஒரு நீர்வளக் கணிப் பீடு நடாத்தப்பட வேண்டும். மேலும் போதிய நன்னீர் குடாநாட் டில் கிடைக்காத பட்சத்தில் குடா நாட்டுக்கு வெளியே இருந்து அமுக்க குழாய் மூலம் கொண் டுவர வேண்டும்.

2.5 மன்னார்:

நீண்டகாலமாக மன்னார் மாவட்டத்தில் நீரியல், புவியியல் சரியான முறையில் அறியாதபடியினால் வண்டல் மண்ணிற்கு அடியிலிருக்கும் நன்னீரின் அளவைக் கணக்கிடமுடியவில்லை. இதை ஆராய்ச்சி செய்வதற்கு போதிய நிதிவளமின்மையே இதன் காரணமாகும்.

இங்கு 1950ம் ஆண்டு ஒரு சிறிய நீர் விநியோகத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. 150 ஏக்கர் விஸ்தீரணமுள்ள தோட்டக்காடு என்னும் இடத்திலிருந்து நீர் பெறப்பட்டது. குடிசனப்பெருக்கமும், வரட்சியின் காரணமாகவும் தேவையான நீரைப் பெற்றக்கொள்ளமுடியவில்லை. 1970ம் ஆண்டு டாக்டர் ராகவராவி என்னும் நீரியில் புவியியல் நிபுணர் (உலக ஸ்தாபனம்) மன்னாரில் ஆய்வுகள் நடத்தி மன்னார் நகரிலிருந்து எட்டு மைல் அப்பால் உள்ள முருங்கன் என்னும் இடத்தில் போதிய அளவு நிலக்கீழ் நீர் இருப்பதைக் கண்டறிந்தார். மூன்று குழாய்க்கிணறுகளிலிருந்து நாளொன்றிற்கு 80 ஆயிரம் கலன் நீர் பெறமுடியும் என்பதைச் சிபார்சு செய்தார். 1984ம் ஆண்டு மன்னார் மக்களின் குடிநீர்த் தேவையை அறிந்து ஒரு பாரிய நீர்விநிநோகத்திட்டத்தை அன்பளிப்புச் செய்ய முன்வந்து, இதன் பயனாக 1990ல் விஸ்தீரணமாகவும், விரைவாகவும், மன்னர் பட்டணத்திலும், வங்காலை, அடம்பன் பகுதிகளிலும் ஒரு நீர் வழங்கல் திட்டம் வடிவமைப்பும் நிர்மாணமும் செய்து முடிக்கப்பட்டது.

முருங்கனில் மூன்று குழாய்க்கிணறுகள் அடிக்கப்பட்டு நீர் பெறப்பட்டது. மின்சாரம் இல்லாதபடியால் பாரிய இரண்டு டீசல் மின்பிறப்பாக்கிகள் பொருத்தப்பட்டது.

அடம்பன், வங்காலை ஆகிய இடங்களில் நீர்த்தாங்கிகளும், நீர்த்தேக்கங்களும் அழடக்கப்பட்டன. தற்போது உள்ள நாட்டின் நிலை காரணமாக உபகரணங்கள் அகற்றப்பட்டு நீர்த்தாங்கிகளும் உடைந்த நிலையில் காணப்படுகின்றன. நீர்க்குழாய்களும் அதிகளவில் அகற்றப்பட்டதாக அறிய வருகின்றது. இது மீண்டும் செயற்படுவதற்கு பாரிய அளவில் புனரமைப்புச் செய்ய வேண்டும்.

தற்பொழுது மன்னார் நகரத்திற்கு முன்னர்போல் சுமார் 30,000 கலன் நீர் மட்டுமே தோட்டக்காட்டிலிருந்து விநியோகிக்கப்படுகின்றது.

மேலும் விடத்தல் தீவு, திருக்கேதீஸ்வரம், எருக்கலம்பிடடியிலுள்ள நீர் விநிநோகத்திட்டங்களும் கைவிடப்பட்ட நிலையில் உள்ளன.

முழு அளவில் மன்னார் அபிவிருத்தியடைந்தால் மேலதிக நீர்வளம் தேவை. ஆகவே மேலும் ஆய்வுகளை மேற்கொண்டு புதிய நீர்த்தேக்கங்களைக் கண்டுபிடிக்க நேரிடும்.

2.6 திருகோணமலை:

இப்பிரதேசமும் ஒருவகைக் களிமண்ணும் பெருமணலும் கலந்த ஒருவகை மண்ணினால் ஆக்கப்பட்டிருக்கின்றது. இந்த மண்ணின் ஊடாக நீர் புதல் கடினம். ஆகவே இப்பிரதேசத்தின் நிலநீரைப்பெறும் வாய்ப்புகள் இல்லை. இதைக் கருத்தில் கொண்டு 1980ம் அண்டளவில் பிரான்ஸ் நாட்டின் உதவியுடன் ஓர் பாரிய நீர்விநியோகத்திட்டம் நிர்மாணிக்கப்பட்டது. இத்திட்டத்திற்குத் தேவையான நீர் 24 கிலோ மீற்றருக்கு அப்பாலுள்ள கந்தளாய்க் குளத்திலிருந்து பெறப்படுகின்றது. நிலமேல் நீர் ஆனதால் இதற்கு சகலவிதமான சுத்திகரிப்பு வேலைகளும் மேற்கொள்ளப்படுகின்றது. இத்திட்டம் தற்போதைய நீர்த்தேவையை முழு அளவில் பூர்த்தி செய்யக்கூடியதாக இருக்கின்றது. மேலும் இத்திட்டம் எதிர்வரும் முப்பது வருடங்களுக்குப் போதுமான நீரை விநியோகிக்கக் கூடியதாக நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றது.

திருகோணமலை தமிழீழத்தின் தலைநகரமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கின்றபடியால் எதிர்கால வளர்ச்சியினால் நீரின் தேவைகள் அதிகரித்தாலும் தற்போதைய திட்டத்திற்கு சில மாற்றங்கள் செய்து தேவையான நீரை முழு அளவில் பெற்றுக்கொள்ளலாம்.

2.7 மட்டக்களப்பு:

இப்பிரதேசம் மணற்பாங்காகவே காணப்படுகின்றது. ஆகவே நிலக்கீழ் நீர் பெறக்கூடியதாகவே இருக்கின்றது. கடல் அண்மித்து இருப்பதால் பொதுவாகக் கிணறுகளில் உப்புத்தன்மை கூடுதலாகக் காணப்படுகின்றது. சில கிணறுகளில் இரும்பு, உலோகம் கூடுதலாகக் காணப்படுகின்றது. தற்போது மட்டக்களப்பு நகரத்துக்கு நாளாந்தம் 25,000 கலன் நீர் விநியோகிக்கக் கூடிய ஒரு திட்டம் நீ.வ.வ.ஆ.சபையால் அமைக்கப்பட்டுள்ளது. இதற்குக் கல்லடியிலுள்ள கூட்டமான கிணறுகளிலிருந்து நீர் பெறப்படுகின்றது.

மட்டக்களப்பு, கிழக்கு மாகாணத்திற்கு நிர்வாக மையமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதால் இங்கு மேலும் நீர்த் தேவைகள் அதிகரிக்கலாம். ஆய்வுகளின் மூலம் கல்லடியிலிருந்து மேலதிகமாக நீரைப் பெறமுடியும் என்று தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச்சபையால் தீர்மானிக்கப்பட்டது. மேலதிக கிணறுகளை கல்லடியில் அமைப்பதன் மூலம் நீரைப் பெற்றுக்கொள்ளலாம்.

தமிழீழத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட இருபது நகரங்களின் நன்னீர்த்தேவைகளும், சிபார்சுகளும், நீர்வழங்கலும் வடிகாலும் பகுதி 11 இல் விபரிக்கப்பட்டுள்ளது.

**நீர் நீர் வழங்கலும் வடிகாலும்**

1.0தமிழீழத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட இருபது பட்டினங்களின் நன்னீர்த் தேவைகளும் சிபார்சுகளும்:

தமிழீழம் வரட்சி வலயத்தில் அமைந்துள்ளதால் சாதாரண பொது மக்களுக்குக் குடிநீர் நாளொன்றிற்கு ஒருவருக்கு ஐந்து கலன் மட்டுமே வழங்கப்படும். மற்றும் வைத்தியசாலைகள், காரியாலயங்கள், விடுதிகள் ஆகியவற்றிற்கு முழு அளவில் நீர் வழங்கப்படும். மற்றும் கைத்தொழில் பேட்டைகளில் தொழிற்சாலைகளில் வேலை செய்வோருக்கு குடிநீர் மட்டுமே (நாளொன்றிற்கு ஒருவருக்கு ஒரு கலன்) வழங்கப்படும்.

பாரிய நீரில் தங்கியிருக்கும் தொழிற்சாலைகள் இன்னும் எவையென்று இனம் காணாததால் இவ்வறிக்கையில் அவைகளின் நீர்த் தேவைகள் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

பாரிய உற்பத்தித் தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும் நீரின் கோட்பாடுகளும் குடிநீரின் கோட்பாடுகளும் ஒன்றுக்கொன்று வித்தியாசமானவை. குடிநீருக்கும் வேண்டிய சுத்திகரிப்பு வேலைகள் தொழிற்சாலையில் பாவிக்கப்படும் நீருக்குத் தேவையில்லை. ஆகவே தொழிற்சாலையினது நீர்த்தேவை இரண்டாம் கட்டமாக ஆராயப்படும்.

இருபது நகரங்களும் ஆராயப்பட்டு அவற்றின் குடிநீர்த் தேவைகள் பின்வருமாறு:

1.1. நல்லூர்:

நல்லூர் பிரதேசத்தின் பட்டினமாக யாழ்ப்பாணம் தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளது. இது கூடிய சனத் தொகை கொண்ட ஒரு நிலப்பரப்பு. ஏறக்குறைய மூன்று இலட்சம் மக்கள் இப்பிரதேசத்தில் வாழ்கின்றார்கள். இங்கு நீர்வளம் நிலத்தின் கீழ் உள்ள நீர் மட்டுமே. இந்நீர் கூடிய உவர்த்தன்மை உடையதாக இருக்கின்றது. ஏற்கனவே இப்பகுதியில் பதினைந்து நீர் விநியோகத்திட்டங்கள் இருக்கின்றன. இவை ஏறக்குறைய 75,000 மக்களுக்கு குடிநீர் வசதி அளிக்கின்றது. இத்திட்டங்கள் யாழ் மாநகர சபை, நீர்வழங்கல் சபை, உள்ளூராட்சி மன்றம் முதலியவற்றினால் செயற்படுத்தப்படுகின்றது.

இவ்விநியோகத்தின் பெரும்பகுதி யாழ் மாநகர சபையால் திருநெல்வேலி, கோண்டாவில் முதலிய இடங்களில் அமைந்துள்ள கிணறுகளில் இருந்து செயற்படுத்தப்படுகின்றது. இவ்விரண்டு கிணறுகளும் அதன் முழுக்கொள் அளவையும் பயன்படுத்துவதால் மேலும் விஸ்தரிக்க முடியாது. தற்பொழுது மேலதிகமாக நாளாந்தம் 100,000 கலன் நீரை நிலாவரையிலிருந்து எடுப்பதற்கான ஒரு திட்டம் உண்டு. யாழ் நகரத்தில் உட்படுத்தப்படும் அமைப்புகளும் அவற்றிற்குத் தேவையான குடிநீரும் கீழ்வரும் தரவுகள் தெரிவிக்கின்றன.

| | எண்ணிக்கை | தேவையான - நீர் நாளாந்தம் (கலன்) |
|---|---|---|
| 1.பிரதேசச் செயலகம் | 1 | 10,000 |
| 2.வேறு காரியாலயங்கள் | 50 | 20,000 |
| 3.போதனா வைத்தியசாலை (ஆயிரம் படுக்கைகள்) | 1 | 100,000 |
| 4.தனியார் வைத்திய நிலையங்களும் மருந்தகங்களும் | 20 | 50,000 |
| 5.பாடசாலைகள் | 20 | 50,000 |
| 6.கடைகள் | 300 | 30,000 |
| 7.உணவகம் | 20 | 20,000 |
| 8.உணவு விடுதி | 5 | 50,000 |
| 9.திரை அரங்குகள் | 10 | 10,000 |
| 10.கைத்தொழிற்பேட்டைகள் | 5 | 10,000 |
| | மொத்தம் | 350,000 |

நாளொன்றுக்கு சுமார் 350,000 கலன் நீர் தேவை. முதற்கட்டமாக நகரப் பகுதியிலுள்ள மக்களுக்கு மட்டும் குடிநீர் விநியோகிக்கலாம். நகரப் பகுதியில் வாழும் மக்களின் தொகை 100,000 ஆக இருந்தால் அவர்களின் குடிநீர்த் தேவை நாளாந்தம் 500,000 ஆகும். இப்பிரதேசத்தில் மேற் குறிப்பிட்ட தேவையைப் பூர்த்தி செய்ய பருத்தித்துறை நீர்வளத்திலிருந்து குடிநீரைப் பெற்றுக் கொள்ளலாம்.

1.2.வறணி:

இப்பிரதேசத்தில் பிரதான நகரமாக கொடிகாமம் தேர்ந்தெடுக்கப்பட்டது. இப்பிரதேசம் பருத்தித்துறை, சாவகச்சேரி பட்டினங்களை உள்ளடக்கும். இப்பிரதேசத்தில் சனத்தொகை ஏறக்குறைய 200,000 ஆகும். இப்பிரதேசத்தில் கரவெட்டி, பொலிகண்டி, வல்வெட்டித்துறை முதலிய இடங்களில் நீர் விநியோகத் திட்டங்கள் இருக்கின்றன. சுமார் 20,000 மக்களுக்கு குடிநீர் வசதி அளிக்கப்படுகின்றது.

மேலும் பருத்தித்துறை, சாவகச்சேரி நகரப்பகுதிகளில் இரண்டு நீர் விநியோகத் திட்டங்கள் திட்டமிடப்பட்டு 60 வீதம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இவ்விரு திட்டங்களில் இருந்தும் 450,000 கலன் நீர் விநியோகிக்கலாம். தற்பொழுது கொடிகாமம் பகுதியில் குடிநீருக்கு அவ்வளவு தட்டுப்பாடு இல்லை. கொடிகாமம் நகரத் தொடர்புகள் ஸ்தாபிக்கப்பட்டால்




கீழ்வரும் குடிநீர்த் தேவைகள் உண்டாகும்.

எண்ணிக்கை - தேவையான நீர் நாளாந்தம் (கலன்)

| | | |
|---|---|---|
| 1. பிரதேசச் செயலகம் | 1 | 5,000 |
| 2.ஏனைய காரியாலயங்கள் ஊழியர் விடுதிகளும் | 75 | 35,000 |
| 3.ஆதார வைத்தியசாலை | 1 | 50,000 |
| 4.தனியார் வைத்திய சாலையும் மருந்தகமும் | 10 | 20,000 |
| 5.பாடசாலைகள் | 10 | 20,000 |
| 6.வியாபார நிலையங்கள் | 100 | 10,000 |
| 7.உணவகங்கள் | 10 | 10,000 |
| 8.உணவு விடுதி | 2 | 20,000 |
| 9.திரை அரங்குகள் | 5 | 5,000 |
| 10.தொழிற்பேட்டைகள் | 5 | 10,000 |
| | | மொத்தம்185,000 |

சுமார் 200,000 கலன் நீர் நாளாந்தம் தேவை. நகர வாழ் மக்களின் எண்ணிக்கை 50,000 என அதிகரிக்கும் பட்சத்தில் இவர்களின் குடிநீர்த் தேவை நாளாந்தம் 250,000 கலன் ஆகும். கொடிகாமம் நகரின் முழுத்தேவை 450,000 கலன் ஆகும். இந்நீர் பருத்தித்துறையில் கண்டுபிடிக்கப்பட்ட நிலக்கீழ் நீர் தளத்திலிருந்து பெற்றுக்கொள்ளமுடியும். மேலும் சாவகச்சேரி நீர்விநியோகத்திட்ட பிரதான குழாய் கொடிகாமம் நகர் பகுதியினூடாகச் செல்வதால் இத்திட்டத்தை மேலும் விஸ்தரித்து கொடிகாம நகரின் நீர்த்தேவையைப் பூர்த்தி செய்யலாம்.

3.3. கிராஞ்சி:

இப்பிரதேசத்தின் பிரதான நகரம் கிளிநொச்சி ஆகும். தற்பொழுதும் இதுவே நகரமாக விளங்குகின்றது. இப்பிரதேசத்தில் பொறியில் பீடம், விவசாய பீடம், மீன்பிடித்தலும் கடல் வளமும் சம்பந்தமான பீடம் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளன. இப்பொழுது கிளிநொச்சியிலுள்ள சாதாரண மக்கள் குடிநீருக்கு அவ்வளவு ஆர்வம் காட்டவில்லை கிளிநொச்சி நகர் விருத்தி செய்ததன் பின்னர் பின்வரும் நீர்த்தேவைகள் உண்டாகும்.

எண்ணிக்கை - தேவையான நீர் நாளாந்தம் (கலன்)

| | | |
|---|---|---|
| 1.பிரதேசச் செயலகம் | 1 | 5,000 |
| 2.ஏனைய காரியாலயங்கள் விடுதிகளும் | 100 | 50,000 |
| 3.ஆதார வைத்தியசாலை | 1 | 50,000 |
| 4.தனியார் வைத்திய நிலையமும் மருந்தகமும் | 10 | 10,000 |
| 5.பாடசாலைகள் | 5 | 50,000 |
| 6.வியாபார நிலையங்கள் | 200 | 20,000 |
| 7.உணவகங்கள் | 2 | 10,000 |
| 8.உணவு விடுதி | 5 | 30,000 |
| 9.திரை அரங்குகள் | 5 | 5,000 |
| 10.கைத்தொழிற்பேட்டைகள் | 5 | 20,000 |
| | | மொத்தம் 205,000 |

விவசாயபீடத்திற்கு நாளாந்தம் 10,000 கலனும் பரந்தன் இரசாயனத் தொழிற்சாலைக்கு 25,000 கலனும் விநியோகிக்கப்படுவதற்கு ஏற்கனவே இணக்கம் காணப்பட்டது. கிளிநொச்சிப் பட்டினத்திற்கு அபிவிருத்தியால் சனத்தொகை 20,000 ஆக அதிகரிக்கும் போது நாளாந்தம் 100,000 கலன் ஆகும். ஆகவே களிநொச்சி நகரின் முழுக்குடிநீர்த் தேவை 425,000 கலன் நீர் ஆகும். ஏற்கனவே தேசிய நீர் வழங்கல் சபை நாளாந்தம் 450,000 கலன் நீர்வழங்கல் பற்றிய திட்டம் ஒன்றை நிர்மாணித்திருக்கின்றது. ஆகவே இத்திட்டம் நகரத்தொடர்பு நீர்த்தேவையைப் பூர்த்தி செய்யும். எப்படியாயினும் பொறியியல்பீடம் கடல்வளம் சம்பந்தமான பீடமும் தங்களுடைய நீர்த்தேவையைப் பூர்த்தி செய்யவேண்டும். இப்பிடங்கள் தமக்குத் தேவையான நீரைக் குழாய்க்கிணறுகள் நீர்மாணித்து நிலக்கீழ் நீராகப் பெற்றுக்கொள்ளலாம். கிளிநொச்சியில் பாரிய தொழிற்சாலைகள் அமைக்கத் திட்டமிட்டிருப்பதால் இவற்றிற்குத் தேவையான நீரை இரண்டாம் கட்டமாக விநியோகிக்கலாம். ஆனால் இவற்றிற்குத் தேவையான நீரைப் பெறுவதற்கு ஆய்வுகள் நடாத்தப்பட்ட வேண்டும்.

3.4.பூநகரி:

பூநகரி நகரத் தொடர்பு கிளிநொச்சி போன்று பெரிதாக இருக்கமாட்டாது. இப்பிரதேசம் விவசாயமும் கடற்தொழிலும் உடைய பகுதியாக விளங்கும். இது பிரயாணிகள் போக்குவரத்து மையமாகவும் பாவிக்கப்படும். இந்நகர். அபிவிருத்திக்குப்பின் பின்வரும் நீர்த்தேவைகள் உண்டாகும்.

எண்ணிக்கை - தேவையான நீர் நாளாந்தம் (கலன்)

| | | |
|---|---|---|
| 1.பிரதேசச் செயலகம் | 1 | 4,000 |
| 2.ஏனைய காரியாலயங்கள் விடுதிகளும் | 30 | 10,000 |
| 3.வைத்தியசாலை | 1 | 12,000 |
| 4.தனியார் வைத்தியசாலையும் மருந்தகமும் | 03 | 3,000 |
| 5.பாடசாலைகள் | 03 | 3,000 |
| 6.வியாபார நிலையங்கள் | 06 | 5,000 |
| 7.உணவகங்கள் | 10 | 5,000 |
| 8.திரை அரங்குகள் | 3 | 2,000 |
| 9.கைத்தொழிற்பேட்டைகள் | 5 | 20,000 |
| 10.பயணிகள் தொடர்பகங்கள் | 01 | 3,000 |
| | | மொத்தம் 52,000 |

நகர வாழ் மக்களின் எண்ணிக்கை 5,000 எனக் கொண்டால் அவர்களுக்கு நாளாந்தம் 25,000 கலன் குடிநீர் தேவை. ஆகவே மொத்தமாக நாளாந்தம் 75,000 கலன் நீர் தேவை.

பூநகரிப்பகுதி கடலால் சூழப்பட்டுள்ளதால் நீர் உவர்த்தன்மையாக இருக்கின்றது. மழை நீர் சுலபமாக கடலுக்குள் வடிகின்றது. இப்பிரதேசத்தில் ஒரு நீர் விநியோகத்திட்டம் அமைப்பது கடினம் என்றாலும் ஆழமில்லாத கூட்டமான கிணறுகள் அமைத்து மேற்கூறிய நீரைப்பெற்றுக் கொள்ளலாம். எனினும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

தொடரும்...

விளம்பரம்
என்பது
உங்கள்
வணிகத்தின்
ஒரு முதலீடு
தொடர்புகளுக்கு
437.345.4203


19.09.2022
திங்கள்
14:00 - 18:00 மணி
UNO - Geneva
ஈகைப்பேரொளி முருகதாசன் திடல்
தமிழின அழிப்பிற்கு
நீதிகேட்டு ஐ.நா முன்றலில்
கவனயீர்ப்புப்
போராட்டம்
JUSTICE FOR TAMILS GENOCIDE
BY SRI LANKAN STATE!
International Independent Investigation
UN Referendum for Tamil Eelam
FREE TAMIL Eelam
சுவிஸ் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
078 965 09 18, 079 711 30 97, 079 549 89 21
STCC
ஏனைய ஐரோப்பிய நாட்டு மக்கள் உங்கள்
பகுதி செயற்பாட்டாளர்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்.
மக்கள் புரட்சி வெடிக்கட்டும்
சுதந்திர தமிழீழம் மலரட்டும்
காலத்தின் தேவை இது - கலங்கிக்கிடக்கும் தமிழர் அல்ல நாம் - கைகோர்த்து நீதிகேட்போம் வாரீர்...


தமிழின அழிப்புக்கு நீதி கேட்டு ஐ.நா. முன்றலில்
கவனயீர்ப்புப் போராட்டம்
19-09-2022 திங்கள் 14:00 - 18:00 மணி
ஈகைப்பேரொளி முருகதாசன் திடல்
UNO - Geneva
CCTF
பாரிசு லாச்சப்பல் பகுதியிலிருந்து காலை 06:00 மணிக்கு
பேருந்து புறப்படும்.
நாம் உறுதியுடன் தொடர்ந்து போராடுவோம்.எமது தாயக பூமியை எதிரியிடமிருந்து
மீட்டெடுத்து சுதந்திர தமிழீழம் அமைக்கும் வரை நாம் தொடர்ந்து போரடுவோம்.
-தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே.பிரபாகரன்
காலத்தின் தேவையறிந்து ஒருமித்த குரலாய், ஓரணியாய் ஓங்கிக் குரல் கொடுப்போம் வாரீர்..!
தொடர்புகளுக்கு :
தமிழீழ மக்கள் பேரவை -பிரான்சு
06 52 72 58 67 - 06 62 84 66 06
Maison du Tamil Eelam
மேலதிக தொடர்புகளுக்கு :
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு-பிரான்சு
01 48 22 01 75

# குரல் எடுத்ததோர் குயில் படுத்தது குமுறி நின்றதோர் புயல் படுத்தது

குரல் எடுத்ததோர் குயில் படுத்தது
குமுறி நின்றதோர் புயல் படுத்தது
தர மறுத்திடும் உரிமை பெற்றிட
தன் வயிற்றிலே போர் தொடுத்தது
உரம் எழுந்தினித் தடையுடடைக்குமாம்
உயிர் பிரியமுன் இது நடக்குமாம்
வர மறுப்பவர் வநகை கூடுமாம்
வலை விரித்தவர் படைகள் ஓடுமாம்
நெஞ்சிலாடிடும் கனவு மாழுமாம்
நினைவிழந்திடும் பிஞ்சு வீழுமாம்
அஞ்சி வாழ்ந்தவர் அரசிலோறவாம்
அனலிலாடிய வேங்கை சாகவாம்
நஞ்சு தின்றிட அஞ்சிடாதவன்
நல்லை வீதியில் பாடை ஏறவாம்
வஞ்சி பெற்றவர் வந்து பாரடா
வாடமுன்னொரு சேதி கூறடா
மலர் வாடுகின்றதே
இதய நாடடிகள் ஒடுங்குகின்றதே
தங்க மேனியைச் சாவு தின்னுதே
தணலிலாடிய மேனி வேகுதே
பொங்கி நின்றவன் பேச்சடங்குதே
பொழுது சாயுதே! பொழுது சாயுதே
வந்து பாரடா வாடமுன்னொரு
சேதி கூறடா
பரிசு கொண்டொரு பறவை வந்திடும்
பால் அளித்திடும் என்று நம்பிட
அரிசி கொண்டொரு படகு வந்தது!
அதைத்தொடர்ந்து செஞ்சிலுவை வந்தது
வரிசை வரிசையாக் கவசவாகனம்
வந்து வந்தெமை நிறுவை பார்த்தது
படகு வந்து வாய்க்கரிசி போட்டது
சிலுவை வந்தெமை உருசை பார்த்தது






சுற்றி வர நின்று
சுடின்றடித்த புயற்காற்று
பற்றி எரிகின்ற
பசி வயிற்றேடிருக்கிறது
பேரிடியோடிங்கு
பொழிந்த மழைமேகம்
நீரெதுவும் இன்றி
நினைவிழந்து கிடக்கிறது
உண்ணாமல் இங்கோர்
உரிமைப் போர் நிகழ்கிறது
கண்முடப் போகின்ற
கற்பூரம் எரிகிறது
தேரோடுகின்ற
தெருவினிலே புலியொன்
போராடிக்கிடக்கிறது
புனிதப் போர் நிகழ்கிறது
குண்ட பட்ட குடலோடு
குரல் வைத்த குயிலொன்று
இன்று பட்டுப் போகிறது
இளவயதில் முடிகிறது
வாசமலரொன்று
வாழடிக்கிடக்கிறது
பேசமுடியாது
பேச்சிழந்து போகிறது
விண்ணிருந்து பார்ப்பேன்
விடுதலையை என்றமகன்
கண்ணெதிரே இந்தக்
கட்டிலிலே முடிகின்றன்
பத்தோடு ஒன்ற இவன்
பாடையிலே போவதற்கு
சொத்தல்லோ எங்கள்
சுகமல்லோ
விடதலைக்கு வித்திட்டு நின்ற
வீரமகனல்லோ
துப்பாக்கியோடு
சுழன்றடித்த புயலல்லோ
எப்போதும் உங்களுக்காய்
எரிந்த விளக்கல்லோ
இந்தப் புலி முடிந்தால்
இன்னெரு புலி வந்து
சந்தோசத்தோடு சாகும்
இது தொடரும்
கட்டுவனிற் சாகாத
கரும்புலிகள் நல்லூரில்
பட்டினியாற் சாவதுவாம்
பார்த்துக்கொண்டிருப்பதுவாம்
வல்வையிலே சாகாத
வரிப்புலிகள் பட்டினியால்
நல்லையிலே சாவதுவா
நாம் பார்த்திருப்பதுவா
பாலோடு வீரம்
பாய முலை தந்த
தாய்மாரே இவனைச்
சாகவிடப் போறீரா
தாலாட்டுப் பாட்டில்
தமிழ் தந்த தாய்க்குலமே
போராட்டவீரன்
போய் முடியப் போகின்றான்
இந்தத் திலீபன்
இறப்பதற்கு முன்னாலே
சந்தோசச் செய்தி அவன்
சாவை நிறுத்தட்டும்
கண்ணி வெடிவைத்த
கைசோர முன்பாக
உண்மையிலே நிங்கள்
ஒன்றாகி விட்ட சேதி
செத்துக் கொண்டிருக்கின்ற
செவிகட்குக் கேட்கட்டும்
வண்ணமயில் இங்கே
வலியிழக்க முன்பாக
சென்னையிலே இந்தச்
சேதி பரவட்டும்
மேடையிலே நின்று
முழக்கமிட்ட தளபதிக்கு
பாடையொன்று அங்கே
பண்ணிவைக்கமாட்டாரோ
வாக்கெடுக்க இங்கே
வரவிருக்கும் தளபதியைத்
தூக்கிலிட யாநம்
துடித்தெழும்ப மாட்டாரோ
போராடி இங்கே
புலிவீரர் சாகையிலே
காரோடிக் கொண்டிருந்தோர்
களப்பலிகளாகாரோ
நாளை புயலெழும்பும்
நல்லூரின் வீதியுடன்
நீளக்கிடக்கின்ற
நிலமெல்லாம் கடலடிக்கும்
நிம்மதியாய்த் தூங்கு
நிலம் வெடிக்கப் போகிறது
சம்மதிக்க மாட்டோம்
சாகவிடமாட்டோம்
புலி வீரன் சாவதற்கு
போர்க்களமே நல்ல இடம்
பலியெடுப்போம் வருகிற
படைகளையும் நாமடிப்போம்
நிம்மதியாய்த் தூங்கு
நிலம் வெடிக்கப் போகிறது!

-புதுவை இரத்தின துரை,
தமிழீழம்

# 35ஆம் ஆண்டு வீரவணக்கம்

## 35th Year Veeravanakkam





**கேணல் சங்கர்**

**வைத்தியலிங்கம் சொர்ணலிங்கம்**

வல்வெட்டித்துறை, யாழ்ப்பாணம்

18.09.1949 - 26.09.2001

### ஐந்து அம்ச கோரிக்கைகள்:-

1. பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் இன்னும் தடுப்புக் காவலில் அல்லது சிறைகளில் இருப்போர் விடுதலை செய்யப்பட வேண்டும்.
2. புனர்வாழ்வு என்ற பெயரில் தமிழர் தாயகத்தில் நடத்தப்படும் சிங்களக்குடியேற்றங்கள் உடனடியாக நிறுத்தப்பட வேணடும்.
3. இடைக்கால அரசு நிறுவப்படும் வரை புனர்வாழ்வு என்று அழைக்கப்படும் சகல வேலைகளும் நிறுத்தப்பட வேண்டும்.
4. வடக்கு கிழக்கு மாகாணத்தில் பொலிஸ் நிலையங்கள் திறக்கப்படுவது உடன் நிறுத்தப்பட வேண்டும்.
5. இந்திய அமைதிப் படையின் மேற்பார்-வையில் ஊர்காவல் படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் திரும்பப் பெறப்படுவதோடு தமிழ் கிராமங்களிலும், பள்ளிக்கூடங்களிலும் குடியிருக்கும் இராணுவம், பொலிஸ் வெளியேற வேண்டும்.

SEPT 26

**"மக்கள் புரட்சி வெடிக்கட்டும் சுதந்திர தமிழீழம் மலரட்டும்"**



ஈகைச்சுடர்

Thileepan

# லெப். கேணல் திலீபன்

## இராசையா பார்த்தீபன்

ஊரெழு, யாழ்ப்பாணம்

27.11.1963-26.09.1987

இந்திய அரசிடம்
5 அம்சக்கோரிக்கைகளை முன்வைத்து
15.09.1987 தொடக்கம் 26.09.1987 வரை
12 நாட்கள் நீராகாரம் அருந்தாமல்
உணவு தவிர்ப்பு போராட்டம் நடத்தி
ஈகைச்சாவை தழுவிக்கொண்டார்

### Demand as follows:-

1. All Tamils detained under the Prevention of Terrorism Act should be released.
2. The colonization by Sinhalese in Tamil areas under the guise of rehabilitation should be stopped.
3. All such rehabilitation should be stopped until an interim government is formed
4. The Sri Lankan Government should stop opening new Police Stations in the Northeastern Province.
5. The Sri Lanka Army and Police should withdraw from schools in Tamil Villages & the weapons given by the the Indian Government to 'Home Guards' should be withdrawn

## தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்

## The thirst of the Tamils is the Homeland of Tamileelam

சங்கத்தமிழ்